பக்கங்கள்:20 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 05 ஞாயிற்றுக்கிழமை 19.06.2022 கதிர் 226

**இது ரகசியம் அல்ல!**

ஆட்டையைப்போடுவதுதான் அரசியல் என்றாகிவிட்டது நமது சில பிரகிருதிகளுக்கு.

பொது மக்களுக்கு வழுங்க வென யாழ் செயலகத்துக்கு யாரோ கொடுத்த நிவாரண பொதிகளை ஆட்டையைப் போட்டு, அவற்றை தானே பக்கம்02

# பொதுமக்களின் வாழ்வே போராட்டமாகிவிட்டது அதனால்தான் 'கோட்டா கோ கம'வில் தொய்வு!

## நேற்று யாழ்ப்பாணத்தில் அவர்கள் விளக்கம்




(கலையமுதன்)

யாழ்ப்பாணம், ஜூன் 19

நாட்டில் பொருளாதார பிரச்சினையும் வாழ்வாதாரத்துக்கான தேவைகருதிய போராட்டங்களும் இடம்பெற்று வருவதால் 'கோட்டா கோ கம' போராட்டம் தொய்வடைந்து காணப்படுகிறது. ஆனாலும் கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகும் வரை எமது போராட்டம் ஓயாது என கோட்டா கோ கம போராட்டகாரர்கள் தெரிவித்தனர்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேய அவர்கள் இதனைத் தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில் –

கோட்டாகம நூலகத்தில் இருந்து 20

# 30 வருட யுத்தத்தால் வந்த வினையே இது!

## தலைவர் சம்பந்தன் திட்டவட்டமாகத் தெரிவிப்பு இனப்பிரச்சினை தீர்வில்தான் இதற்கும் தீர்வாம்



கொழும்பு, ஜூன் 19

"தேசிய இனப்பிரச்சினைக்கு ஒரு சுமூகத் தீர்வு காணாமல், முப்பது வருடங்களாக யுத்தம் நடத்துவதற்குக் கண்மூடித்தனமாக வெளிநாடுகளிடம் கடன் வாங்கியதன் விளைவுதான் இன்றைய பொருளாதார நெருக்கடி. தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதன் மூலமே பொருளாதார நெருக்கடிக்கான தீர்வை நோக்கி நகர முடியும்."

– இவ்வாறு திட்டவட்டமாகவும் தெளிவாகவும் தெரிவித்திருக்கிறார் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா சம்பந்தன். 2

## மாகாண,வலய மட்டங்களில் பாடசாலைகள் பற்றிய முடிவு

நாளை 20ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரையான காலப் பகுதியில் பாடசாலைகளில் கல்வி நடவடிக்கைகளை எவ்வாறு நடத்துவது என்பது குறித்து கல்வி அமைச்சு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

மேல்மாகாணத்தின் கொழும்பு வலயம் மற்றும் அண்மை நகரங்களில் உள்ள பாடசாலைகள், ஏனைய மாகாணங்களின் நான்கு பிரதான 20

## 'கோட்டா கோ கம'விலிருந்து யாழ். நூலகத்துக்கு நூல்கள்





(கலையமுதன்)

யாழ்ப்பாணம், ஜூன் 19

'கோட்டா கோ கம' நூலகத்தில் இருந்து யாழ்ப்பாண பொது சன நூலகத்திற்கு நேற்றைய தினம் நூல்கள் அன்பளிப்பு செய்யப்பட்டன.

யாழ் பொதுசன 20

## பலாலியில் இருந்து விமான சேவை முதலாம் திகதி ஆரம்பிக்க அனுமதி



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜூன் 19

பலாலி விமான நிலையம் வரும் முதலாம் திகதி தொடக்கம் இயங்க முடியும் என அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா நேற்று பலாலியில் வைத்துத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் விமான நிலையம் மற்றும் காங்கேசன்துறை துறைமுகம் ஊடான 2

## காங்கேசன் கப்பல் போக்குவரத்து இப்போதைக்குச் சாத்தியமில்லை!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜூன் 19

காங்கேசன்துறைதுறைமுகம் ஊடானபயணிகள்படகுச்சேவை உடனடியாகச் சாத்தியம் இல்லையென அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா பலாலியில் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் விமான நிலையம் மற்றும் காங்கேசன்துறை துறைமுகம் ஊடான கப்பல் போக்கு வரத்து ஆகியவற்றை ஆரம்பிப்பது தொடர்பான ஆய்வுக் கலந்துரையாடல் நேற்று மாலை பலாலி 2

## பொலிஸாரின் துப்பாக்கி தவறுதலாக இயங்கியதில் இளைஞர் ஒருவர் சாவு

சுற்றிவளைப்பு ஒன்றின் போது பொலிஸ் உத்தியோகத்தர் வசம் இருந்த துப்பாக்கி தவறுதலாக இயங்கியதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நெலுவ பொலிஸ் அதிகாரிகள் குழுவினால் இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பொலிஸ் உத்தியோகத்தரின் துப்பாக்கியை சந்தேகநபர் பறிக்க முயன்ற போது அது இயங்கியதில் துப்பாக்கியால் சுடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நெலுவ நகரப் பகுதியில் கைவிடப்பட்ட 20

## 5 வெளிநாட்டுத் துப்பாக்கிகள் வத்தளை வீட்டிலிருந்து மீட்பு!



இரண்டு மாடி வீடொன்றின் கூரையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த – வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட ஐந்து துப்பாக்கிகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

வத்தளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்குக் கிடைத்த தகவலின் பிரகாரம், மாபோல 20

# பொருளாதார மீட்சி நிலைமை இப்போதைக்கு வரவே வராது!

## மட்டக்களப்பில் சித்தார்த்தன் தெரிவிப்பு




மட்டக்களப்பு, ஜூன் 19

இன்று இலங்கையில் மட்டுமல்ல உலகம் முழுக்க இந்த பொருளாதார நெருக்கடி இருக்கிறது. இதற்கு முக்கிய காரணம் கொரோனா. இரண்டாவது ரஷ்ய – உக்ரேன் யுத்தம். ஆனால் இலங்கையைப் பொறுத்தமட்டில் இவை எல்லாவற்றையும் தாண்டிய நெருக்கடியொன்றை நாங்கள் முகம் கொடுக்கிறோம் என்றால் கோட்டாபய அரசின் 20

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்குபவர் போலக் காட்டுவது –

அரசு, பிற எல்லா மாவட்டங்களில் உள்ளோருக்கும் வழங்கும் உதவிகள், நிவாரணங்கள் போன்று தனது மாவட்டத்துக்கும் வழங்கும்போது, அவற்றைத் தானே பிரத்தியேகமாகப் பெற்றுத் தருபவர் போல காட்டுவது –

என்று மக்களை முட்டாளாக்கும் விதத்தில் அரசியலில் ஆட்டடையைப் போடுவதே நீண்ட தொடர்கதையாகி வருகின்றது நம் அமுல்பேபிக்கு. அந்த வரிசையில் நேற்று இது ஒன்று.

யாழ் மக்களை முட்டாள்கள் என்று எண்ணிக் கொண்டு அரசியல் பித்தலாட்டங்கள் செய்வோர் தாங்கள் முட்டாளாகிச் செல்லும் காலம் விரைவில் வரும் என்பதை மறந்து விடுகிறார்கள்.

பலாலி விமான நிலையம் மற்றும் காங்கேசன்துறை துறைமுகம் ஊடான பயணிகள் சேவைகளை ஆரம்பிக்க முடியுமா என்பது தொடர்பில் நேரில் ஆராய அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா நேற்று யாழ்ப்பாணம் வந்தார்.

இந்த விடயங்களை கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கிளப்பினார் என்பதும், அதனையொட்டித் தான் நேரில் வந்து காங்கேசன்துறையையும் பலாலியையும் பார்வையிடுவார் என அந்தக் கூட்டத்தில் வைத்தே அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா அறிவித்தார் என்பதும், வடக்கு மக்களுக்கு மிக நன்கு தெரிந்த விட யங்கள். அது பற்றிய செய்திகள் விவரமாக ஊடகங்களில் வெளிவந்திருந்தன.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முன்முயற்சியில் தான் இந்த விடயங்கள் முன்னெடுக்கப்படுகின்றன என்பதும், அதையொட்டித் தான் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா யாழ்ப்பாணம் வருகிறார் என்பது எல்லோருக்கும் தெரிந்த விவகாரங்கள்தான்.

அமைச்சரவையின் கோரிக்கையின் பெயரில் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா பலாலிக்கு வருகிறார், நீங்களும் வந்து கலந்து கொள்ளுங்கள் என சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் பணிப்பாளர் ஜீ.ஏ.சந்திரசிறி இந்தியத் தூதுவருக்கு கடிதமும் அனுப்பியிருந்தார்.

ஆக, அமைச்சர் டக்ளஸின் முன் முயற்சியில்தான் இவ்வளவும் நடக்கின்றன என்பது அப்பட்டமான உண்மை.

ஆனால், நேற்று ரயிலில் வந்த அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவிற்குப் பக்கத்தில் ரயில் ஆசனத்தில் போய்க் குந்தியிருந்தது ஒரு படத்தைப் பிடித்துத் தனது வழமையான ஆட்டையைப் போடும் அரசியலைச் செய்திருக்கிறார் நமது அமுல்பேபித் தம்பி.

அமைச்சர் டக்ளஸின் அழைப்பில்தான் – அமைச்சர் டக்ளஸ் முன்னெடுத்த முயற்சியின் பேரில்தான் – நிமால் சிறிபால டி சில்வா யாழ்ப்பாணம் வருகிறார் என்று எல்லோருக்கும் தெரியும். ஆனால் நமது அமுல்பேபி தம்முடைய அழைப்பில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா யாழ்பாணம் வருகிறார் என்று முகப்புத்தகத்தில் பதிவிட்டு, யாழ்ப்பாணத்தில் அமைச்சர் வந்து செல்லும் வரை வழமைபோல அவரோடு ஒட்டிக் கொண்டே நின்று படங்களுக்கும் போஸ் கொடுத்து நிகழ்ச்சி முழுவதும் தன்னுடையதாகக் காட்டும் விதத்தில் நிகழ்ச்சியை ஆட்டையைப் போட்டுக் கொண்டார்.

இப்படி அடுத்தவரின் வேலையைத் தன்னுடையதாகக் காட்டும் – ஆட்டையைப் போடும் – அரசியல் நீண்ட காலத்துக்குத் தாக்குப் பிடிக்காது. அது இப்போது யாழ்ப்பாண மக்களுக்கு நன்கு விளங்கி விட்டது.

கடந்த தடவை தேர்தலில் ஆட்டடையை போட்டமாதிரி இனிமேல் தேர்தல்களில் யாழ் மக்களின் வாக்குகளை ஆட்டையைப் போட முடியாது. ஏனென்றால் இவர்களின் ஆட்டையைப் போடும் அரசியல் மக்களுக்கு நன்கு அம்பலமாகிவிட்டது.

அமைச்சர் டக்ளஸின் முயற்சியைத் தன் முயற்சியாக ஆட்டையை போட முயற்சித்த அமுல் பேபி குறித்து பலரும் எள்ளி நகையாடியமையை நேற்று அறிய முடிந்தது.

– மின்னல் –

## 30 வருட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு ஊடகமொன்றுக்கு அளித்த தொலைக்காட்சிப் பேட்டியிலேயே அவர் இந்த விடயங்களைத் தெரிவித்திருக்கிறார். அந்தப் பேட்டியில் அவர் மேலும் கூறியவை வருமாறு:–

நாட்டினுடைய பொருளாதார நெருக்கடி சமீபகாலத்தில் ஆரம்பித்தது அல்ல. இந்த நெருக்கடி நீண்ட காலம் இருந்து வந்திருக்கிறது. இதற்கு முக்கியமான காரணம் தமிழ் தேசியஇ பிரச்சினைக்கு ஒரு நியாயமான, நீதியான, நிரந்தரமான தீர்வு காணப்படவில்லை என்பதுதான். அதன் விளைவாக ஓர் ஆயுதப்போராட்டம் 30 வருடங்களாக நடைபெற்றது. அந்த யுத்தத்தை நடத்துவதற்காக அரசாங்கம் பெருமளவு நிதியைச் செலவிட வேண்டியிருந்தது. அதற்காக வெளிநாடுகளிடம் இருந்து பெருமளவு கடன் பெற வேண்டிய தேவை எழுந்தது.

அதே சமயம் இந்த நாட்டின் மீது வெளிநாடுகள் நம்பிக்கை வைக்கவில்லை. அவர்கள் இங்கு முதலீடு செய்ய முன்வரவில்லை. தங்கள் சொந்த நாட்டினுடைய பிரச்சினையைத் தீர்க்காமல் யுத்தத்தை நடத்துகின்ற ஒரு நாடு மீது எவ்வாறு ஏனைய நாடுகள் நம்பிக்கை வைக்கும்?

அத்தகைய நாட்டில் முதலீடு செய்தால் தாங்கள் கடைசியில் நஷ்டம் அடைய வேண்டும் என்ற கருத்துப் பிற நாடுகளில் இருந்தது.

இந்தப் பொருளாதார நெருக்கடிக்கு முக்கிய காரணம் 30 வருடங்களாக நடைபெற்ற யுத்தம்தான்.

மேலும் லஞ்சம், ஊழல், குளறுபடிகள் இந்த நாட்டினுடைய பொருளாதாரத்தை மோசமாகப் பாதித்துள்ளன. அரசாங்கத்தினுடைய நிர்வாகத்தை சரியான, உரிய, தகுதியானவர்கள் நடத்தவில்லை.

குடும்ப ஆட்சி, கட்சிக்காரர்கள் நியமனம் என்று அரசாங்க நிர்வாகமே குளறுபடியாகவே நடைபெற்றுள்ளன. இப்படியான காரணங்களின் நிமித்தம் தான் நாட்டில் இத்தகைய மோசமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

நெருக்கடியைத் தீர்ப்பதற்கு முயற்சி எடுக்கின்றார்கள் என கூறுகிறார்கள். இந்த நெருக்கடியைத் தீர்ப்பது கஷ்டம்.

நெருக்கடியை தீர்ப்பதற்கு முன்னர் நாட்டிலுள்ள பிழைகள், குற்றங்கள் திருத்தி அமைக்கப்பட வேண்டும். தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும். வெளிநாடுகள். வெளிநாட்டு அமைப்புகள் இலங்கை மீது நம்பிக்கை வைக்க கூடிய சூழ்நிலை ஏற்படுத்தப்பட வேண்டும். திறமையானவர்கள், நிபுணர்கள் இங்கு விடயங்களை கையாள கூடிய நிலைமை ஏற்படுத்தப்பட வேண்டும்.

நாடுகள் உதவி செய்தால், அந்த உதவிகள் மூலம் இலங்கையில் ஒரு முன்னேற்றத்தைக் காண அவர்கள் விரும்புவார்கள். அவ்விதமான உதவிகள் செய்து, அவ்விதமான முன்னேற்றங்களை காணக்கூடிய நிலைமை இன்று நாட்டில் இல்லை. இன்றும் வெளிநாட்டவர்கள் இலங்கையை ஒரு சந்தேகக் கண்ணோடு தான் பார்க்கிறார்கள்.

ஆகவே இவர்கள் முதலில் தங்களுடைய நாட்டிலுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும். ஊழல், லஞ்சம், நெருங்கியவர்கள் – கட்சிக்காரர்களுக்கு இடம் அளித்தல் போன்றவற்றைத் தவிர்த்து நேர்மையான நிர்வாகக் கட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்த வேண்டும்.

தேசிய பிரச்சினைக்கு நியாயமான ஒரு தீர்வைக் காண வேண்டும். ஒருமித்த நாட்டுக்குள். அதிகப்படியான அதிகாரப் பரவலாக்கலுடன் தமிழ் மக்கள் சரித்திர ரீதியாக, நீண்டகாலமாக, தாங்கள் வாழ்ந்த இடங்களில் தங்களைத் தாங்களே நிர்வகிக்கக் கூடிய ஒரு கட்டமைப்பை ஏற்படுத்தித் தீர்வுகாண வேண்டும்.

இந்தப் பிரச்சினைகளைத் தீர்த்தால் தான் இப்போதைய பொருளாதார நெருக்கடிப் பிரச்சுனைகளுக்கும் தீர்வு காண முடியும். – என்றார்.

## பலாலியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பல் போக்கு வரத்து ஆகியவற்றை ஆரம்பிப்பது தொடர்பான ஆய்வுக் கலந்துரையாடல் நேற்று மாலை பலாலி விமான நிலையத்தில் இடம்பெற்றது.

விமானம் மற்றும் கப்பல் போக்குவரத்து அமைச்சரரான நிமால் சிறிபால டி சில்வா தலைமையில் இடம்பெற்ற இக் கூட்டத்தில் விமான நிலையத்தை எதிர்வரும் முதலாம் திகதி முதல் இயக்க நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் தெரிவித்த அதேநேரம், விமான நிலையத்தில் உள்ள மிகுதி அபிவிருத்திப் பணிகளிற்காக இந்தியா வழங்க இணக்கம் தெரிவித்த 30 கோடி இந்திய ரூபா நிதியையும் கடனாக இன்றி, நன்கொடையாக வழங்குமாறும் அமைச்சர் இந்தியத் துணைத் தூதுவரிடம் கோரிக்கை விடுத்தார்.

இதன்போது கருத்துரைத்த இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் முப்பது கோடி ரூபா நிதியை அன்பளிப்பாக வழங்குவது தொடர்பான கோரிக்கை கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவரின் மேலதிக நடவடிக்கையில் உள்ளது என்றார்.

அதே நேரம் முதலாம் திகதி சேவையை ஆரம்பிப்பதாயின் இலங்கை விமான சேவைகள் அதிகார சபை அதற்கான அனுமதிகளை விரைவாக வழங்க வேண்டும். அவை கிடைக்கும் வரை அதிகர சபையின் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் சந்திரசிறியைத் தொடர்புகொள்வோம் – என்றார்.

இந்த விமான சேவையை நடாத்த இந்தியாவில் அரச மற்றும் தனியார் விமான சேவை நிறுவனங்கள் மிக ஆர்வமாகவே உள்ளன எனவும் அவர் தெரிவித்தார்.

## காங்கேசன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விமான நிலையத்தில் இடம்பெற்றது.

விமானம் மற்றும் கப்பல் போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தலைமையில் இடம்பெற்ற இக் கூட்டத்தினபோதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

துறைமுகம் அருகே அதற்கான கட்டுமான வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டும். சில கட்டடங்கள் அமைக்கப்பட வேண்டும். அவற்றை ஒப்பந்தங்கள் ஊடாகவே வழங்க முடியும். அதற்கான பணிகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது.

இவற்றினை மேற்கொள்ள குறிப்பிட்ட கால அவகசம் தேவை என்பதனால் உடனடியாகக் கப்பல்போக்குவரத்துப் பணி ஆரம்பிக்கும் சாத்தியம் இல்லை. விரைவில் அதற்கான பணிகள் முன்டெடுக்கப் படும். – என அவர் மேலும் தெரிவித்தார்.

**விளம்பரத் தொடர்புகளுக்கு –**
**மின்னஞ்சல் –**
**kalaikkathiradvt@gmail.com**
**தொலைபேசி இலக்கம் –**
**076 443 8622**


# மரண அறிவித்தல்

மண்ணில் 07 . 01 . 1931

விண்ணில் 11 . 06 . 2022



## வடகோவை பூ.க.இராஜரட்ணம்

(ஒய்வுநிலை அதிபர் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி, நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி)

யாழ்ப்பாணம் கோப்பாய் வடக்கை பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கு, கொழும்பு வெள்ளவத்தை, பிரித்தானியா லண்டன் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த வடகோவை பூ க இராஜரட்ணம் (ஓய்வுநிலை அதிபர் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி, நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி) அவர்கள் 11.06.2022 சனிக்கிழமையன்று லண்டனில் சிவபதம் அடைந்தார்.

இவர் காலஞ்சென்ற திருமதி சரோஜினிதேவி இராஜரட்ணம் அவர்களின் அன்பு கணவரும் காலஞ்சென்றவர்களான கந்தப்பு சின்னம்மா தம்பதி களின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் ஆச்சிப் பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் கலாநிதி பிரேம்ராஜ் (அவுஸ் திரேலியா), சசிகலா (லண்டன்), உதயராஜ் (லண்டன்), மேகலா (லண்டன்) ஆகியோரின் அன்பு தந்தையும் நாராயணி, ஸ்ரீதரன், வனுஷியா, திருநாவுக்கரசு ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர் களான பூதத்தம்பி, அன்னலட்சுமி, துரைசிங்கம் மற்றும் இராசமணி, காசிப்பிள்ளை ஆகியோரின் அன்பு சகோதரனும் பரமேஸ்வரி, காலஞ் சென்ற பூமணி, இராசமணி, ஜெயக்குமார் ஆகியோரின் அன்பு மைத்துனரும் லவிண்ராஜ், அஸ்வின்ராஜ், ஜசின்ராஜ், சரண்ராஜ், பிரவீன்ராஜ் ஆகியோரின் பாசமிகு அப்பப்பாவும் டிலக்சன், பிவித்திகா, ஜக்சனா, மதுஜனா ஆகியோரின் பாசமிகு அம்மப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று காலை 19.06.2022 07:30 – 10:00 மணி வரை BARNET MULTI CULTURAL COMMUNITY CENTRE, HENDON SPORTS CENTRE, ALGERNON ROAD, LONDON, NW4 3TA அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் 10:30 மணியளவில் HENDON CREMATORIUM, HOLDERS HILL ROAD, MILL HILL, LONDON, NWZ 1NB தகனக் கிரியைகள் இடம் பெறும்.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

முகவரி :
6 Dudley Road,
Harrow,
HA2 OPR UK.

தகவல்
பிரேம்ராஜ் (மகன்) - 0061 478 005 488,
சசிகலா (மகள்) - 0044 778 438 4796,
மேகலா (மகள்) - 0044 790 860 3770,
வனுஷியா (மருமகள்) - 0044 771 704 2485.
கோபி : 07465987533 / தியா: 07824664665

# எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மோதல்: 6 பொலிஸார் காயம்; 10 பேர் கைதாகினர்!



அத்துருகிரிய, எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகில் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்ற மோதலில் 6 பொலிஸ் உத்தியோகத்தர்கள் காயமடைந்த நிலையில் ஹோமாகம ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அத்துருகிரிய பகுதியில் எரிபொருள் நிரப்பு நிலையம் மூடப்பட்டிருந்த வேளையில் சிலர் உள்ளே நுழைய முற்பட்டுள்ளனர்.

அவர்களை தடுப்பதற்கு பொலிஸார் முயன்ற வேளையில் இந்த மோதல் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரியவருகின்றது.

இந்நிலையில் மேற்படி சம்பவத்துடன் தொடர்புடைய பெண் உள்ளிட்ட 10 பேரை அத்துருகிரிய பொலிஸார் கைதுசெய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.







## மணமகன் விபரம்

பிறந்த திகதி-21.10.1991
மதம்-இந்து
ஜாதி-N ஆண்
நட்சத்திரம்-உத்தரட்டாதி
கி.பா-25
செவ்-சூரி 5ல்
தகைமை-BUISNESS MANAGEMENT
தொழில்-BANK OFFICER
எதிர்பார்ப்பு- பட்டதாரி அரச சேவை மணமகள்

---

பிறந்த திகதி-25.05.1989
மதம்-இந்து
ஜாதி-விஸ்வகுல (தச்சர்)
கி.பா-42
செவ்-21ல்
தகைமை-SUREVEYOR
தொழில்-SUREVEYOR D.PARTMENT
எதிர்பார்ப்பு- அரசசேவை -பட்டதாரி மணமகள் (யாழ் வேலை விருப்பம்)

---

பிறந்த திகதி-22.05.1992
மதம்-இந்து
ஜாதி-V ஆண்
நட்சத்திரம்-உத்தராடம் 4
கி.பா-37
செவ்-1ல்
தகைமை-M.B.BS
தொழில்-DOCTOR
எதிர்பார்ப்பு- DOCTOR BANK ACCOUTANT மணமகள்

---

பிறந்த திகதி-03.07.1990
மதம்-இந்து
ஜாதி-V ஆண்
நட்சத்திரம்-விசாகம் 2
கி.பா-27
செவ்-5ல்
தகைமை-VETERINARY DOCTOR
தொழில்-VETERINARY DOCTOR
எதிர்பார்ப்பு- DOCTOR- VETERINARY DOCTOR மணமகள்

---

பிறந்த திகதி-8.01.1991
மதம்-இந்து
ஜாதி-V ஆண்
நட்சத்திரம்-திருவாதிரை
கி.பா-31
செவ்-1ல்
தகைமை-M.B.B.S
தொழில்-DOCTOR
எதிர்பார்ப்பு DOCTOR ENG மணமகள்

---

பிறந்த திகதி-13.11.1987
மதம்-இந்து
ஜாதி-V ஆண்
நட்சத்திரம்-ஆயிலியம்
கி.பா-21
செவ்-8ல்
தகைமை-M.B.B.S
தொழில்-DOCTOR
எதிர்பார்ப்பு- DOCTOR அரச உயர் பதவி மணமகள்

---

பிறந்த திகதி-31.01.1993
மதம்-இந்து
ஜாதி-V ஆண்
நட்சத்திரம்-பரணி 3
கி.பா-30
செவ்-6ல்
தகைமை-B.SC CIVIL ENG
தொழில்- SINGAPORE WORK
எதிர்பார்ப்பு- பட்டதாரி மணமகள்

---

பிறந்த திகதி-18.09.1987
மதம்-இந்து
ஜாதி-V ஆண்
நட்சத்திரம்-பூசம் 2
கி.பா-28
செவ்-10ல்
தகைமை-B.SC CIVIL ENG
தொழில்-SINGAPORE WORK
எதிர்பார்ப்பு- பட்டதாரி மணமகள்

## மணமகள் விபரம்

பிறந்த திகதி-30.05.1979
மதம்-இந்து
ஜாதி-V பெண்
நட்சத்திரம்-பூசம்2ஆம் பாதம்
கி.பா-17
செவ்-5ல்
தகைமை-B.A
தொழில்-ஆசிரியர்
எதிர்பார்ப்பு- அரச சேவை, தனியார் உள்நாடு, வெளிநாடு

---

பிறந்த திகதி-27.08.1994
மதம்-இந்து
ஜாதி-விஸ்வகுலம்
நட்சத்திரம்-பரணி 3
கி.பா-32
செவ்-3ல்
தகைமை-B.SC
தொழில்-MANAGMENT ASSISTANT அரசசேவை
எதிர்பார்ப்பு- அரசசேவை மணமகன் தேவை

---

பிறந்த திகதி-04.10.1988
மதம்-இந்து
ஜாதி-விஸ்வகுலம்
நட்சத்திரம்-அச்சுவினி
கி.பா-51
செவ்-3ல்
தகைமை-கல்வியியல் கல்லூரி
தொழில்-ஆங்கில ஆசிரியர்
எதிர்பார்ப்பு- அரசசேவை மணமகன்

---

பிறந்த திகதி-11.11.1990
மதம்-இந்து
ஜாதி-V பெண்
நட்சத்திரம்-பூரம்
கி.பா-29
செவ்-5ல்
தகைமை-B.SC
தொழில்- அரசசேவை
எதிர்பார்ப்பு- பட்டதாரி அரசசேவை மணமகன்

---

பிறந்த திகதி-30.08.1991
மதம்-இந்து
ஜாதி-V பெண்
நட்சத்திரம்-மூலம்
கி.பா-30
செவ்-1ல்
தகைமை-B.SC
தொழில்- பனை அபிவிருத்தி ஆராய்ச்சியாளர்
எதிர்பார்ப்பு- பட்டதாரி அரசசேவை மணமகன்

---

பிறந்த திகதி-19.05.1993
மதம்-இந்து
ஜாதி-V பெண்
நட்சத்திரம்-அச்சுவினி
கி.பா-51
செவ்-8ல்
தகைமை-B.B.A
தொழில்- BANK OFFICER
எதிர்பார்ப்பு- பட்டதாரி அரசசேவை

---

பிறந்த திகதி-2.6.1993
மதம்-இந்து
ஜாதி-V பெண்
நட்சத்திரம்-விசாகம் 1
கி.பா-69
செவ்-9ல்
தகைமை-B,SC CIVIL ENG
தொழில்- COMPANY
எதிர்பார்ப்பு- பட்டதாரி அரசசேவை

---

பிறந்த திகதி-04.08.1992
மதம்-இந்து
ஜாதி-V பெண்
நட்சத்திரம்-சித்திரை 2
கி.பா-3
செவ்-9ல்
தகைமை-B.A
தொழில்- COMPANY
எதிர்பார்ப்பு- அரசசேவை மணமகன்

Australia, Canada, UK, USA,Swiss, Germany, Italy, France, Newzeland- இந்த நாடுகளில் Visa உள்ளவர்கள் இல்லாதவர்கள் மணமகன் மணமகள் விபரம் தந்தால் திருமணம் நிறைவேற்றித் தருவோம்.

காலைக்கதிர் தொலைபேசி 021 222 3000

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வெளிவரும் இம் மாங்கல்யா பகுதியில் மணமக்கள் விபரங்கள் பிரசுரிக்க விரும்பின் பின்வரும் தொலைபேசி இலக்கத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ அலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.













| மல்லாகம் | பண்டத்தரிப்பு | சங்கானை | சாவகச்சேரி | காரைநகர் | நெல்லியடி | யாழ் மத்தி (Town) | புன்னாலைக் கட்டுவன் | வேலணை |
|---|---|---|---|---|---|---|---|---|
| T.P: 021 224 3393<br>070 301 3014<br>077 343 6622 | T.P: 021 225 2333<br>071 255 4135<br>077 434 3798 | T.P: 021 225 1664<br>070 301 3016<br>077 434 3149 | T.P: 021 227 0616<br>071 577 0616<br>077 435 3995 | T.P:<br>021 225 2454<br>070 510 2484 | T.P:021 226 0999<br>071 755 0999<br>077 261 2446 | T.P: 021 222 8004<br>070 301 5004<br>070 301 3017<br>077 998 6247 | T.P: 021 224 5001<br>076 384 0684<br>077 934 6509 | T.P:<br>021 221 5472<br>070 301 3012 |

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## இயலாவிட்டால் வெளியேறுங்கள்!

இப்படி எல்லாம் நடக்கும் என்று மக்கள் எதிர்பார்க்காத பல விடயங்கள் நடந்தேறுகின்றன. வளம் கொழிக்கும் பூமி என்று கருதப்பட்ட இலங்கை நாடு இன்று உலக நாடுகளிடம் கையேந்தும் யாசக நாடாகி விட்டது.

எரிபொருள் இல்லை; எரிவாயு இல்லை; அத்தியாவசியப் பொருள்கள் இல்லை; மருந்துகள் இல்லை; மின் விநியோகமும் ஒழுங்காக இல்லை. இருக்கின்ற பொருள்களும் நினைத்துப் பார்க்க முடியாத விலை.

சாதாரண மனிதனின் வாழ்வியலின் ஒவ்வொரு அங்கமும் அடிபட்டுப் போய்க் கிடக்கின்றது.

அத்தியாவசியப் பொருள்களான பெற்றோல், டீசல், மண்ணெண்ணை எல்லாவற்றுக்கும் தட்டுப்பாடு. பற்றாக் குறை.

எரிபொருள் கப்பல்கள் இனிமேல் எப்போது நாட்டுக்கு வரும் என்பது தெரியாத நிலைமை. அதனால் இந்த நெருக்கடி இப்போதைக்கு முடிவுக்கு வரும் என்ற நம்பிக்கையும் இல்லை. இன்னும் இன்னும் நிலைமை மோசமாகும் என்றே தோன்றுகின்றது.

வாழ வழியில்லாத குடும்பங்கள் இந்தியாவுக்கு ஓடித் தப்ப முயலுகின்றன. பஞ்சம் பிழைக்கப் புறப்படுகின்றார்கள். பிள்ளைகளின் பசிக்கு வழி கூற முடியாத ஆற்றாமையில் பெற்றோர் – குறிப்பாக தாய்மார் – தற்கொலையை நாடும் கொடூரக்கட்டம்.

மக்களின் இயலாமை இனி கொள்ளை, களவு, சூறையாடலாக மாறும். ஏற்கனவே அந்தப் பாதகச் செயல்கள் தீவிரம் பெறத் தொடங்கி விட்டன.

மக்களின் இயலாமை, கும்பலாகச் சேர்ந்து முன்னெடுக்கும் சூறையாடலுக்கு வழி செய்தாலும் ஆச்சரிப்படுவதற்கில்லை. பசி, பஞ்சம், பட்டினி, அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்ய இயலாமை போன்றவற்றின் விளைவு பல நாடுகளிலும் அப்படி மாறி, கும்பல், கும்பலாகச் சூறையாடலுக்கு வழி செய்தமை சரித்திரத்தின் பக்கங்களில் பதிவான விடயம்தான். இலங்கையில் அந்த நிலைமை வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

எரிபொருள் இன்மையால் வாரத்தில் ஐந்து நாள் வேலை, வாரத்தில் நான்கு நாளாகி விட்டது. இப்போது வீட்டிலிருந்து வேலை என்கின்றார்கள். பாடசாலைகள் மூடப்படும் நிலைமை. இணைய வழிக் கல்வி என்கிறார்கள். ஏற்கனவே கொவிட் தொற்றால் பேரிழப்பைச் சந்தித்திருக்கும் கல்வித்துறை மென்மேலும் பின்னடைவுகளைச் சந்திக்கப் போகின்றது.

அருகில் இருக்கும் பாடசாலையில் ஆசிரியத்துவம் என்பது இனி, அருகில் இருக்கும் ஏதேனும் பாடசாலையில் கல்வி பயிலுங்கள் என்று மாணவர்களுக்கான உத்தரவாக மாறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இப்படி, பாடசாலைகள், அலுவலகங்களை மூடி, தொழில்சாலைகளை நிறுத்தி, கடைசியில் என்ன செய்யப் போகின்றோம்? ஏற்கனவே மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கும் மொத்த உள்நாட்டு உற்பத்தி வீதம் இதனால் இன்னும் வீழ்ச்சியுறப் போகின்றது.

இந்த எரிபொருள் பிரச்சினை, தட்டுப்பாடு, நெருக்கடி எல்லாம் இன்னும் இரண்டு வாரங்களுக்குத்தான் என்று சமாதானம் கூறப்படுகின்றது. அடுத்த மூன்று வாரங்கள் மிக நெருக்கடியானவை என்று பிரதமர் கூறி ஒரு வாரம் கடந்து விட்டது.

சரி, அடுத்த இரண்டு வாரத்தில் நிலைமை சீராகாவிட்டால் என்ன செய்வது? ஜனாதிபதியும் அரசும் தங்கள் இயலாமையை ஒப்புக் கொண்டு, மூடை முடிச்சுகளைக் கட்டிக் கொண்டு வெளியேறுவதுதான் நியாயமானதாக இருக்க முடியும்.

## மன்னாரில் கொவிட் அகலவில்லை 4 ஆவது பூஸ்டர் தடுப்பூசி சிறந்தது!

### பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு

கொவிட் பெருந்தொற்று இன்னமும் சமூகத்தை விட்டு அகலவில்லை. ஆகவே, அறுபது வயதுக்கு மேற்பட்டவர்கள் மற்றும் நீண்டகால நோயாளர்கள் நான்காவது தடுப்பூசியை அதாவது இரண்டாவது பூஸ்டர் தடுப்பூசியை போடுவது சிறந்தது என மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.விநோதன் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்டத்தில் புதன்கிழமை 06 கொவிட் தொற்றாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர். இதனால் மன்னாரில் கொவிட் பெருந்தொற்று இன்னமும் மன்னார் சமூகத்தை விட்டு விலகவில்லையென தோன்றுகின்றது

இந்த மாதம் (ஜூன்) இதுவரை 10 கொவிட் தொற்றாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர். இதுவரைக்கும் மன்னார் மாவட்டத்தில் 4 ஆயிரத்து 27 கொவிட் தொற்றாளர்கள் இனம் காணப்பட்ட நிலையில் இந்த நடப்பு வருடத்தில் (2022) 845 பேர் இந்தத் தொற்றுக்கு ஆளாகியுள்ளனர்.

ஆகவே, 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் நீண்டகால நோயாளர்கள் கட்டாயமாகவும் மற்றும் 20 வயதுக்கு மேற்பட்ட எவரும் விருப்பத்தின் அடிப்படையில் தமது நான்காவது பூஸ்டர் தடுப்பூசியை பெற்றுக் கொள்வது நலம் என மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.விநோதன் தெரிவித்துள்ளார்.

இந்தத் தடுப்பூசியை பெற்றுக்கொள்ள விரும்புவர் வழங்கப்படும் நிலையம், திகதி ஆகியவற்றை உங்கள் பகுதி சுகாதார வைத்திய அதிகாரி, பொதுச் சுகாதாரப் பரிசோதகர் அல்லது குடும்பநல உத்தியோகத்தர்களுடன் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ள முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## சர்வதேச நாணய நிதியத்தை ஆரம்பத்திலேயே நாடியிருந்தால் இவ்வாறான பாரிய பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருக்காது!

### மத்திய வங்கியின் ஆளுநர் எடுத்துரைப்பு



இலங்கை ஏற்கனவே சர்வதேச நாணய நிதியத்தை நாடியிருந்தால் தற்போது நாடு முகங்கொடுத்திருக்கும் பொருளாதார நெருக்கடியைத் தவிர்த்திருக்க முடியும் என்றும், உரிய காலத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாடாதமை தவறு என்றும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த வருடம் எமது நாடு சர்வதேச நாணய நிதியம் உள்ளடங்கலாக சர்வதேச சமூகத்திடமிருந்து 500 கோடி டொலர்களை எதிர்பார்ப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் இதுதொடர்பாகக் கருத்து வெளியிட்டுள்ள இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க –

ஏற்கனவே சர்வதேச நாணய நிதியத்தை நாடுவதற்கான தீர்மானத்தை மேற்கொண்டிருந்தால், கடன்களை மீளச்செலுத்தும் நடவடிக்கையை ஒருவருடத்துக்கு முன்னதாக ஆரம்பித்திருந்தால் இந்த நிலைவரத்தைத் தற்போதைய கடும் நெருக்கடிகளின்றி உரியவாறு கையாண்டிருக்கமுடியும் என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

அதுமாத்திரமன்றி இலங்கை கடந்த 1948 ஆம் ஆண்டில் சுதந்திரமடைந்ததன் பின்னரான காலப்பகுதியில் இப்போது மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கின்றது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறானதொரு பின்னணியில் மத்திய வங்கியின் ஆளுநர் பதவியைத் தொடர்ந்து வகிப்பதற்கான விருப்பத்தைத் தான் வெளிப்படுத்தியிருக்கிறேன் என தெரிவித்துள்ள அவர், 'நான் மத்திய வங்கியின் ஆளுநர் பொறுப்பை ஏற்றுக்கொண்டபோது 2 மாதங்கள் மாத்திரமே பதவி வகிப்பேன் என்று கருதவேண்டியிருந்திருந்தால் நான் இந்தப் பதவியைப் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கமாட்டேன்.

இது இருமாதகாலத்துக்குள் தீர்வுகாணக் கூடிய நெருக்கடியல்ல. இந்த நெருக்கடி சீராகுவதற்கு முன்னதாக மேலும் மோசமடையும் என்று சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பொலிஸார் கைப்பற்றும் கஞ்சாவில் ஆயுர்வேத மருந்து தயாரிக்க முடிவு

பொலிஸாரால் கைப்பற்றப்படும் கஞ்சாவை ஆயுர்வேத மருத்துவப் பொருள்களை தயாரிப்பதற்காக இலங்கை ஆயுர்வேத கூட்டுத்தாபனத்துக்கு ஒப்படைக்கும் வகையிலான சட்ட திட்டங்களை இயற்றுவதற்கு நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதன் பின்னர் நீதிமன்றங்களில் சமர்ப்பிக்கப்படும் கஞ்சா தொகையைத் தவிர, எஞ்சிய தொகை இலங்கை ஆயுர்வேத கூட்டுத்தாபனத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

கஞ்சா மூலிகையைப் பயன்படுத்தி இலங்கை ஆயுர்வேத கூட்டுத்தாபனம் ஐந்து வகையான ஆயுர்வேத மருத்துவப் பொருள்களைத் தயாரித்து வருவதுடன், அவற்றைத் தயாரிப்பதற்கு வருடத்திற்கு 3 ஆயிரம் கிலோகிராம் கஞ்சா தேவைப்படுவதாகவும் அவற்றைப் பெற்றுக்கொள்வதற்கு நாட்டில் காணப்படுகின்ற சட்டங்கள் தடையாக இருக்கின்றன எனவும் இலங்கை ஆயுர்வேத கூட்டுத்தாபனம் குறிப்பிடுகின்றது.

ஆகவே, அவற்றைப் பெற்றுக்கொள்வதற்கு நாட்டில் காணப்படும் தடைச் சட்டங்களை நீக்குமாறு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவிடம் ஆயுர்வேத கூட்டுத்தாபனத்தின் அதிகாரிகள் குழு விடுத்த கோரிக்கைகளை அடுத்தே, இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ஆயுர்வேத கூட்டுத்தாபனத்துக்கு கையளிக்கப்படுகின்ற கஞ்சாவை, கூட்டுத்தாபனம் வரையில் கொண்டு சென்று கையளித்தல் மற்றும் பாதுகாப்பது உள்ளிட்ட சகல பொறுப்புகளையும் பொலிஸாரே ஏற்றுக் கொள்ள வேண்டுமெனவும், உரிய நடைமுறையின் கீழ் ஆயுர்வேத கூட்டுத்தாபனத்தால் பதிவு செய்யப்பட்ட வைத்தியர்களிடம் ஒப்படைக்க வேண்டுமெனவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறு கையளிக்கப்பட்ட தொகை மற்றும் அழிக்கப்பட்ட தொகை தொடர்பில் உரிய நீதிமன்றங்களுக்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார்.

இந்த வேலைத்திட்டத்தை விரைவில் நடைமுறைப்படுத்துவதற்கான வழிமுறைகளை வகுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அமைச்சர் பணிப்புரை வழங்கியுள்ளார்.

நீதிஅமைச்சர்விஜயதாஸராஜபக்ஷவுடன் நீதி அமைச்சில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில், நீதியமைச்சின் செயலாளர் வசந்த பெரேரா மற்றும் நீதியமைச்சு, நீதி ஆணைக் குழு, இலங்கை ஆயுர்வேத திணைக்களம், சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் பொலிஸ் திணைக்களத்தின் அதிகாரிகள் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அருந்ததி
இணைய திருமண சேவை

www.arunthathee.com
+94 777 164 524

அருந்ததியின்

# வரன் தேடுவோம் வாருங்கள்

## திருமண தேடலை இலகுவாக்கும் ஒரு முயற்சி

| யாழ்ப்பாணம் 25/06/2022 | கொழும்பு 26/06/2022 |
|---|---|
| **Chelva Mahal** | **Green Palace** |
| 1229, Poonari Maraththady Kokuvil. | 30 W.A. Silva Mawatha, Colombo 06. |
| 9.00 a.m -12.00 p.m | 9.00 a.m -12.00 p.m |

இந்நிகழ்விற்கு எமது ஜோதிடர் வரவுள்ளதால் உங்களுக்கு பொருத்தமான சாதகங்களை பெற்று உடனடியாகவே பொருத்தம் பார்த்துக்கொள்ள முடியும்.

### மணமகன் விபரம் (மணமகள் தேவை)

**22957 | வே | 1996**
பன்னாலை | இந்து | Partly Qual. in Nutrition | Customer Service Officer | லண்டன்
ரேவதி (மீனம்) | 192 செ.மீ

**20976 | வே+வி | 1996**
கரவெட்டி | இந்து | BSC, Reading MSC | Studying
உத்தராடம் (மகரம்) | லண்டன்
172 செ.மீ | சூ.செவ்: 01

**21795 | வே+கோ | 1995**
கோப்பாய் | இந்து | A/L
Cashier | ஜேர்மனி
பூரம் (சிம்மம்)
167 செ.மீ | செவ்: 12

**24178 | வே | 1995**
கொக்குவில் | இந்து | BSC
Quantity Surveyor
கட்டார் | பரணி (மேடம்)
172 செ.மீ | செவ்: 01

**22444 | வே | 1994**
அம்பாறை | இந்து | B.Eng
ESD Consultant
அவுஸ்ரேலியா | திருவோணம் (மகரம்) | 182 செ.மீ | செவ்: 08

**23050 | ந | 1994**
மீசாலை | இந்து | A/L
Pharmacist | அவுஸ்ரேலியா
கேட்டை (விருச்சிகம்)
170 செ.மீ

**23119 | வே | 1994**
வேலணை | இந்து | A/L
Pizza Business
பிரான்ஸ் | மூலம் (தனுசு)
177 செ.மீ

**23197 | வே | 1994**
வேலணை | இந்து | BBA
Managing Director
ஜேர்மனி | உத்தராடம் (மகரம்)
179 செ.மீ | சூ.செவ்: 07

**23941 | வே | 1993**
கிளிநொச்சி | இந்து | BSC
Civil Engineer | சிங்கப்பூர்
ரேவதி (மீனம்)
179 செ.மீ | செவ்: 01

**23332 | வே | 1993**
திருநெல்வேலி | இந்து | A/L
Staff | சுவிட்சர்லாந்து
திருவோணம் (மகரம்)
178 செ.மீ | சூ.செவ்: 02

**23551 | செ.மு | 1993**
முல்லைத்தீவு | இந்து | A/L
Business | அவுஸ்ரேலியா
ரோகிணி (ரிஷபம்)
160 செ.மீ | செவ்: 12

**20277 | வே | 1993**
சாவகச்சேரி | இந்து | MSC
Regional Manager
கார்த்திகை (ரிஷபம்)
175 செ.மீ | அவுஸ்ரேலியா

**23266 | வே | 1993**
அரியாலை | கிறிஸ்தவம்
MSC Cyber Security Engineer | பிரான்ஸ்
பூரட்டாதி (கும்பம்) | 170 செ.மீ

**20232 | வே | 1993**
பருத்தித்துறை | இந்து | MSC
Software Engineer
அவுஸ்ரேலியா | திருவோணம் (மகரம்) | 189 செ.மீ | செவ்: 12

**23563 | வே | 1993**
உரும்பிராய் | இந்து | BD
IT Officer | அவுஸ்ரேலியா
திருவோணம் (மகரம்)
171 செ.மீ | செவ் : 02

### மணமகள் விபரம் (மணமகன் தேவை)

**23782 | வே | 1996**
உரும்பிராய் | இந்து | BD
Safety Coordinator
கனடா | அஸ்வினி (மேடம்)
180 செ.மீ

**21510 | வே | 1996**
இணுவில் | இந்து | MBBS
Doctor | இந்தியா
பூராடம் (தனுசு)
169 செ.மீ

**22384 | வே | 1996**
ஏளாலை | இந்து | MD
Doctor | கனடா
சித்தரை (கன்னி)
165 செ.மீ

**23158 | வே | 1995**
வட்டுக்கோட்டை | இந்து
BD | BBS Congras
விசாகம் (துலாம்) | சூ.செவ் : 03
167 செ.மீ | சுவிட்சர்லாந்து

**23809 | வி | 1995**
மட்டக்களப்பு | இந்து | BD
Teacher | அவுஸ்ரேலியா
பூசம் (கடகம்)
165 செ.மீ | செவ் : 04

**23527 | வே | 1994**
நெடுந்தீவு | இந்து | MBBS
Final Year Medical Student | அத்தம் (கன்னி)
168 செ.மீ | சுவிட்சர்லாந்து

**20454 | வே | 1993**
சாவகச்சேரி | இந்து | MBBS
Doctor | அவுஸ்ரேலியா
திருவோணம் (மகரம்)
158 செ.மீ | சூ.செவ் : 10

**23221 | வே | 1993**
சாவகச்சேரி | இந்து | MSC
Part Time Worker
மூலம் (தனுசு) | சூ.செவ் : 07
171 செ.மீ | அவுஸ்ரேலியா

**22014 | வே | 1993**
சரவணை | இந்து | BSC
Software Engineer
சிங்கப்பூர் | அஸ்வினி (மேடம்)
154 செ.மீ | சூ.செவ் : 03

**23614 | வே | 1993**
மானிப்பாய் | இந்து | B.Tech, MD, M.Phil | Studying
இந்தியா | சுவாதி (துலாம்)
170 செ.மீ | செவ் : 01

**21738 | கோ | 1992**
கரவெட்டி | இந்து | PD
Lab Incharge | லண்டன்
உத்தராடம் (மகரம்)
172 செ.மீ | செவ் : 12

**21018 | கோ | 1992**
ஏளாலை | இந்து | Reading B.Com | Customer Service Assistant | விசாகம் (விருச்சிகம்)
157 செ.மீ | செவ்: 02 | லண்டன்

**20028 | வே | 1992**
மட்டக்களப்பு | கிறிஸ்தவம்
BD | Team Leader
அத்தம் (கன்னி)
165 செ.மீ | அவுஸ்ரேலியா

**21882 | வே | 1992**
மீசாலை | இந்து | BD
Regulatory Affairs Specialist
மகம் (சிம்மம்) | செவ்: 02
160 செ.மீ | பிரான்ஸ்

**23653 | வே | 1991**
நல்லூர் | இந்து | MBBS
Doctor | நோர்வே
அத்தம் (கன்னி)
154 செ.மீ | சூ.செவ் : 06


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=



# மருத்துவக் கதிர்



# மாரடைப்பு எப்படி ஏற்படுகிறது?

இன்று உலக அளவில் பெரும்பாலான மக்கள் என்ன காரணத்தால் இறக்கிறார்கள் என்றால் முதலாவது விபத்து அல்லது வன்முறை சம்பந்தமான இறப்புகள். இரண்டாவது கான்சர். மூன்றாவது இருதயம் சம்பந்தமான நோய்கள். நான்காவது நுரையீரல் மற்றும் கிட்னி சம்பந்தமான நோய்கள்.

இதில் இருதயம் சம்பந்தமான நோய்களால்தான் அதிகளவானோர் இறக்கின்றனர் குறிப்பாக மாரடைப்பு.

இது பெரும்பாலும் தடுக்கக் கூடியது. மாரடைப்பு, என்றால் என்ன என்பதைப் பார்ப்போம். உடலில் எந்த பாகமும் உயிர்ப்போடு இருக்க வேண்டுமென்றால் அதற்கு போதுமான ரத்தம் தேவை.

உதாரணத்திற்கு உங்கள் கையை எடுத்துக் கொள்ளுங்கள். அதை இறுக்க மூடி மணிக்கட்டில் இன்னொரு கையை வைத்து அழுத்துங்கள். இப்படி செய்யும்போது அந்த விரல்களுக்கும் உள்ளங்கைக்கும் தேவையான ரத்தம் செல்லாது. இப்போது மூடிய அந்தக் கையை விரித்து பார்ப்போமானால் அது வெளிறிப் போய் இருக்கும்.

நீங்கள் அவ்வாறே இறுக்கிப் பிடித்தது போல் இரண்டு நிமிடம் இருந்தீர்களானால், உங்களால் கையை அசைக்க முடியாது. அதுவே ஒரு மணி நேரம் கழித்து பார்த்தீர்கள் என்றால் உங்கள் கைகளில் நீலம் படர்ந்திருக்கும். அதுவே ஒன்றரை மணி நேரம் கழித்து பார்ப்போமானால், உங்கள் கைகளில் உள்ள ஒவ்வொரு செல்களும் இறந்திருக்கும். அவ்வாறு செல்கள் இறக்கும் முன் நீங்கள் இறுகப் பற்றி இருந்த கையை விட்டீர்கள் என்றால் உங்கள் உள்ளங்கைகளுக்குள் மீண்டும் ரத்தம் ஓட ஆரம்பித்துவிடும், கையானது சிவப்பு வண்ணத்திற்கு மீண்டும் மாறி உயிர் பிழைத்து விடும்.

உடம்பில் உள்ள அனைத்துப் பாகங்களும் ரத்தத்தினால்தான் உயிர் வாழ்கின்றன. ரத்தம் இல்லை என்றால் அந்தப் பாகத்திற்கு உயிர் இருக்காது. உடல் முழுவதும் ரத்தத்தை அனுப்புவது இதயம்தான். ஆனால் இதயத் தசைகளுக்கும் ரத்தம் தேவைப்படுகிறது. அந்த இதயத் தசைகளுக்கு ரத்தத்தைக் கொண்டு செல்வதற்காகவே சில ரத்தக்குழாய்கள் இருக்கின்றன. நரம்பு என்பதன் பொருள் நரம்பு மண்டலம். எனவே நாம் அந்த வார்த்தையை உபயோகிப்பதைத் தவிர்க்க வேண்டும்.

ரத்தம் கொண்டு வரும் ரத்தக் குழாய்களை நாம் தமனி எனக் கூறுவோம். இந்த தமனி என்ற ரத்தக் குழாய்தான் உடல் முழுக்க ரத்தத்தைக் கொண்டு செல்கிறது. இந்த இதயத்துக்கு ரத்தத்தைக் கொண்டுவரும் தமனி அடைபடுவதால் உண்டாவதுதான் ஹார்ட் அட்டாக். அதாவது மாரடைப்பு.

இருதயம் துடிக்கும்போது, இருதயத்தின் மேல் உள்ள அந்த மகா தமனி மூலமாய் ரத்தம் உடல் முழுக்க பாய்கிறது. இந்த மகா தமனியில் இருந்தே இரண்டு குழாய்கள் இருதயத்துக்கு வருகின்றன. ஒன்று வலது பக்கத்திலும் மற்றொன்று இடது பக்கத்திலும் வருகிறது. இடது பக்கத்தில் வரும் அந்த ரத்த குழாய் இரண்டாகப் பிரிகிறது ஒன்று முன்புறமும், மற்றொன்று பின்புறமும் வருகிறது. இந்த மூன்றும்தான் இதயத்துக்கு ரத்தத்தை கொடுத்துக் கொண்டிருக்கிறது.

இப்போது இந்த ரத்தக்குழாயின் இறுதி பாகம் பாதிக்கப்பட்டால், அந்த ரத்தக்குழாயைச் சுற்றியுள்ள பாகங்களுக்கு ரத்தம் பரவாது. அதனால் அந்தத் தசைகள் பாதிக்கப்படும். இதுவே ரத்தக்குழாய் நடுவில் பாதிக்கப்பட்டால் அந்த ரத்தக்குழாயை சுற்றி உள்ள பெரிய அளவிலான தசைகள் பாதிக்கப்படும். இதுவே அந்த ரத்தக்குழாய் தொடக்கத்திலேயே அடைபடுமானால், அந்த ரத்தக்குழாயை சுற்றியுள்ள முழுமையான தசைகளும் பாதிக்கப்படும். இதன் மூலம் நாம் அறிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால் ரத்தக்குழாய் அடைப்பு இடத்தைப் பொறுத்து இந்த பாதிப்பானது மாறுபடும்.

ஒரு தமனியின் இறுதியில் அடைப்பு ஏற்படுமானால் அப்போது பாதிப்பு குறைவாக இருக்கும் அதுவே ஆரம்பத்தில் அடைபடுமானால் பாதிப்பு அதிகமாக இருக்கும். இன்னும் சில பேருக்கு இந்த இந்த தமனிகளை சுற்றியுள்ள அதன் கிளைகளில் அடைப்பு ஏற்படும். அப்படி கிளைகளில் அடைப்பு ஏற்படும்போது அந்த கிளைகளை சுற்றியுள்ள தசைகள் மட்டுமே பாதிக்கப்படும். எந்த குழாய்களில் அடைப்பு ஏற்படுகிறது அந்தக் குழாய் எந்த அளவிலான தசைகளுக்கு ரத்தத்தைக் கொண்டு செல்கிறது என்பதைப் பொறுத்துதான் நாம் சிறிய அளவிலான அடைப்பு அல்லது பெரிய அளவிலான மாரடைப்பு என்று கூறுகிறோம். அதுவும் முழுவதுமாக சரி கிடையாது .

ரத்தக்குழாயின் இறுதி இடங்களில், அடைப்பு இருந்தால் ஒருவர் எளிதில் பிழைத்துக் கொள்வார். ஆனால், அந்தத் தசைகள் மட்டும் செயலிழந்து போகும். அவருக்கு அதிக வலியைக் கொடுக்கும். அதுவே நாம் மாற்று மருந்து கொடுக்கும்போது அவர் உடல் நலம் தேறி விடுவார். இதுவே ரத்தக்குழாயின் ஆரம்ப இடத்தில் அடைப்பு ஏற்பட்டிருக்குமாயின், அவர் இறக்கும் வாய்ப்பு அதிகம். பெரிய அளவிலான தசைகள் பாதிக்கப்பட்டதால், அவர் வாழ்நாள் முழுக்க மாத்திரை மருந்துகளை உட்கொள்ள வேண்டி வரும்.

எனவே நாம் சுருக்கமாக புரிந்து கொள்ள வேண்டியது இதைத்தான் மாரடைப்பு என்பது இதயத்தில் உள்ள ரத்தக் குழாய்களில் அடைப்பு ஏற்படுவதால் வருவது, அது எந்த இடத்தில் அடைப்பு ஏற்படுகிறது என்பதை



பொறுத்து மாரடைப்பின் தன்மையானது மாறுபடும்.

இப்போது நாம் மூன்று நபர்களை உதாரணத்திற்கு எடுத்துக் கொள்வோம். முதல் நபருக்கு ஏற்கனவே ரத்த குழாயில் 30% அடைப்பு உள்ளது. இரண்டாம் நபருக்கு 70% அடைப்பு உள்ளது. மூன்றாம் நபருக்கு 90% அடைப்பு உள்ளது என வைத்துக் கொள்வோம்.

நாம் முதலில் எடுத்துக் கொண்ட 30% அடைப்புள்ள நபருக்கு எந்த விதமான பாதிப்பும் தென்படாது. அவர் இயல்பான மனிதரைப் போல் ஓடி, ஆடி தனது அன்றாடப் பணிகளை செய்த வண்ணம் இருப்பார்.

இதுவே 70% அடைப்பு உடைய நபர் மாடிப்படி ஏறும் போது அல்லது கடினமான வேலைகள் செய்யும் போது, அவருக்கு சிறிது களைப்பு ஏற்படும். ஆனால், சிறிது நேரம் ஓய்வெடுத்த பிறகு திரும்பி அவர் தன் பணிகளைத் தொடர்வார். எனவே இவரது அன்றாடப் பணிகளிலும் பெரிய அளவிலான மாறுபாடுகள் எதுவும் தென்படாது.

90% அடைப்புள்ள நபருக்கும் மாறுபாடுகள் தென்படும். ஆனாலும் அவர் சிறிது நேரம் ஓய்வெடுத்து அல்லது அதைப் பொருட்படுத்தாது தனது அன்றாடப் பணிகளை மேற்கொண்டவாறு இருப்பார். இதற்குக் காரணம் இந்த மூன்று நபர்களுக்கும் ரத்த ஓட்டம் அடைபடாமல் பாய்ந்து கொண்டுதான் உள்ளது.

ரத்த ஓட்டம் தடைப்படாமல் உள்ளதால், எந்தவித பாதிப்பும் இல்லாமல் இயங்கிக் கொண்டிருக்கிறது. இவர்களுக்கு நாம் ECG மருத்துவ பரிசோதனை செய்து பார்த்தோமேயானால், அதில் எந்தவித குறைபாடும் தென்படாது. ஒரு விதமான ஜவ்வு இருக்கும். அதுதான் ரத்தத்தையும் அடைப்பையும் பிரிக்கிறது. இந்த ஜவ்வில் ஏதேனும் விரிசல் அல்லது கிழிசல் ஏற்படுமாயின் ரத்தமானது அதில் படரப்பார்க்கும்.

உதாரணத்திற்கு, நமது கையில் அடிபட்ட இடத்தில் ரத்தம் கசிகிறது என்றால், நாம் கையை வைத்து அந்த ரத்தத்தை அடைக்கப் பார்ப்போம். அவ்வாறு கையை வைத்து மூடும்போது ஏன் ரத்தம் வருவது நிற்கிறது என்றால், நமது உடலில் எப்போதெல்லாம் இவ்வாறு ஜவ்வு அல்லது சதைகள் பாதிப்புக்குள்ளாகிறதோ அப்போதெல்லாம் அந்த இடங்களில் ரத்தமானது சிறிய சிறிய இரத்த கட்டிகளாக மாறி படர்ந்து நிற்கும் இவ்வாறு நிற்கும்போது ரத்தமானது வெளியேறுவது தடுக்கப்படுகிறது. இதுதான் இயற்கை.

இதேபோல் நமது ரத்தக் குழாயில் ஏற்பட்டுள்ள அடைப்பின் மீதும் படர்ந்துள்ள ஜவ்வானது கிழியும் போது, அதில் நமது ரத்தமானது படர்ந்து அந்தக் கிழிஞ்சல்களை அடைக்க பார்க்கும். இவ்வாறு ரத்த கட்டியானது மேலும் படர்ந்து படர்ந்து முழு அடைப்பை உண்டாக்கி விடும். எனவே நாம் முதலில் பார்த்த 30% மட்டுமே அடைப்புள்ள நபர் எந்தவித பாதிப்பும் இல்லாமல் நன்றாகத்தான் இருந்தார். ஆனால் அவருக்கு ஜவ்வானது கிழியும்போது ரத்தமானது படர்ந்து அடைப்பு ஏற்பட்டு முழு விதமான அடைப்புக்கு வழி செய்து, பெரிய அளவிலான மாரடைப்பின் விளைவுக்கு வந்து நிற்கிறார். இந்த வகையான பாதிப்பானது மூன்று நபர்களுக்கும் பொதுவான ஒன்று. அதேபோல் மாரடைப்பும் இந்த மூன்று நபர்களுக்கும் ஏற்படும் வாய்ப்புகள் உண்டு.

# RADIANT DAWN

**A Sunday Supplement in English to Kalaikkathir**

**Page I** English for all **Sunday the 19th of June 2022**

**We welcome students' articles in word for publication**
-Editor-
kalaikkathiredu@gmail.com

## *Fill in the blanks with the appropriate relative pronoun from the given options*



1. I like the new teacher ---------------- explains things well.

   which who



2. I love the toast ----------------- my mother prepares.

   which who



3. These are the plants -------------------- I have planted myself.

   who that



4. She is the swimmer ------------------- parents encourage her a lot.

   whose who



5. Those are the children --------------------- I was talking about.

   which whom

**Complete the sentences with a relative pronoun**

1.- The xylophone is the musical instrument ......... my little brother plays at school.

2.-My cousin loves dressing like a cowboy ........ shoots with his gun.

3.-The girl carried the food ........... she wanted to eat.

4.-Lisa is the girl ......... my brother loves very much.

5.- Angel is a farmer .......... has got some cows.

6.-Martha rides a motorcycle ........ her parents gave her for her birthday last year.

7.-It was very cold the winter ......... he spent in Canada.

8.-The kid ......... cried loudly was my neighbour.

9.- The dress ......... the woman wore was very fashionable.

10.-The couple .......... I saw at the restaurant were having a romantic dinner.

11.-Richard is the musician ......... plays the electric guitar in my favourite band.


12.-Go to the bakery ........ is on the corner of High Street.

13.-The TV programme ......... the woman was watching was exciting.

14.-Uncle Philip was at the beach ......... is near his house.

15.- The temperature was so high ......... my dad couldn't bear at all.

16.- The cake .......... my aunt brought was delicious.



### *Underline the finite and non-finite verb in the following sentences. You can learn about finite and non-finite verbs here.*

1. I wen  to the store to buy some pens.
2. I saw an old man sitting in the pavement.
3. The girl was carrying a bouquet in her hand.
4. I wondered who he was.
5. They laughed at the beggar.
6. The teacher rebuked the boys for laughing at the poor man.
7. Please ask him his name.
8. The principal announced the names of the winners.
9. He waited for hours.
10. Once a tortoise and a hare ran a race.
11. I gave the toffees to the children.
12. I forgot to post the letter.



Answers

1. I went (finite) to the store to buy (non-finite) some pens.
2. I saw (finite) an old man sitting (non-finite) on the pavement.
3. The girl was carrying (finite) a bouquet in her hand.
4. I wondered (finite) who he was (finite).
5. They laughed (finite) at the beggar.
6. The teacher rebuked (finite) the boys for laughing (non-finite) at the poor man.
7. Please ask (finite) him his name.
8. The principal announced (finite) the names of the winners.
9. He waited (finite) for hours.
10. Once a tortoise and a hare ran (finite) a race.
11. I gave (finite) the toffees to the children.
12. I forgot (finite) to post (non-finite) the letter.

**I never dreamed for success. I worked for it - Estee Lauder**

# Marshall Plan

The Marshall Plan, also known as the European Recovery Program, was a U.S. program providing aid to Western Europe following the devastation of World War II. It was enacted in 1948 and provided more than $15 billion to help finance rebuilding efforts on the continent. The brainchild of U.S. Secretary of State George C. Marshall, for whom it was named, it was crafted as a four-year plan to reconstruct cities, industries and infrastructure heavily damaged during the war and to remove trade barriers between European neighbors—as well as foster commerce between those countries and the United States.

In addition to economic redevelopment, one of the stated goals of the Marshall Plan was to halt the spread communism on the European continent.

Implementation of the Marshall Plan has been cited as the beginning of the Cold War between the United States and its European allies and the Soviet Union, which had effectively taken control of much of central and eastern Europe and established its satellite republics as communist nations.

The Marshall Plan is also considered a key catalyst for the formation of the North Atlantic Treaty Organization (NATO), a military alliance between North American and European countries established in 1949.

Europe After World War II

Post-war Europe was in dire straits: Millions of its citizens had been killed or seriously wounded in World War II, as well as in related atrocities such as the Holocaust.

Many cities, including some of the leading industrial and cultural centers of Great Britain, France, Germany, Italy and Belgium, had been destroyed. Reports provided to Marshall suggested that some regions of the continent were on the brink of famine because agricultural and other food production had been disrupted by the fighting.

In addition, the region's transportation infrastructure – railways, roads, bridges, and ports – had suffered extensive damage during airstrikes, and the shipping fleets of many countries had been sunk. In fact, it could easily be argued that the only world power not structurally affected by the conflict had been the United States.

The reconstruction coordinated under the Marshall Plan was formulated following a meeting of the participating European states in the latter half of 1947. Notably, invitations were extended to the Soviet Union and its satellite states.

Impact of the Marshall Plan

Interestingly, in the decades since its implementation, the true economic benefit of the Marshall Plan has been the subject of much debate. Indeed, reports at the time suggest that, by the time the plan took effect, Western Europe was already well on the road to recovery.

And, despite the significant investment on the part of the United States, the funds provided under the Marshall Plan accounted for less than 3 percent of the combined national incomes of the countries that received them. This led to relatively modest growth of GDP in these countries during the four-year period the plan was in effect.

That said, by the time of the plan's last year, 1952, economic growth in the countries that had received funds had surpassed pre-war levels, a strong indicator of the program's positive impact, at least economically.

Political Legacy of the Marshall Plan

Politically, however, the legacy of the Marshall Plan arguably tells a different story. Given the refusal to participate on the part of the so-called Eastern Bloc of Soviet states, the initiative certainly reinforced divisions that were already beginning to take root on the continent.

It's worth noting, too, that the Central Intelligence Agency (CIA), the secret service agency of the United States, received 5 percent of the funds allocated under the Marshall Plan. The CIA used these funds to establish "front" businesses in several European countries that were designed to further U.S. interests in the region.

The agency also, allegedly, financed an anti-communist insurgency in Ukraine, which at the time was a Soviet satellite state.

By and large, though, the Marshall Plan was generally lauded for the desperately needed boost it gave America's European allies. As the designer of the plan, George C. Marshall himself said, "Our policy is not directed against any country, but against hunger, poverty, desperation and chaos."

Still, efforts to extend the Marshall Plan beyond its initial four-year period stalled with the beginning of the Korean War in 1950. The countries that received funds under the plan didn't have to repay the United States, as the monies were awarded in the form of grants. However, the countries did return roughly 5 percent of the money to cover the administrative costs of the plan's implementation.

# 6 Reasons to Study Mathematics

The importance of mathematics can be seen in hidden ways, and in everyday usage, all around us: computers, airplanes, body scanners, software, coding, and much more. Have you ever heard about the Golden Ratio? In mathematics, two quantities are in the golden ratio if their ratio is the same as the ratio of their sum to the larger of the two quantities. Why does this matter? Well, once mathematicians discovered the Golden Ratio, we have been able to use it to our advantage: architects use it to design buildings, scientists apply it to nature's recurring spiral arrangement, and even artists use the proportions in their artistic designs. A mathematics student will learn all about this and much more if he or she chooses to pursue this field of study. Here are six more reasons to study mathematics.

**1. Excellent for your brain**

Creative and analytical skills are highly desired by employers. Our brains develop important neural pathways for processing information and it's no surprise that mathematics plays an important role in brain development and analytical skills. Akshay for Life Hacks explains, "When we do a mathematical problem: collect the data, break down its premises, observe the relations that keep or systematically solve their parts in a rational way. If we are able to understand mathematics and arrive at logical solutions, we will be able to prepare our minds when we have real problems. We can look for the best logic, see the possible solutions and relate the data we have to reach the conclusion."

Recent research by Dr. Tanya Evans of Stanford University shows, "Children who know math are able to recruit certain brain regions more reliably, and have greater gray matter volume in those regions, than those who perform more poorly in math. The brain regions involved in higher math skills in high-performing children were associated with various cognitive tasks involving visual attention and decision-making." Tim Radford writes in The Guardian, "Maths is one of the best ways to strengthen a brain. [...] The research shows that maths is good for all of your brain, not just the parts that other activities cannot reach." As a mathematics student, not only will you deepen your knowledge of the field, you'll also improve your brain power.

**2. Real-world applications**

Your intensive study in mathematics will be applied immediately to solving real-world problems. Are you going to be purchasing a house? Navigating percentages and mortgage rates is directly related to understanding mathematics basics. Do you regularly use a computer and social media? Mathematics is embedded into computer technology and it would not exist without it.

Katie Kim, for Plexxus, writes, "Math is needed for almost every single profession in the world. If you want to be a CEO, a real estate agent, a biologist, or even a rocket scientist, it is without a doubt that numbers will be utilized. Basically, you will NEVER be able to escape math and you might as well accept it and have fun learning it while your career does not depend on it."

**3. Better problem-solving skills**

Potentially none of us will approach Alan Turing's mathematical and problem-solving genius -- Turing is credited with being the father of modern computing; he cracked the Nazis' Enigma code, among many other important mathematical advances -- but there's no doubt that becoming more competent in mathematics and studying it seriously can advance your problem-solving skills.

Mathematics provides clarity in problem solving and "mathematicians have always understood that problem-solving is central to their discipline because without a problem there is no mathematics. Problem-solving has played a central role in the thinking of educational theorists," writes Jacob Klerlein and Sheena Hervey for Generation Ready. As a student of mathematics, you'll develop better systems for problem-solving, learning how applied mathematics solves real-world issues.

**4. Helps almost every career**

Knowledge of mathematics, and its complexities, can help in almost every career. The American Mathematical Society says a career centered on mathematics provides many opportunities: "Mathematical research and education are at the heart of some careers, while other careers utilize mathematics and its applications to build and enhance important work in the sciences, business, finance, manufacturing, communications, and engineering." Some careers and jobs that benefit from a degree in mathematics include engineers, computer programmers, statisticians, actuaries, mathematics teachers, and even business managers. All of these careers appear to be different, but the one thing they have in common is that each of them require a strong developed skill set in mathematics.

**5. Helps understand the world better**

Studying mathematics allows you to understand the world better. This seems obvious, but knowing the nuances behind how mathematics works can open your eyes and help you see the world around you in a new way. For example, Einstein's theory or relativity (what we perceive as the force of gravity in fact arises from the curvature of space and time; and objects such as the sun and the Earth change this geometry) is instrumental in furthering our understanding of the universe.

In fact, according to Natalie Wolchover in Quanta Magazine, this theory "showed that there's a give-and-take to space and time, which together make up the bendy, warping "space-time" fabric. Thinking this way led [Einstein] and others to a closer examination of the symmetries of the universe, or all the ways you can shift, rotate and move through it and still measure the same separation between objects or events as before. It is in the language of these symmetries that relativity simplified our mathematical description of the universe." Yes, mathematics can unlock the mysteries of the universe!

**6. It is the universal language**

Mathematics is the "universal language," meaning it is the one language in the world that is universally understood across different cultures, countries, and languages. The simple arithmetic of 2+2=4 is the same around the world. For example, Barbara Oakley writes in Nautilus about how she rewired her brain to become fluent in math: "When learning math and engineering as an adult, I began by using the same strategy I'd used to learn language. I'd look at an equation, to take a very simple example, Newton's second law of f = ma. [...] I memorized the equation so I could carry it around with me in my head and play with it."

For Oakley, mathematics is similar to learning a foreign language and she wanted achieve fluency. Equations, proofs, theorems, and working on a complicated mathematical problem are done the same way whether you speak Russian, French, English, or any language. All that matters is understanding the mathematical concept -- this can be immensely helpful if you are working on a project with a foreign country. You'll be able to communicate well on the numbers side of things, which is very productive, since you speak the same language: mathematics.

Mathematicians are solving today's biggest and most difficult problems in the world. Even the celebrated astronomer, physicist, and engineer Galileo Galilei said, "If I were again beginning my studies, I would follow the advice of Plato and start with mathematics." So if this is a field which interests you, take the chance to delve deeply into learning everything you can about mathematics. Plus, choosing mathematics as a degree path can lead to surprising, and fulfilling, career paths...






## குட்டிக் கதை ஒன்று படித்துப் பாருங்கள்



# காயத்திரி மந்திரம்

சக்கரவர்த்தி அக்பரும் அவருடை மதியூக மந்திரியான பீர்பாலும் ஒரு நாள் மாறுவேடமணிந்து நகர் சோதனை செய்து வந்தனர். அப்போது ஒரு பிச்சைக்காரன் எதிர்பட்டான். அவனைப் பார்த்த அக்பர், இந்த இனத்தவர்களுக்குப் பிச்சை எடுப்பது தவிர வேறு பயனுள்ள தொழிலெதுவும் செய்யத் தெரியாதா? என்று கேட்க, பீர்பாலின் மனத்தில் முள்ளெனத் தைத்தன அந்த வார்த்தைகள்.

பிறகு அந்தப் பிச்சைக்காரனைச் சந்தித்துக் கேட்டபொழுது தன்னுடைய பெரிய குடும்பத்தைக் காப்பாற்ற வேறு வழி புலப்படாததால் பிச்சையெடுக்க முற்பட்டேன் எனவும், இதன் மூலம் நாளொன்றுக்கு 25 காசுகள் கிடைக்கின்றன என்றும் கூறினான்.

அதைச் செவியுற்ற பீர்பால் அவன் பிச்சையெடுப்பதை விட்டு விட்டு தினந்தோறும் காலையில் ஸ்நானம் செய்துவிட்டு 10 தரம் காயத்திரி ஜபம் செய்வதாக இருந்தால் அன்றாடம் அவனுக்கு 50 காசுகள் தருவதாகக் கூறினார். அந்த ஏழையும் பிச்சை எடுப்பதை நிறுத்திவிட்டு பீர்பால் சொன்னபடி ஜபம் செய்து வந்தான். பயனெதுவும் கருதாமல் நாள் பூராகவும் காயத்திரி ஜபம் செய்து வந்ததால் அவன் முகத்திற்கு ஒரு அசாதரணமான காந்தி ஏற்பட்டது. இதை அறிந்த பீர்பால் அந்த ஏழையை அணுகி தினம் 108 தடவை காயத்திரி ஜபம் செய்தால் அவனுக்கு மாதம் 1,000 ரூபா தருவதாகச் சொன்னார். அதற்கும் ஒப்புக்கொண்டு அந்த ஏழையும் தீவிரமாக ஜபம் செய்தார்.


ஒரு நாள் அவனுக்கு அஞ்ஞான இருள் நீங்கியது. அவனுக்கு அமோகமான ஆன்மீக வளர்ச்சியும் தெய்வீக ஒளியும் ஏற்பட்டு, தினந்தோறும் திரளான மக்கள் அவனை நாடி வணங்கி அருள் பெற்று வந்தனர். ஒரு மாதம் ஆனதும் அந்த ஏழை பணம் வாங்க வராததால் பீர்பாலே அவன் வீட்டிற்கு வந்து பணம் கொடுத்தார். ஆனால் அவன் பணிவுடன் அதைப் பெற்றுக்கொள்ள மறுத்து, அவனுக்குச் சிறந்த ஆன்மீக வழியைக் காட்டியதற்காக பீர்பாலுக்கு நன்றி தெரிவித்தான்.

மறுநாள் பீர்பால் அக்பரை அந்த ஏழை வீட்டிற்கு அழைத்து வந்தார். அவன் முகத்தில் தென்பட்ட தேஜஸையும் அங்கு அருள் பெற வந்த மக்களையும் பார்த்து அக்பர் மிக ஆச்சரியப்பட்டார். அக்பரும் அவர் காலில் விழுந்து அருள் புரியுமாறு வேண்டினார். சில மாதங்களுக்கு முன் நீங்கள் இகழ்ந்து பேசிய அதே பிச்சைக்காரன் தான் இவன் என்று சக்கரவர்த்தியின் காதில் கிசுகிசுத்தார் பீர்பால். சக்கரவர்த்தி நம்பாமல் அந்த ஏழையை இந்த மாற்றத்திற்கான காரணத்தைக் கேட்டார். அவனும் நடந்ததைச் சொன்னான். காயத்திரி ஜபம் செய்ததால் வந்த பெருமை என்று பீர்பால் விளக்கினார்.

சுருங்க கூறின், காயத்திரி ஜபத்தினால் பட்ட மரம் தழைக்கும், தரித்திரனும் தனிகனாவான். வாழ்வில் நிம்மதியின்றித் தவிப்பவர்கள் நிம்மதியும், மனச் சாந்தியும் பெறுவார்கள். சத்தருக்கள் நாசமடைவார்கள், பாபங்கள் நீங்கிப் பிறவித்துயர் நீங்கும். வேதஸாரமான் இந்த மஹா மந்திரம் நம் ரிஷிகளின் அருளினால் நமக்குக் கிடைத்த அரிய பொக்கிஷம்.

## சிறுவர் அறிவுரை துணுக்கு

# சிரிப்பே பெரிய வரம்!



பிற விலங்குகளிடம் இல்லாத, அதேசமயம் மனிதனுக்கு மட்டுமே இருக்கும் ஒரு மிகப் பெரிய அதிசயம் நகைச்சுவை உணர்வு. எனவே நகைச்சுவை உணர்வை வளர்த்துக்கொள்வதை உறுதிசெய்வதும் பெற்றோரின் முக்கிய கடமைகளில் ஒன்று.

தன் வயதொத்த பிள்ளைகளிடம் சிரித்து விளையாடி மகிழ்வது, குழந்தைகளின் மன வளர்ச்சிக்கு தேவையான ஒன்று. இன்றைய நமது கல்விமுறை, குழந்தைகளின் சந்தோச வாழ்வையே அளிப்பதாக உள்ளது என்பது மறுக்க முடியாத உண்மை.

மக்களை மிக அதிகளவில் சென்றடையும் எழுத்தாவணங்கள் பத்திரிகைகள். மக்களின் சிந்தனையில் இவை முக்கிய செல்வாக்குச் செலுத்துகின்றன அல்லது செலுத்த முற்படுகின்றன. கடந்தகால சமூகத்தின் சமய, சமூக, அரசியல், பொருளாதார, பண்பாட்டுப் பரப்புக்களின் போக்கில் பத்திரிகைகளின் செல்வாக்குக் குறைத்து மதிப்பிட முடியாதது. வரலாறு எழுதுதலில் முதல்நிலைத் தகவல் வளங்களான பத்திரிகைகளின் உசாத்துணை அடிப்படையானதும் முக்கியமானதும் ஆகும். பத்திரிகைகளில் வரும் செய்திகளையும் துணுக்குகளையும் வாசிக்க மறக்காதீர்கள், நகைசுவை பகுதிகளை வாசித்து மனம்விட்டு சிரியுங்கள் – சிறப்பு மனதுக்கு சிறந்த மருந்து.

# தங்கை



தங்கை எந்தன் தங்கை
தள்ளாடி வரும் தங்கை
தங்கமான தங்கை

பட்டுச் சட்டை கேட்டு
புரளி செய்யும் தங்கை
வட்ட நிலவைக் காட்டி
வாங்க சொல்லும் தங்கை

பாட்டுச் சொல்லித் தந்தால்
பாடி ஆடும் தங்கை
பாட்டி மடியில் சென்று
படுத்தக் கொள்ளும் தங்கை

# ஓசைகேள்

மாடுகள் கத்தும் ஓசை கேள்
மா மா என்னுமே

ஆடுகள் கத்தும் ஓசைகேள்
மே மே என்னுமே

பூனை கத்தும் ஓசைகேள்
மியாவ் மியாவ் என்னுமே

காக்கை கத்தும் ஓசை கேள்
கா கா என்னுமே

நாய் குரைக்கும் ஓசைகேள்
வள் வள் என்னுமே

# ஒன்று இரண்டு

ஒன்று பின்னே இரண்டு
ஓடும் பந்து உருண்டு

மூன்று நான்கு ஐந்து
உந்து காலால் பந்தை

ஆறு ஏழு எட்டு
ஆகா கையைத்தட்டு

ஒன்பது பத்து
வாயை கொஞ்சம் பொத்து





# கணிதப் புதிர்கள்

01. ஒரு குரங்கு 20 அடி உயரம் உள்ள மரத்தில் ஏறத் தொடங்கியது.குரங்கு ஒரு மணி நேரத்திற்கு 3 அடி ஏறுவதும் 2 அடி சறுக்குவதுமாய் இருந்தது.மரத்தின் உச்சியைச் சென்றடைய குரங்கிற்கு எத்தனை மணி நேரம் தேவைப்பட்டிருக்கும்?

விடை - மொத்தமாக குரங்கு ஒரு மணி நேரத்திற்கு ஒரு அடி ஏறும்.
17 அடி ஏற 17 மணி நேரம் எடுத்துக்கொள்ளும்.
18 ஆம் மணியில் அது உச்சியை தொட்டு விட்டு 18 ஆம் அடிக்கு மீண்டும் சறுக்கி விடும்.
ஆதலால், குரங்கு உச்சியை சென்றடைய 18 மணி நேரம் எடுத்துக்கொள்ளும்.

02 . ஒரு பூக்கூடையில் உள்ள பூக்கள் ஒவ்வொரு 10 நிமிடத்திற்கும் இரு மடங்காகும். 60 நிமிடத்தில் அந்தக் கூடை நிரம்பி விட்டது. அரைக்கால் (1/8) கூடை நிரம்ப நிரம்ப எவ்வளவு நேரம் ஆனது?

விடை
முழுக்கூடை - 60 நிமிடங்கள்
அரைக் கூடை - 60 - 10 = 50 நிமிடங்கள்
(10 நிமிடங்களுக்கு ஒரு முறை இருமடங்காகும் என்றால்,
முழுக் கூடை ஆவதற்கு 10 நிமிடங்களுக்கு முன்னால் அரைக் கூடை நிரம்பி இருக்கும்)
கால் கூடை : 50 - 10 = 40 நிமிடங்கள்
அரைக்கால் கூடை : 40 - 10 = 30 நிமிடங்கள்
ஆக அரைக்கால் கூடை நிரம்ப 30 நிமிடங்கள் தேவை.

03 . ஐந்து குதிரைகள் 5 மூடை கொள்ளைச் சாப்பிட 5 நிமிட நேரம் எடுத்துக்கொண்டன என்றால், நூறு குதிரைகள் நூறு மூடை கொள்ளைச் சாப்பிட எவ்வளவு நேரம் பிடிக்கும் ?

விடை
ஐந்து குதிரைகள் ஐந்து மூட்டை கொள்ளை ஐந்துநிமிடங்களில் சாப்பிட முடியுமானால், ஒவ்வொரு குதிரைக்கும் ஒரு மூட்டை கொள்ளைச் சாப்பிட ஐந்து நிமிடங்கள் வேண்டும். ஆகவே, நூறு குதிரைகளுக்கும் நூறு மூட்டை கொள்ளைச் சாப்பிட வெறும் ஐந்து நிமிடங்களே போதும்.

04. ஆறு அணில்கள் நாவல்பழக் கொட்டைகளைப் பொறுக்கி ஒரு பெரிய கூடையில் போட்டன. அணில்கள் மிகமிக வேகமாக வேலை செய்ததால் கூடையில் போட்ட ஒவ்வொரு நிமிட முடிவிலும் அந்தக் கொட்டைகள் இரட்டிப்பாகின. பத்தாவது நிமிட முடிவில் அந்தக் கூடை முழுதும் நிரம்பி விட்டது. அந்தக் கூடையை அரை அளவு மட்டும் நிரப்பும்போது, அந்த அணில்கள் எவ்வளவு நேரம் எடுத்திருக்கும்?

விடை
பெட்டிகளில் போடப்பட்ட ஒவ்வொரு கொட்டையின் எண்ணிக்கையும் ஒவ்வொரு நிமிட முடிவிலும் இரட்டிப்பாகுமென்றால், பெட்டி அரை அளவு நிரம்ப 9 நிமிடங்களாகும். பிறகு அடுத்த ஒரு நிமிடத்தில் பெட்டியின் அடுத்த அரைப் பகுதியும் நிரம்பிவிடும்.

# தைப் புதிர்கள்

ஊர்ந்து செல்லும் தை - நத்தை
பொருள்களை வாங்கும் தை - சந்தை
படுக்க உதவும் தை - மெத்தை
அப்பாவைக் குறிக்கும் தை - தந்தை
அப்பாவின் சகோதரியைக் குறிக்கும் தை - அத்தை

# பைப் புதிர்கள்

கறி சமைக்க உதவும் பை - அகப்பை
வயலில் வேலைக்கு உதவும் பை - கலப்பை
உணவு உடலில் தங்கும் பை - இரைப்பை
மரங்களில் இதுவும் ஒரு பை - இலுப்பை
திருடன் வழிப்பறி செய்யும் பை - கைப்பை
கறியின் வாசனைக்கு உதவும் பை - நம்பை

# கைப் புதிர்கள்

துன்பத்தில் வரும் கை - அழுகை
அண்ணனின் இளையசகோதரியைக் குறிக்கும் கை - தங்கை
பெண்ணைக் குறிக்கும் கை - மங்கை
சிவனின் தலையில் இருக்கும் கை - கங்கை
தாத்தாவின் தலையில் தோன்றுவது - வழுக்கை
சிறிய தெருவைக் குறிக்கும் கை - ஒழுங்கை



# கல்விக்கதிர்



- அகரன் -

# புதிர்கள்

1. இரு தந்தைகளும் இரு மகன்மாரும் மீன் பிடிக்கச் சென்றனர். ஒவ்வொருவரும் தலா ஒரு மீன் வீதம் பிடித்தனர். ஆனால் பிடிபட்ட மொத்த மீன்கள் மூன்றாகும், அது எப்படி?

விடை :- மகன், தந்தை, பாட்டன் மூவருமே மீன் பிடித்தனர்

2. வடக்கு வாசல் வீடொன்றின் குசினி மேசையின் மீது கைபிடியுள்ள ஒரு தேநீர்க் கப் இருக்கிறது.குசினி, வீட்டின் வட – கிழக்கு மூலையில் இருக்கிறது. கிழக்குத் திசையை நோக்கி நிற்கும் ஒருவருக்கு அந்தக் கப்பின் கைபிடி வலப்பக்கமாக இருக்கிறது.

கேள்வி :- கப்பின் கைபிடி எந்தப் பக்கத்தில் இருக்கிறது?

விடை: கப்பின் கைபிடி அதன் வெளிப்பக்கத்தில் இருக்கிறது.



3. இலங்கையில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒருவரை இந்தியாவில் அடக்கம் செய்ய முடியுமா?

விடை: முடியாது. அவர் இன்னும் உயிருடனுள்ளார்.

# அறிவோம்

1. வானொலியின் தந்தை – மார்க்கோணி
2. விமானத்தைக் கண்டுபிடித்தவர்கள் – ரைட் சகோதரர்கள்
3. மின்குமிழைக் கண்டுபிடித்தவர் – தோமஸ் அல்வா எடிசன்
4. தொலைபேசியைக் கண்டுபிடித்தவர் – அலெக்சாண்டர் கிரகம்பெல்
5. கணினியின் தந்தை – சார்லஸ் பபேஜ்
6. ஏழையாகப் பிறந்து அமெரிக்க ஜனாதிபதி ஆனவர் – ஆபிரகாம் லிங்கன்
7. ஏழைகளுக்கும் நோயாளர்களுக்கும் தொண்டாற்றியவர் – அன்னை தெரேசா
8. இந்திய விஞ்ஞானி அப்துல் கலாம் முன்னாள் இந்திய ஜனாதிபதி.
9. ஐசாக் நியூட்டன் புவியீர்ப்பு விசையைக் கண்டுபிடித்தார்.
10. கொழுகொம்பின்றித் தவித்த முல்லைக்குத் தேரீந்தவர் – வள்ளல் பாரி மன்னன்
11. காட்டில் மயில் குளிரால் நடுங்கி அகவுவதைக் கேட்டு, மயிலுக்குப் போர்வை வழங்கிய வள்ளல் அரசன் – பேகன்
12. சிறு பிள்ளைகள் பாம்பைத் துன்புறுத்தியபோது தடுத்தவர் – புத்தபெருமான்
13. புறாவை இரையாக்க துரத்திய பருந்துக்கு தன்னிடம் தஞ்சமடைந்த புறாவைக் காக்கவும் பருந்தின் பசியைப் போக்கவும் தனதுடலை அர்ப்பணம் செய்தவர் – சிபி சக்கரவர்த்தி

# ஓரெழுத்துப் புதிர்கள்

சிரிக்கும் எழுத்து – ஈ
அழைக்கும் எழுத்து – வா
கேட்கும் எழுத்து – தா
துரத்தும் எழுத்து – போ
வெறுக்கும் எழுத்து – சீ
உதவும் எழுத்து – கை
பூசும் எழுத்து – மை
வலிக்கும் எழுத்து – ஆ
சுடும் எழுத்து – தீ
மலரும் எழுத்து – பூ

# அறிவியல் துணுக்கு

1. மீன் தன் வாழ்நாள் இறுதி வரை வளர்ச்சி அடைந்து கொண்டே இருக்கும்.
2. கெட்டுப்போகாத உணவுப்பொருள் – தேன்
3. கிளியும் முயலும் தங்கள் பின்னால் இருப்பதை தலை திருப்பாமல் காணமுடியும்.
4. பனிக்கரடிகள் ஒரே அமர்வில் 86 பென்குயின்களை விழுங்குமாம்.

# விகடத்துணுக்கு

ஆசிரியர்:- தேர்வுகளில் ஏன் பெண்கள் மட்டும் அதிக மதிப்பெண்கள் பெறுகின்றனர்?
மாணவன்: - மதிப்பெண்கள் என்றுதான் சொல்லுகிறோம். மதி ஆண்கள் என்று கூறுவதில்லை!

# சிந்தனைப் புதிர்கள்

ஆடு கத்தும் மாதம் எது? – மே
பேசாத மை என்ன மை? – ஊமை
வறுக்காத வறை என்ன வறை? – ஏவறை
பசியுள்ள மாதம் எது? – ஐப்பசி
வரி செலுத்தும் மாதங்கள் எவை? – ஜனவரி, பெப்ரவரி
வாயில் மலரும் பூ எது? – சிரிப்பு

# தன்நலம் மறந்தவர்

முதன் முதலில் கைகளில் ஏந்தும் பொழுதே
கண்களில் ஆனந்த நீர் பெருக்கெடுத்தது
அன்று முதல் ஒவ்வொன்றாய்
பார்த்துப் பார்த்துச் செய்திடுவார்
பிள்ளை உடல் வாடாது பேண
தன்னுடலை வாட்டிடுவார்
மகவதன் கரங்களின்
மென்மை பேணிட
தன்கையை மரமாக்கிடுவார்
கஷ்டங்கள் சூழ்ந்தாலும்
சளைக்காத முயற்சியுடன்
தன்வாழ்வைத் தானமாக்கி
நம்வாழ்வை உயர்த்தியே
என் பிள்ளை ஊர் போற்ற
வாழ வேண்டும் என்றே
தன் கண்ணுறக்கம் தொலைத்து
கண்ணிமையாய்க் காத்து நிதம்
எண்ணிலா இன்பங்கள்
எம்வாழ்வில் ஈந்திடுவார்
வெளிக்காட்டா அன்புடனும்
வேஷமில்லாப் பாசத்துடனும்
நேசத்துடன் சீர்திருத்தி
சிற்பமாக்கும் உளியாவார்
அறிவுரையில் அப்துல்கலாமாய்
நெறிமுறையில் விவேகானந்தராய்
போதனைகளில் புத்தனுமாய்
அர்ப்பணத்தில் இயேசுவுமாய்
காப்பதிலே கடவுளுமாய்
என பாத்திரங்கள் ஏற்பதிலும்
தந்தைக்கு நிகராய் வேறு உறவு
இவ்வுலகில் அமைந்திடாது
தந்தைக்கு நிகர் தந்தையே

டக்ஷனா சிறீஞானானந்தன்


# எமோஜிகள்



- நேதா -

இதமான மழையில்
நனைந்துகொண்டிருந்தது நள்ளிரவு
ஒதியமரத்து பூக்கள் காற்றில் மெல்ல மிதந்து
விழுந்துகொண்டிருந்தது.
கண்ணில் தூக்கம் ஒட்டவில்லை
லேசாக இருந்த பொழுதில்
மனம் கறாராக விம்மி தணிந்தது
சுற்றியும் யாரும் இல்லை
துக்கத்தில் விழுந்த மனதை
ஒரு சில வார்த்தைகளால் சரியாக்க
தொலைபேசியில் யாரையாவது அழைக்கவேண்டும்
சத்தமாக சிரிக்க வேண்டுமாயின்
அதே தொலைபேசிதான்
ரச் ஸ்க்ரீனில் லயித்து போன
மனங்கள்
உணர்வுகளை கொண்டாட
எமோஜிகள்
இப்படியேதான் எனி எந்த காலத்திலும்
வாழ்வதற்கு ஒரு கைலெவலான தொலைபேசி
தேவையாய் இருக்கிறது
இப்போது இரவின் மீது மழை கனத்து பெய்தது
எல்லோருக்கும் இப்போது
நேரடியாக பரிமாறிக்கொள்ள ஒரு அன்பு
தேவையாக இருக்கிறது.
சொற்கள் பெருகித்ததும்பும் அன்பை
என் கண்ணுக்கெட்டிய தூரத்தில்
தெரிவதாய் இல்லை

# கலைக் கதிர்



## படித்ததில் பிடித்தது

# காரண காரியம் நீ தான்...!

ஞானி ஒருவரை சந்தித்த இளைஞன் ஒருவன், ஐயா....யார் எதைச்செய்தாலும் அதிலுள்ள குறைகளே எனக்குத் தெரிகின்றன. ஏன் இப்படி? என்று கேட்டான். சிலருடைய காலம் பிறருடைய குறைகளை ஆராய்வதிலேதான் கழிகின்றது. நீயும் அதற்கு அடிமையாகிவிட்டாய் மகனே. ஆனால் அப்படியான மனப்போக்கை நாம் திருத்திக்கொண்டு வாழ்வதுதான் சிறந்தது என்றார் அந்த மகான்.


அந்த விபரீதமான போக்கை எப்படி மாற்றலாம்? ஞானியிடம் வினவினான் அவன்.

பூவேலை செய்யப்பட்ட துணி ஒன்றை எடுத்தார் ஞானி. அதன் ஒரு பக்கத்தை இளைஞனிடம் காட்டி, இதில் என்ன தெரிகிறது? என்று கேட்டார். ஒழுங்கற்ற முறையில் குறுக்கும் நெடுக்குமாகச் செல்லும் நூல் தெரிகிறது..! ஞானி துணியின் மறுபக்கத்தைக்காட்டி அதே கேள்வியைக் கேட்டார்.

அழகான பூ தெரிகிறது...! இப்படித்தான் எந்த விடயத்திலும் நீ எந்தப் பக்கத்தில் இருந்து பார்க்கிறாய் என்பதைப் பொறுத்தே குறையும் நிறையும் தெரியும். எதிலும் மற்றவர்களுக்கு எதிராக இருப்பதை விட்டு அவர்களுக்கு அருகில் இருந்து பார்...அப்போது எல்லாமே நிறைவாகத் தெரியும்..! ஞானி சொல்ல, இளைஞனுக்கு தனது தவறு புரிந்தது.

**தீபகாந்தன் கேசவி**

# நளவெண்பா காதல்



**கண் இமைத்தலால்**
**அடிகள் காசினியில் தோய்வதால்**
**எண்ணி நறுந்தா மரைவிரும்பு நன்னுதலே அன்னாள்**
**நன்னுதல் அறிந்தாள் நளன்றன்னை ஆங்கு**

தேவர்களுக்கு மனிதர்களிடமிருந்து சில வேறுபாடுகள் உண்டு. தேவர்களின் கண்கள் இமைக்காது. கால்கள் பூமியில் படாது. அவர்கள் சூடும் மாலை வாடாது. ஆனால் மனிதர்களிடத்தில் இவற்றை (கண் இமைத்தல், மாலை வாடுதல், வியர்வை) இயல்பாகக் காண முடியும். இவை நளனிடமும், காணப்பட்டன. இதை வைத்து நளனை மிகச் சரியாக அடையாளம் கண்டு , மாலை சூட்டினாள் தமயந்தி.

அவர்களுக்கு இந்திரசேனன், இந்திரசேனை என்ற குழந்தைகள் பிறந்தனர். தமயந்தியை பெற முடியாத தேவர்கள், சனீஸ்வரரிடம், நளனைப் பிடிக்கும்படி கூறினர். கடமை உணர்வு மிக்கவர்களை சனீஸ்வரர் ஏதும் செய்யமாட்டார். அதே நேரம், கடமையில் சிறுகுற்றம் இருந்தாலும் பொறுக்க மாட்டார். நளனோ நல்லாட்சி செய்தான். இப்படிப்பட்ட ஒருவனை அவரால் பிடிக்க முடியவில்லை. ஒருமுறை பூஜைக்கு தயாரான போது, சரியாகக் கால் கழுவவில்லை. இதைக் கூட சரியாக செய்யாத மன்னன் நாட்டை எப்படி ஆள முடியும்? என கருதிய சனி, அவனைப் பிடித்து விட்டார்.

இதன் பின், புட்கரன் என்பவனிடம் சூதாடி பொன், பொருளை இழந்தான். குடும்பத்துடன் நாட்டை விட்டு வெளியேறினான். காட்டில் மனைவி, குழந்தைகள் படும் துன்பத்தைக் கண்ட நளன், ஒரு முனிவர் மூலம் குழந்தைகளை தன் மாமனார் வீட்டுக்கு அனுப்பினான். பின், மனைவியையும் பிரிந்தான். நடுக்காட்டில் தவித்த அவளை, ஒரு மலைப்பாம்பு சுற்றியது. ஒரு வேடன் அவளைக் காப்பாற்றினான். ஆனால், அவள் மீது ஆசை கொண்டு விரட்டினான். தப்பித்த அவள், சேதிநாட்டை அடைந்து பணிப்பெண்ணாக இருந்தாள். ஒரு வழியாக அவளை, தமயந்தியின் தந்தை கண்டுபிடித்து வீட்டிற்கு அழைத்துச் சென்றார்.

தமயந்தியை பிரிந்த நளன், காட்டில் கார்கோடன் என்னும் பாம்பு கடித்து கறுப்பாக மாறினான். அப்பாம்பு ஒரு அற்புத ஆடையை வழங்கிச் சென்றது. அழகு இழந்த அவன், அயோத்தி மன்னன் ரிது பன்னனின் தேரோட்டியாக வேலை செய்தான். அவன் அங்கிருப்பதை அறிந்த தமயந்தி, நளனை வரவழைக்க தனக்கு மறுசுயம்வரம் நடப்பதாக அறிவித்தாள். ரிதுபன்னன் அதற்கு புறப்படவே, நளனும் வருத்தத்துடன் தேரோட்டியாக உடன் வந்தான். அப்போது, நளனைப் பிடித்த சனி நீங்கியது.

தேரோட்டியாக இருந்த நளனையும், தமயந்தி அடையாளம் கண்டாள்.

நளன், கார்கோடன் அளித்த ஆடையை அணிந்து தன் அழகான சுயஉருவை மீண்டும் பெற்றான். இவர்கள் மீண்டும் இணைந்தார்கள்.

**காரிருளிற் பாழ்மண்ட பத்தேதன் காதலியைச்**
**சோர்துயிலில் நீத்தல் துணிவன்றோ - தேர்வேந்தற்**
**கென்றறைந்தால் நேர்நின் றெதிர்மாற்றம் தந்தாரைச்**
**சென்றறிந்து வாவென்றாள் தேர்ந்து**

கரியநிறமுள்ள இருட்டில் (நள்ளிராப் பொழுதில்) பாழடைந்த ஓர் மண்டபத்திடத்து தன் காதல் மனைவியை அயர்ந்த உறக்கத்தின் போது விட்டுவிட்டுச் செல்லுதல் தேரையுடைய மன்னனுக்கு ஒத்த செயலாகுமோ? என்று நீ கூறினால் (அதைக் கேட்டவருள்) அதற்கு மறுமொழியாக உரைக்கின்றவர் எவராக இருப்பினும் அவரை நீ போய் அறிந்து கொண்டு வருக வென்று நன்கு உணர்ந்து கூறினாள்.

**யாழ் மகள் சைந்தவி**

# நேர்காணல்



நேர்கண்டவர் - திருமலை தட்சா

**Make Up Beauty Care அழகுக்கலை நிறுவனத்தின் உரிமையாளர் கதிர்காமநாதன் டிலுஷா உடனான நேர்காணல்.**



**'வசதியாகவுள்ளவர்கள் மட்டுமன்றி சாதாரண வாடிக்கையாளர்களும் எனது அழகுக்கலை நிலையத்தை நாட வேண்டும். சகலவிதமானவர்களுக்கும் சேவை கிடைக்கப் பெற வேண்டுமென்பதே எனது நோக்கமாகும்.'**

**01. உங்களைப் பற்றிய சிறு அறிமுகம்?**

நான் கதிர்காமநாதன் டிலுஷா. Make Up Beauty Care என்ற பெயரில் அழகுக்கலை நிலையத்தை நடாத்தி வருகின்றேன். 2020ம் ஆண்டு அழகுக் கலைத் துறையை ஒரு தொழிலாக முன்னெடுத்து இரண்டு வருடங்களைக் கடந்து தற்போது மூன்றாவது வருடத்தில் கால் பதித்துள்ளேன். எனது அழகுக்கலை நிலையத்தில் ஒரு வேலைக்கு மட்டும் நான் முக்கியத் துவம் கொடுப்பதில்லை. சகல வேலைகளுக்கும் முக்கி யத்துவம் கொடுத்து வருகின்றேன்.

**02. அழகுக்கலைத் துறையில் உங்களுக்கு ஏற்பட்ட ஆர்வம் பற்றி?**

எனது 16வது வயதிலிருந்து இத்துறையில் ஈடுபாடு கொண்டேன். எனது அயல்வீட்டு சகோதரி ஒரு அழகுக் கலை நிபுணர். அவருடன் சேர்ந்து மேக்கப் ஓடர்களுக் குச் செல்வேன். அத் தருணங்களில் எனக்கு இத்துறை யில் மென்மேலும் ஆர்வம் அதிகரித்தது. அதன் நிமித் தம் அழகுக்கலை சம்பந்தப்பட்ட காணொலிகளை வலை ஒளியில் [youTube] பார்த்து கற்கத் தொடங்கினேன். hair style வீடியோக்கள் அதிகமாக பார்ப் பேன். நான் மணப்பெண் அலங்காரம் மட்டுமல்லாது Guest Makeup கூட அழகாக, வித்தியாசமாக செய்து அலங்கரிப்பேன். எல்லோரும் செய்வதைப் போல் செய்யாமல் வித்தியாசமாக செய்ய எனக்கு அதிகள வில் பிடிக்கும். இவ்வாறாக அழகுக்கலையில் ஏற்பட்ட ஆர்வம் தொடர்ச்சியாக இத்துறையினை முறைப் படி கற்றுத் தேர்ந்து தனியாக அழகுக்கலை நிலை யத்தை அமைத்து நடாத்தி வருகின்றேன்.

**03. உங்களது அழகுக்கலை நிலையம் பற்றியும், அதன் சேவைகள் பற்றியும்?**

எனது அழகுக்கலை நிலையத்தின் பெயர் Make Up Beauty Care. இவ் பெயரினை வைத்தவர் எனது கணவர். வித்தியாசமாக பெயர் வைக்க வேண்டு மென்றும், மேக்கப் என்று நினைக்கும் போது எல் லோரின் மனதிலும் Make Up Beauty Care ஞாபகம் வர வேண்டுமென்றுதான் இப் பெயரினை வைத்தார். எனது அழகுக்கலை நிலையத்தில் இத்துறை சார்ந்த சகலவிதமான சேவைகளையும் முக்கியத்துவம் கொடுத்து செய்து வருகின்றேன். வித்தியாசமாக Dandruff treatment, Nail Exchange போன்ற சேவைகளையும் செய்து வருகின்றேன். அத்துடன் எனது அழகுக்கலை நிலையத்தில் குறைந்த விலை யிலிருந்து கூடிய விலை வரைக்கும் எமது சேவைகள் உள்ளன. வசதியாகவுள்ளவர்கள் மட்டுமன்றி சாதாரண வாடிக்கையாளர்களும் எனது அழகுக்கலை நிலை யத்தை நாட வேண்டும். சகலவிதமானவர்களுக்கும் சேவை கிடைக்கப் பெற வேண்டுமென்பதே எனது நோக்கமாகும்.

**04. இத் துறையில் நீங்கள் முகங்கொடுக்கும் சவால்கள் பற்றி?**

பெண்கள் தனியாக தொழில் செய்வது மிகக் கடி னம். அதுவும் இத்துறையில் இலகுவானதல்ல. ஒவ் வொரு விடயத்தையும் நிதானமாக, நுணுக்கமாக பார்த்து செய்து பயணிக்க வேண்டும். வாடிக்கையாளர் களின் திருப்தி தான் எனக்கு முக்கியம். அதுவே மிகப் பெரிய சவால். வாடிக்கையாளருக்கு என்ன தேவை என்பதையறிந்து அதற்கேற்றாற் போல் சேவையை வழங்க வேண்டும். இவை எல்லாவற்றையும் கடந்து இத்துறையில் முன்னேறிச் செல்வதற்கு உறுதுணை யாக எனது கணவர் உள்ளார் என்பதை இத் தருணத் தில் பெருமையாக கூற விரும்புகின்றேன்.

**05. கோடை காலத்தில் பெண்கள் தங்கள் சருமத்தை பொலிவுடன் வைத்திருப்பதற்கு தேவையான விடயங்கள் பற்றி?**

கோடை காலத்தில் வரும் சருமப் பிரச்சினைகள் அதிகமாகும். இது பெண்களுக்கு மிகவும் சவாலுக் குரிய விடயமாகும். கோடை காலத்தில் சருமம் நீர்த் தன்மையை இழந்து விடுகிறது. இவ்வாறான சந்தர்ப் பங்களில் பழங்கள், நீர்த்தன்மை கொண்ட காய்கறி கள், கீரை வகைகள், தயிர் போன்றவற்றை உட்கொள்ள வேண்டும். தயிரை முகத்தில் பூசுதல் மிகவும் சருமத் திற்கு நல்லது. வெயிலில் செல்லும் நேரங்களில் சருமப் பாதுகாப்பு கிறீம் வகைகளை ஆலோசனையுடன் பூசுதல் நல்லது. இவ்வாறான விடயங்களை கடைப் பிடிப்பதன் மூலம் சருமத்தை பாதுகாத்துக் கொள்ள முடியும்.

**06. அழகுத்துறை தவிர வேறு துறைகளில் உங்களது நாட்டம் பற்றி?**

ஆரி வேர்க், தையல் போன்ற துறைகளை கற்கலாம் என்று முடிவெடுத்துள்ளேன். பெண்களாகப் பிறந்த எல்லோருக்கும் தேடல் அவசியம். ஒவ்வொரு நாளும் புதிது புதிதாய் கற்றுக் கொள்ள வேண்டும். அப்போது தான் வாழ்க்கை சுவாரஸ்யமாக அமையும். எனது கணவர் எனக்கு இவ்வாறான ஆலோசனை செய்வார். பெண்களாக பிறந்து விட்டோம் எம்மால் என்ன செய்ய முடியும் என்று நினைக்காமல் ஏதாவது துறையில் சாதிக்க வேண்டும்.

**07. திருகோணமலை மாவட்டத்தில் அழகுக் கலைத்துறை மீதான பார்வை எவ்வாறு உள்ளது?**

திருகோணமலை மாவட்டத்தில் இத்துறை மீதான பார்வை சிறப்பாகவும், வரவேற்கத்தக்கதாகவும் உள்ளது. மணப்பெண் அலங்காரத்தில் அதிக வரவேற்பு உள்ளது. அழகுக்கலைத் துறையில் நிறைய சேவை கள் உள்ளன. ஆனால் இங்கு அதிகமாக எல்லோரும் அலங்கார ஒப்பனைகளில் மட்டுமே நாட்டமாக உள் ளனர். நான் கொழும்பில் அழகுக்கலை நிலையம் வைத்திருந்தேன். அங்கு அதிகமாக Straightening, Pedicure, Manicure, Hair cut போன்ற சேவைகள் நிகழும். ஆனால் திருகோணமலையில் அதிகம் ஒப்பனைகளில் தான் சேவைகள் இடம்பெறுகின்றன. வாடிக்கையாளர்களுக்கு சகல சேவைகளையும் தெரியப்படுத்த வேண்டுமென்பதே எனது ஆசையா கும்.

**08.நிறைவாக, சாதிக்க நினைக்கும் பெண்களுக்கு கூற விரும்புவது?**

நாம் பெண்கள் அதனால் வெளியில் செல்லக் கூடாது, வேலைக்கு போகக் கூடாது, பிள்ளைகளை வளர்ப்பது, சமையலறையில் இருப்பது தான் நமது கடமை என வீட்டுக்குள்ளேயே உங்களுடைய இலட் சியங்களுடன் முடங்கியிருக்காதீர்கள். நமக்கென்று வாழ்க்கையுள்ளது. வெளியில் வந்து பாருங்கள். எத் தனையோ பெண்கள் தங்களுடைய கடமைகளை யும், பொறுப்புகளையும் நிறைவேற்றிக் கொண்டே சாதிக்கின்றார்கள். உங்களுக்கான பாதையை தேர்ந் தெடுங்கள். அப் பாதையில் அதிகமான கஷ்டம் வரலாம். ஆனால் ஒவ்வொரு கஷ்டங்களையும் தாண்டி பய ணித்து செல்லுங்கள் வெற்றி கிடைக்கும்! நானும் பல போராட்டங்களை கடந்துதான் வந்துள்ளேன். சாதிக் கப் போராடுங்கள்! சாதனைகளை அடையுங்கள்! முயற்சி செய்து தோற்றவர் எவருமில்லை.

**நன்றி!**

# மனிதநேயம், தமிழ்பற்று, பொது நலநாட்டம் மிக்க மருத்துவர் சண்முகநாதன் நம்மை விட்டுப் பிரிந்தார்

**- வே.வரதசுந்தரம் -**

திருகோணமலையில், லிங்கநகரில் ஆயுர்வேதமருத்துவ சிகிச்சைநிலையம் நடாத்தி தமிழ், சிங்கள, இஸ்லாமியர் என மூவின மக்களுக்கும் மருத்துவ சேவையாற்றிய மருத்துவர் வீ.சண்முகநாதன் ஜூன் மாதம் 9 ஆம் திகதி லண்டன் மாநகரில் காலமானார் என்ற துயரச்செய்திகேட்டு நெஞ்சம் துனுக்குற்றுப் போயிற்று. அந்த துயர வேதனையிலிருந்து எமது குடும்பத்தார் இன்னும் மீளவில்லை.

திருகோணமலையிலும் கொழும்பிலும் தமிழ்நாட்டிலும் அவருடனும் அவரது குடும்பத்தாருடனும் நீண்ட காலமாக பழகிய நினைவலைகள் மாறி மாறி தோன்றுகின்றன.

அவருடைய கருத்துக்கள், சீர்திருத்த சிந்தனைகள், சொல்லாடல் திறமை, வாதத்திறமை ஆகியவை எம்மைக் கவர்ந்தன.

மட்டக்களப்பு கோட்டை முனையை பிறப்பிடமாகக்கொண்ட இவர் திருகோணமலையைச் சேர்ந்த பண்டிதர் நமசிவாயம் அவர்களின் மகள் பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியை உமா தேவியை கரம் பிடித்து இல்லற வாழ்வில் ஈடுபட்டு நான்கு புதல்வர்களையும் ஒரு புதல்வியையும் ஈன்றெடுத்தார். தன்னுடைய வாழ்வில் இலங்கையிலும் தமிழ்நாட்டிலும் நெருக்கடிகளுக்கு தன்னம்பிக்கையுடன் முகம்கொடுத்து எதிர்நீச்சல் அடித்து முன்னேறியவர்.

கொழும்பு ராஜகிரிய ஆயுர்வேத வைத்தியசாலையில் நீண்டகாலம் கடமையாற்றி ஓய்வுபெற்றவர். ஓய்வு பெற்றபின் திருகோணமலை லிங்க நகரில் தனது சேவையைத் தொடர்ந்தவர்.

இளமைக் காலத்தில் மட்டக்களப்பில் தந்தை செல்வா தொடக்கிய தமிழரசுக்கட்சி அரசியலில் ஈடுபட்டார். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சொல்லின் செல்வர் செ.இராஜதுரையின் ஆதரவாளராக இருந்தவர்.

'ஒன்றுபட்ட, பிளவுபடாத இலங்கையில் வட – கிழக்கு மாகாணங்கள் இணைந்த மாநிலத்தில் சுயாட்சி பெறுவதே தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கு தீர்வாகும்' என்பதே இவரது நிலைப்பாடாகும்.

தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் வாழ்ந்த இவர் அண்மையில் குடும்பத்தாருடன் லண்டனில் குடியமர்ந்தார்.

சில மாதங்களுக்கு முன்பு லண்டனிலிருந்து திருகோணமலைக்கு வருகை தந்திருந்தபோது என்னைப் பார்க்க வந்திருந்தார். கடும்நோயுற்று அறையில் படுக்கையில் இருந்த என்னை நோக்கி, 'மாஸ்டர் உங்களுக்கு ஒரு நோயும் இல்லை. முழு நாளும் படுக்கையில்கிடக்காதீர்கள். எழுந்து வழமை போல் வீட்டில் உலாவுங்கள்' என்று உரத்த குரலில் உரிமையுடன் தன்னம்பிக்கை ஊட்டியவர்.



இளமைக் காலத்தில் தமிழ் மொழியில் ஈடுபாடு கொண்டவர். தமிழ் இலக்கியத்தை நன்கு பயின்றவர்.திராவிட முன்னேற்றக் கழக முன்னோடிகளான அறிஞர் அண்ணாத்துரை, கலைஞர் கருணாநிதி, பேராசிரியர் நெடுஞ்செழியன், கவிஞர் கண்ணதாசன் ஆகியோரின் ஆக்கங்களை ஆர்வத்தோடு படித்தவர்.

இவர் கோயில் சடங்குகளில் நம்பிக்கை இல்லாமல் இருந்தாலும் கடவுள் பக்தி உள்ளவராக இருந்தார். தனது மாணவ பருவத்தில் தனது ஊரில் உள்ள கோயிலில் தொண்டு செய்திருந்ததாக கூறியிருந்தார்.

திருகோணமலைக்கு அண்மைக்காலங்களில் வரும் போதெல்லாம் திருகோணமலைப் பத்திரகாளி அம்மன் கோயிலுக்கு தனது துணைவியாருடன் சென்று வழிபட தவறியதில்லை. கோயில் அறங்காவலர் வேதகாமாமணி ரவிச்சந்திரக் குருக்கள் ஐயாவுடன் நீண்டநேரம் கலந்துரையாடுவார். அண்மையில் இவ்வாண்டு மார்ச் மாதம் கொடியேற்றத் திருவிழாவிற்கு சென்று வழிபாடு செய்தார் .இவ்வாறு இவரிடம் கடவுள் பக்தி காணப்பட்டது

இவரது துணைவியார் உமாதேவிக்கு பாபா தரிசனம் பெற வேண்டும் என்ற ஆர்வம் காணப்பட்டதால் நாங்கள் தமிழகம் சென்ற போது புட்டபர்த்தி யாத்திரை போக எங்களோடு வருமாறு அழைத்தேன். எனது வேண்டுகோளை ஏற்று எங்களுடன் அவரது தமிழ்நாட்டு இல்லத்திலிருந்து பாபா தரிசனம் செய்ய வந்தார். புட்டபர்த்தியில் தனது மனைவியுடன் மூன்று நாள்கள் தங்கியிருந்தார்.

புட்டபர்த்தி பிரசாந்தி நிலையத்தில் நடைபெற்ற ஓங்காரம். சுப்ரபாதம், நகரசங்கீர்த்தனம், பஜனை, சத்சங்கம் ஆகிய நிகழ்வுகளில் ஆர்வத்துடன் ஈடுபட்டார்.

புட்டபர்த்தியில் பாபா வழிகாட்டலில் நடைபெறும் மருத்துவ சேவைகள், கல்விச் சேவைகள், சமூகசேவைகள், கிராமத்து பெண்களுக்கான தொழில் வாய்ப்பு ஆகியவற்றைக் கண்டு மகிழ்ந்து பாராட்டினார். பகவான் பாபாவின் சமயசமரச சிந்தனைகள் இவரைவெகுவாகக் கவர்ந்தன. பாபா அனைத்து மதங்களையும் அங்கீகரிப்பதையும் அவை உண்மை என்று ஏற்பதையும் இவர் பாராட்டினார். பிரசாந்தி நிலையத்திற்கு இவர் விஜயம் செய்த மூன்று நாள்களும் இந்தியாவின் பல மாநில சாயி பக்தர்களும், இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் மற்றும் மேலைநாட்டு சாயி அடியார்களும் பல்வேறு மதத்தைச் சார்ந்தவர்களாக இருந்தபோதிலும் ஒரு கூரையின் கீழ் ஆயிரக்கணக்கில் ஒன்று கூடி அமர்ந்து வழிபாடு செய்வதை கண்டு மகிழ்ந்தார்.

அங்கு நின்ற மூன்று நாள்களும் ஆறு தடவை பாபாதரிசனம் பெற்றார். இறுதிநாள்காலை தமிழ் நாடு புறப்பட்டபோது புட்டபர்த்தி யாத்திரை எங்களுக்கு மனச்சாந்தி தந்தது, ஆனந்தம் தந்தது என்று கூறினார்.

அன்னாரின் ஆத்மா திருகோணமலை மண்ணின் காவல் தெய்வம் பத்திரகாளி அம்பாளின் திருவடிகளில் சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்.

---

# புலம்பெயர் மண்ணின் புலமையில் தேர்ந்த ஊடகவியலாளர்!

## 'தமிழ் ரைம்ஸ்' ராஜநாயகத்துக்கு அஞ்சலி





இங்கிலாந்துக்கு புலம்பெயர்ந்த ஈழத் தமிழர் வரலாற்றில் மிகமூத்த தமிழ் ஊடகவியலாளராக திகழ்ந்த பி. ராஜநாயகம் அவர்களின் மறைவு, நேர்மையோடும் அர்ப்பணிப்போடும் தமிழர் விவகாரங்களில் சர்வதேச ரீதியாக பணியாற்றிய ஒரு சிறந்த சேவையாளரின் பாரிய இழப்பாகும்.

லண்டனில் கடந்த 25 ஆண்டுகளாக வெளிவந்த 'TAMIL TIMES' என்ற ஆங்கில மாத சஞ்சிகையின் ஆசிரி யராக திகழ்ந்த இராசநாயகம் அவர்கள் ஆற்றிய பெரும் பணி, தமிழர்களின் ஊடக வரலாற்றில் தனி அத்தியாயத்தைக் குறித்து நிற்கின்றது.

தமிழர்களின் தாயக விடுதலைப் போராட்டம் உச்சம் அடைந்த காலத்தில் சர்வதேச அளவில் 'தமிழ் ரைம்ஸ்' ஆற்றிய பணி அக்காலத்தின் உண்மையான சாட்சியமாகிய விளங்கியது.

இங்கிலாந்தில் வெளியாகினும், உலகெங்கும் பரந்து வாழும் தமிழர்களின் இல்லங்களிலெல்லாம் 'தமிழ் ரைம்ஸ்' மாத இதழ் அவசிய வாசிப்புக்குரிய தொன்றாகவே இருந்தது. இந்த ஆங்கில சஞ்சிகை பல்வேறு நாடுகளுக்கும் விநியோகம் செய்யப்பட்டது.

இப்பத்திரிகைக்கான வெளியீட்டில் அனைத்து அம்சங்களையும் ஒருங்கிணைத்து ராஜநாயகம் செயற்பட்ட விதம் ஆசிரியரின் ஆளுமையின் சிறப்பைக் காட்டிக் கொண்டதாகும்.

தமிழ் மக்களுக்காக ஜெனிவாவில் மனித உரிமைகள் தொடர்பிலும் ராஜநாயகம் நீண்டகாலம் அயராத பணியாற்றினார்.

கடந்த சில தினங்களாக மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருந்த அவர் லண்டனில் காலமானார்.

தமிழர்களின் தாயக விடுதலைப் போராட்டத்திற்காக ஓங்கிக் குரல் கொடுத்த ராஜநாயகம் அவர்கள் ஒரு சமசமாஜிஸ்டாக ஆரம்பத்தில் தனது அரசியல் பணிகளை முன்னெடுத்தவர். பின்னர் ஒரு தொழிற்சங்கவாதியாகவும் செயற்பட்டார்.

புலம்பெயர் மண்ணில் ஆங்கிலத்தில் இயங்கக் கூடிய புலமை தேர்ந்த பத்திரிகையாளராகவும் ஆகி லண்டனில் 'தமிழ் ரைம்ஸ்' பத்திரிகையை நீண்டகாலமாக நடத்தி வந்தவர். புலம்பெயர் நாட்டு தமிழ்ச் சூழலில் குறிப்பாக புகலிட தமிழ்ச் சூழலில் 'தமிழ் ரைம்ஸ்' பத்திரிகையின் பங்களிப்பு மிக்க அளப்பெரியது.

ஆசிரியர் ராஜநாயகம் தொகுத்த Sri Lanka : Through Troubled times என்கிற நூலின் இரண்டு தொகுப்புகள் வெளியாகி உள்ளன. இந்நூல்கள் ஈழப் போராட்டத்தின் சிறந்த வரலாற்றுத் தொடர் பதிவுகளின் தொகுப்பாக அமைகின்றன.

ராஜநாயகத்தின் ஆசிரியர் தலையங்கம் மற்றும் பத்திரிகை தொகுப்பு பணிகளோடு 'தமிழ் ரைம்ஸ்' சஞ்சிகையை மாதாமாதம் உரிய காலத்தில் வெளிக்கொணர்ந்ததில் அவருடய

நிர்வாகத் திறன் பளிச்சிடுகின்றது. அத்துடன் மிகப்பெரிய பணபலமோ, ஆளணியோ இல்லாத நிலையிலும், அசாத்தியமான உழைப்போடு அப்பத்திரிகையை தொடர்ச்சியாக வெளிக்கொணர்ந்ததில் அவர் ஒரு சாதனையை நிலைநாட்டியிருக்கிறார்.

ஈழத் தமிழர்களின் எதிர்காலம் அறிவுத் தளத்தில் உயர்ந்து விளங்க வேண்டும் என்று அக்கறையுடன் செயற்பட்ட இந்த கல்விமானின் வரலாறு தமிழ் மக்களின் நினைவில் போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டிய சரித்திரம் ஆகும். அத்துடன் அவர் தான் சார்ந்து செயற்பட்ட அனைத்து விடயங்களிலும் ஒழுங்கு, நேர்மை, கண்ணியம், நேரந்தவறாமை, பிறரை மதிக்கும் உயர்பண்பு, மற்றவர்களுக்கு உதவும் பரோபகாரம் ஆகிய உயர்ந்த நற்பண்புகளை கொண்டவராகத் திகழ்ந்தார்.

லண்டனில் நீண்ட காலமாக வெளிவந்த ஆங்கில பத்திரிகையின் வெற்றியானது அவரின், தாயக விடுதலை என்ற ஒருமித்த குறிக்கோளுடன் செயற்பட்டமைக்கு தனித்துவ ஆளுமையே காரணமாகும்.

தமிழர்களின் உரிமைக்காக தலையாய பங்கினை ஆற்றிய ராஜநாயகம் அவர்களுக்கு அஞ்சலியும் புகழ் வணக்கமும் உரித்தாக.

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**






# யாழ். ஆஸ்பத்திரி வீதியில் 134 ஆண்டுகளாக அருளாசி வாரி வழங்கும் சுண்டுக்குளி புனித திருமுழுக்கு யோவான்

- கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகள் -
(ஊடக வருகை விரிவுரையாளர் - இலங்கை திறந்த பல்கலைக்கழகம்; ஓய்வு நிலை ஊடக வருகை விரிவுரையாளர் - யாழ் பல்கலைக்கழகம்; இயக்குநர் - பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர்)

**வரும் 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை 2022 அன்று 134 ஆண்டுகளாக யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் அருள் மழை பொழியும் சுண்டுக்குளி புனித திருமுழுக்கு யோவான் ஆலயப் பெருவிழா கொண்டாடப்படுவதையொட்டி காலைக்கதிர் தினசரிப் பத்திரிகையின் ஞாயிறு கிறிஸ்தவ செய்தி இதழில் இவ்வாக்கம் பிரசுரமாகிறது. யாழ்ப்பாணம் மறைமாவட்டத்தில் யாழ்ப்பாணம் சுண்டுக்குளி புனித திருமுழுக்கு யோவான் ஆலயம் - பெரிய விளான் புனித திருமுழுக்கு யோவான் ஆலயம் - நெடுந்தீவு புனித திருமுழுக்கு யோவான் ஆலயம் ஆகிய ஆலயங்களில் புனித திருமுழுக்கு யோவானுடைய பெருவிழா கொண்டாடப்படுகிறது.**



### புனித திருமுழுக்கு யோவான் ஆலய பெருவிழா பற்றி பங்குத் தந்தை எம்.இராஜேஸ்வரன் அடிகளார் கருத்து

சுண்டுக்குளி புனித திருமுழுக்கு யோவான் ஆலயப் பெருவிழா பற்றி பங்குத் தந்தை எம்.இராஜேஸ்வரன் அடிகளார் காலைக்கதிர் தினசரிப் பத்திரிகை மற்றும் காலை, மாலை இணையத்தளப் பத்திரிகையின் ஞாயிறு கிறிஸ்தவ செய்தி இதழுக்குக் கருத்து தெரிவிக்கும் போது, 2022ஆம் ஆண்டு ஜூன் மாதம் 23ஆம் திகதி நற்கருணை விழாவை யாழ்ப்பாணம் மறைமாவட்ட நிதி முகாமையாளர் நேசநாயகம் அடிகளாரும், 24ஆம் திகதி திருநாள் திருப்பலியை யாழ்ப்பாணம் மறைக் கோட்ட முதல்வர் ஜே.ஜே.மவுலிஸ் அடிகளாரும் ஒப்புக் கொடுப்பார் என்றார்.

### புனித திருமுழுக்கு யோவான் ஒரு வித்தியாசமான புனிதர்

புனித திருமுழுக்கு யோவான் ஒரு வித்தியாசமான புனிதர். நம்ப முடியாத விதமாக மிகவும் வயது முதிர்ந்த பெற்றோருக்குப் பிறந்து - வேட்டுவ உடை அணிந்து - காட்டு வாழ்வு வாழ்ந்து - இயேசுவின் சம காலத்தவராக பணி புரிந்து - தன் பணிக்காகவே துன்புறும் ஊழியனாக தலை வெட்டப்பட்டுக் கொல்லப்பட்டவர்.

இவரின் வாழ்க்கை முறை மிக வேறுபட்டதாக இருக்கிறது. காட்டு மனிதராகவே இவர் காட்சி தருகிறார். முடியிலான ஆடையை அணிந்திருந்தார். தோல் கர்ச்சையை இடையில் கட்டிக் கொண்டிருந்தார். வெட்டுக்கிளியும் காட்டுத்தேனும் உண்டு வந்தார் (மத்தேயு 3:4) என மத்தேயு நற்செய்தி தெரிவிக்கிறது.

பழைய ஏற்பாட்டின் இறுதியான இறைவாக்கினராக - புதிய ஏற்பாட்டின் இணைப்பாளராக - இயேசுவின் முன்னோடியாக - இயேசுவின் வரவை அறிவிப்பாளராக - பாதைகளைச் செம்மைப்படுத்துங்கள் என பாலை நிலத்தில் ஒலிக்கும் குரலாக - திருமுழுக்கு யோவான் அறிவிக்கப்படுகிறார்.

பாலை நிலத்தில் குரல் ஒன்று முழங்குகிறது. ஆண்டவருக்காக வழியை ஆயத்தமாக்குங்கள். அவருக்காக பாதையைச் செம்மையாக்குங்கள் (லூக்காஸ் 3:4 - 5)

### புனிதர்களின் பெருவிழாக்கள்

கத்தோலிக்க திருச்சபை புனிதர்களின் இறந்த தினத்தையே அவர்களின் பெருவிழாவாகக் கொண்டாடுகிறது. இயேசுவிற்கும் அவரின் தாய் புனித மரியாவுக்




கும் மட்டுமே அவர்களின் பிறந்த தினமும் இறந்த தினமும் பெருவிழாவாகக் கொண்டாடப்படுகிறது.

ஆனால் புனித திருமுழுக்கு யோவானுக்கும் அவர் இயேசுவின் முன்னோடியாக மனிதராய்ப் பிறந்தவருள் பெரியவராக அறிவிக்கப்பட்ட படியால் - அவரின் பிறந்த தினமான ஜூன் 24ஆம் திகதியும் தலை வெட்டிக் கொல்லப்பட்ட தினமான ஓகஸ்ட் 29ஆம் திகதியும் கத்தோலிக்க திருச்சபையில் பெருவிழாவாகக் கொண்டாடப்படுகிறது.

திருமுழுக்கு யோவான் இயேசுவின் உறவினர் என்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டிய முக்கிய விடயமாகும்.

### சுண்டுக்குளி புனித யுவானியார் ஆலய சரித்திர ஏடுகளைப் புரட்டும் போது....

கொழும்பையும் யாழ்ப்பாணத்தையும் இணைக்கின்ற ஏ9 பிரதான வீதியில் இருந்து யாழ்ப்பாணம் நகருக்குள் நுழைய அழைப்பு விடுத்து வைத்தியசாலை நோக்கி செல்கின்ற ஆஸ்பத்திரி வீதியின் ஆரம்பத்தில் ஆஸ்பத்திரி வீதியால் வளைந்து கட்டி அணைக்கப்பட்ட நிலையில் கம்பீரமாகத் தலைநிமிர்ந்து நிற்கிறது புகழ் பெற்ற யாழ் சுண்டுக்குளி புனித திருமுழுக்கு யோவான் ஆலயம்.

சுண்டுக்குளி புனித யுவானியார் ஆலய சரித்திர ஏடுகளை புரட்டிப் பார்க்கின்ற போது 1634இல் போர்த்துக்கேயரின் நிர்வாகத்தில் இருந்த யாழ்ப்பாணத்தின் 11ஆவது ஆலயமாக யாழ்ப்பாணம் சுண்டுக்குளி புனித யுவானியார் ஆலயம் கட்டி எழுப்பப்பட்டுள்ளது.

ஒல்லாந்தர் காலத்தில் கத்தோலிக்க ஆலயங்கள் பல அழிக்கப்பட்ட போது யாழ்ப்பாணம் சுண்டுக்குளி புனித யுவானியார் ஆலயமும் அழிக்கப்பட்டது.

ஆங்கிலேயர் காலத்தில் மத சுதந்திரம் வழங்கப்பட்ட போது 1888இல் யாழ் பேராலய மூப்பராக இருந்த யோசேப் புவிமனசிங்கி சுண்டுக்குளி யாழ்ப்பாணம் புனித யுவானியார் ஆலயத்திற்கான அடிக்கல்லை நாட்டினார்.

அக்காலத்து ஆயராக இருந்த மேதகு கென்றி யூலன் ஆண்டகை இவ்வாலயத்தில் அதிக ஆர்வம் காட்டிக் கட்டடப் பணிகளை வேகப்படுத்தினார். 1898இல் குருமனையும் 1905இல் இன்று காணப்படும் மணிக்கூட்டுக் கோபுரமும் கட்டியெழுப்பப்பட்டன.

1888 முதல் 1925 வரை தனியாக பரிபாலனம் செய்யப்பட்ட யாழ்ப்பாணம் சுண்டுக்குளி புனித யுவானியார் ஆலயம் 1925 முதல் 1981 வரை யாழ் பேராலய நிர்வாகத்தின் கீழ் இயங்கி வந்தது.

1969ஆம் ஆண்டு மேதகு கலாநிதி ஜெறோம் எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகை காலத்தில் நற்கருணைப் பக்தியை வளர்க்கும் பொருட்டு செபமாலைத் தாசர் சபை துறவியினர் குருமனையில் குடியமர்ந்து நாள் முழுவதும் நற்கருணை எழுந்தேற்றம் செய்து நற்கருணைப் பக்தியைப் பரப்பி வந்தனர்.

செபமாலைத் தாசர் சபையின் பொறுப்பாளராகக் கடமையாற்றிய ஜெ.பி.செல்வராஜா அடிகளாரும் பங்குத் தந்தையாக கடமையாற்றிய ஏ.இ.ராஜரட்ணம் அடிகளாரும் இணைந்து கட்டடப் பொறியியல் வல்லுநர் வேதநாயகம் அடிகளாரின் உதவியுடன் குருமனையை விஸ்தரித்தனர்.

சுண்டுக்குளி புனித யுவானியார் ஆலயத்தை வளைந்து கட்டி அணைத்துச் செல்லும் யாழ் ஆஸ்பத்திரி வீதியை நேராக்கி விஸ்தரிக்கும் நோக்குடன் கோவிற் காணியை சுவீகரிக்க 1971ஆம் ஆண்டு மாநகர சபை எடுத்த முயற்சி பங்கு மக்களின் சாத்வீகப் போராட்டத்தினால் கைவிடப்பட்டது.

1987ஆம் ஆண்டு சேதமாக்கப்பட்ட குருமனையும் ஆலயமும் உள்நாட்டு வெளிநாட்டு பங்கு மக்களின் உதவியுடன் புனரமைக்கப்பட்டன.

இங்கு குறிப்பிடப்பட வேண்டிய விடயம் என்னவென்றால் யாழ் சுண்டுக்குளி புனித யுவானியார் ஆலயத்தில் பணியாற்றிய மூன்று பங்குத் தந்தையர்கள் ஆயர்களாக நியமனம் பெற்றுள்ளனர் என்பதாகும்.

இவர்கள், முறையே 1974இல் சுண்டுக்குளி புனித யுவானியார் ஆலயத்தில் பணியாற்றிய யாழ் மறைமாவட்ட ஓய்வு நிலை ஆயர் மேதகு கலாநிதி தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை - 1981இல் சுண்டுக்குளி புனித யுவானியார் ஆலயத்தில் பணியாற்றிய ஓய்வு நிலை திருகோணமலை மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி கிங்ஸிலி சுவாம்பிள்ளை ஆண்டகை - 1985இல் சுண்டுக்குளி புனித யுவானியார் ஆலயத்தில் பணியாற்றிய மறைந்த முன்னாள் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி இராயப்பு யோசவ் ஆண்டகை ஆகியோராவர்.

மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி இராயப்பு யோசவ் ஆண்டகை சுண்டுக்குளி புனித யுவானியார் ஆலயத்தில் பங்குத் தந்தையாகப் பணியாற்றிய காலத்தில் 1988இல் நூற்றாண்டு விழா மலர் வெளியீடு மற்றும் அரங்க அமைப்பு என்பவற்றுடன் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

யாழ் பேராலய மூப்பராக இருந்த யோசேப் புவிமனசிங்கியால் 1888இல் பாடப்பட்ட சஞ்சுவாம் அம்மானை யாழ் ஆயர் மேதகு தீயோகுப்பிள்ளை ஆண்டகையின் பெரு முயற்சியால் 3ஆவது பதிப்பாக வெளியிடப்பட்டது.

கலைஞர்கள் மற்றும் சேவையாளருக்குப் பஞ்சம் இல்லாத சுண்டுக்குளி புனித யுவானியார் ஆலயப் பங்கின் மண்ணின் மைந்தர்கள் மறைந்த நாட்டுக்கூத்துச் சக்கரவர்த்தி பூந்தான் யோசவ் என அமைக்கப்படும் திருவாளர் ம. யேசேப் மற்றும் இலங்கை வானொலி புகழ் திருவாளர் வி.அன்ரன் டேவிற், அரசியற் பணி புரியும் திருவாளர் சொலமொன் சிறில், பற்றீசியன் நிறுவனத்திலும் யாழ் மறைமாவட்டக் கட்டடப்பணிகளிலும் பணியாற்றிய பொறியியலாளர் தனசிங்கம் போன்ற பலர் விளங்கினர், விளங்குகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இறை பணிக்கென ஏறக்குறைய 19 குருக்களையும் 10 கன்னியர்களையும் இப்பங்கு அர்ப்பணித்துள்ளது என்பது இப்பங்கின் மேன்மைக்கு மேலும் மெருகூட்டும் ஒரு தகவலாகும்.

நூற்றாண்டு விழாவின் பின்னர் பங்குத் தந்தையர்களாக மைக்கல் சாமி அ.ம.தி. அடிகளார், ஜே.பி.செல்வராஜா அடிகளார், ரூபன் மரியாம்பிள்ளை அடிகளார், ஆர்.எம்.ஜி.நேசநாயகம் அடிகளார், தொம்மையப்பு யேசுதாசன் சந்திரன் அடிகளார், எஸ்.ஜே.கியூ.ஜெயறஞ்சன் அடிகளார், ஏ.சி.கிறிஸ்தோப்பர் அடிகளார், எம்.இராஜேஸ்வரன் அடிகளார் ஆகியோர் கடமையாற்றியுள்ளனர்.

2013ஆம் ஆண்டு பணியாற்றிய பங்குத் தந்தை ஏ.சி.கிறிஸ்தோப்பர் அடிகளாரின் தலைமையில் 125ஆவது ஆண்டு வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. 2013ஆம் ஆண்டு ஜூன் மாதம் 24 ஆம் திகதி 'யாழ் தினக்குரல்' பத்திரிகையில் சிறப்பிதழ் வெளியிடப்பட்டுள்ளது.

# பிரதமர் மோடியின் தாயாருக்கு நேற்று நூறாவது பிறந்த நாள்!

## அவரது பாதங்களைக் கழுவி ஆசீர்வாதம் பெற்றார் மகன்



பிரதமர் நரேந்திர மோடி தனது தாயாரின் நூறாவது பிறந்தநாளையொட்டி காந்திநகரில் உள்ள அவரது தாயார் ஹீராபென் மோடியை நேற்று சனிக்கிழமை சந்தித்தார்.

நேற்றுக் காலைது குறித்து டுவீட் செய்த பிரதமர் மோடி, “இன்று எனது தாயார் 100 ஆவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் வேளையில் அவரது ஆசீர்வாதத்தைப் பெற்றேன்” என்று பதிவிட்டுள்ளார்.

பிரதமர் நேற்று சனிக்கிழமை காலை காந்திநகர் வந்தார். தனது தாயாரின் பிறந்தநாளையொட்டி, அவரது பாதங்களைக் கழுவி ஆசீர்வாதம் வாங்கினார் பிரதமர் மோடி.

கடைசியாகக் கடந்த மார்ச் மாதம் தனது இரண்டு நாள் குஜராத் பயணத்தின் போது பிரதமர் தனது தாயாரைச் சந்தித்தார்.

நேற்று ஹீராபென் மோடியின் நூறாவது பிறந்தநாளை முன்னிட்டு, காந்திநகரில் உள்ள ஒரு சாலைக்கு, அவரது பெயரை என்றென்றும் நிலைநிறுத்தும் வகையிலும், எதிர்கால சந்ததியினர் சேவையின் பாடங்களைக் கற்க வழி செய்யும் விதத்திலும் அவரது பெயர் சூட்டப்படுகிறது.

காந்திநகர் மேயர் ஹிதேஷ் மக்வானா வெளியிட்டுள்ள அறிக்கையில், பிரதமர் நரேந்திர மோடியின் தாயார் ஹிராபாவுக்கு 100 வயதாகிறது. மாநிலத் தலைநகர் மக் களின் கோரிக்கை மற்றும் உணர்வுகளைக் கருத்தில் கொண்டு, ரேசானில் பெற்றோல் நிரப்பு நிலையத்திலிருந்து 80 மீற்றர் சாலைக்கு ‘பூஜ்யா ஹிராபா மார்க்’ எனப் பெயர் வைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஹீராபாவின் பெயரை என்றென்றும் நிலைநிறுத்தவும், எதிர்கால சந்ததியினர் துறவு, தவம், சேவை மற்றும் மனசாட்சியின் பாடங்களைக் கற்றுக்கொள்வதற்காகவும் 80 மீற்றர் சாலையின் பெயரை மாற்ற முடிவு செய்யப்பட்டுள்ளது’ எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



பிரதமர் மோடி, பஞ்சமஹால் மாவட்டத்தில் உள்ள புகழ்பெற்ற யாத்திரை ஸ்தலமான பாவகாத்திற்குச் செல்கிறார். அங்கு அவர் பூஜை செய்த பிறகு கொடியேற்றுவார்.

குஜராத் தகவல் துறையின் கூற்றுப்படி, பதினைந்தாம் நூற்றாண்டில் பவகாத் ஏறிய பிறகு, கடந்த ஐந்து நூற்றாண்டுகளாக கோவிலின் சிகரம் சிதிலமடைந்தது. சிகரம் தற்போது புதிய தோற்றத்துடன் மறுவடிவமைப்பு செய்யப்பட்டுள்ளது.

முதலில், பாவகத் மலையின் உச்சியை விரிவுபடுத்தி ஒரு பெரிய வளாகத்திற்கு அடித்தளம் போடப்பட்டது, பின்னர் வளாகத்தின் முதல் மற்றும் இரண்டாவது தளங்களில் துணை வசதிகள் அமைக்கப்பட்டன. மூல சன்னதி அப்படியே பாதுகாக்கப்பட்டு, முழு கோயிலும் மீண்டும் கட்டப்பட்டுள்ளது. பிரதான கோவில் மற்றும் திறந்தவெளி விரிவுபடுத்தப்பட்டுள்ளது. பழைய மாதாஜி கோவிலில் ‘சிகர்’ இடத்தில் ஒரு தர்கா இருந்தது. தர்கா ஓர் இணக்கமான குடியேற்றத்தில் இடமாற்றம் செய்யப்பட்டு புதிய ‘சிகர்’ கட்டப்பட்டுள்ளது. கொடிக் கம்பம் மீட்டெடுக்கப்பட்டு, அங்கு கொடி இறக்கப்படும், என்று அதிகாரப்பூர்வ அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**(மூலம்: ஏ.என்.ஐ.)**

# வேகமாக நீண்டு, வளர்ந்து வரும் இந்திய தேசிய நெடுஞ்சாலைகள்

இந்திய மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் நிதின் கட்கரி, உள் கட்டமைப்பு மேம்பாட்டில் ‘தரத்தில்’ கவனம் செலுத்த புதிய யோசனைகள், ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புகள் மற்றும் தொழில்நுட்பங்களுக்காக புதுமை வங்கியை அமைக்க முன்மொழிந்துள்ளார்.

இந்திய சாலைகள் காங்கிரஸின் 222 ஆவது இடைக்கால கவுன்ஸில் கூட்டத்தின் தொடக்க விழாவில் உரையாற்றிய அவர், இந்திய சாலைகள் காங்கிரஸிலிருந்து புதிய முன்முயற்சிகள் எதிர்பார்க்கப்படுகின்றன, அனைத்து பொறியியலாளர்களுக்கும் புத்தாக்கம் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்க வேண்டும் என்றார்.

சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகத்தின் வெளியீட்டின்படி, சர்வதேசத் தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் உலகில் உள்ள உலகளாவிய நிறுவனங்களின் உதவியுடன் உலகத் தரம் வாய்ந்த அதிநவீன ஆய்வகத்தை இந்திய சாலைகள் காங்கிரஸ் உருவாக்க வேண்டும் என்று அவர் கூறினார்.






இந்தியாவை 5 டிரில்லியன் டொலர் பொருளாதாரமாக மாற்றும் பிரதமர் நரேந்திர மோடியின் தொலைநோக்குப் பார்வையை நிறைவேற்றுவதில் உள்கட்டமைப்பு மேம்பாடு முக்கியப் பங்காற்றுவதாகவும், அந்தப் பகுதியின் செழிப்புடன் சாலை உள்கட்டமைப்பு நேரடியாக இணைக்கப்பட்டுள்ளதாகவும் கட்காரி கூறினார்.

சாலை உள்கட்டமைப்பு மக்கள், கலாச்சாரம் மற்றும் சமூகத்தை இணைக்கிறது, மற்றும் சமூக, பொருளாதார வளர்ச்சியின் மூலம் செழிப்பைக் கொண்டுவருகிறது என்றார் அவர்.

கடந்த 8 ஆண்டுகளில் தேசிய நெடுஞ்சாலைகளின் நீளம் 2014 இல் 91,000 கிலோ மீற்றரிலிருந்து 50 சதவீதத்துக்கும் அதிகமாக உயர்ந்து தற்போது சுமார் 1.47 லட்சம் கிலோமீற்றராக உயர்ந்துள்ளது என்றார் அமைச்சர்.

தேசிய நெடுஞ்சாலை வலையமைப்பை 2025 ஆம் ஆண்டுக்குள் 2 லட்சம் கிலோ மீற்றராக விரிவுபடுத்துவதில் எங்கள் அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருகிறது என்றார் அவர். கடந்த 8 ஆண்டுகளில் எங்கள் அணி பல உலக சாதனைகளை படைத்துள்ளது.

வடகிழக்கு பிராந்தியத்தின் வளர்ச்சியில் அரசாங்கம் மிகவும் அர்ப்பணிப்புடன் இருப்பதாக கட்கரி கூறினார்.

உலகின் சிறந்த மற்றும் வெற்றிகரமான தொழில்நுட்பம் மற்றும் கட்டுமானத்திற்கான புதிய பொருள்களைப் பயன்படுத்த நாங்கள் தயாராக உள்ளோம். நிரூபிக்கப்பட்ட தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல் மற்றும் கட்டுமான செலவைக் குறைத்தல் ஆகிய இரண்டும் எங்களுக்கு மிக முக்கியமான உந்து சக்திகளாகும். தரத்தைப் பேணும்போது கட்டுமானச் செலவைக் குறைக்க வேண்டும்” என்றும் அவர் சொன்னார்.

கட்டுமானம் மற்றும் செயல்பாட்டு கட்டத்தில் குறைந்தபட்ச கார்பன் தடயங்கள் இருக்க வேண்டும். மற்றும் இயற்கை வளங்களை சுரண்டப்படுகின்றமை வரையறுக்கப்பட்ட அளவில் இருக்க வேண்டும் என்று அமைச்சர் கூறினார்.

சுற்றுச்சூழலைச் சீர்குலைத்து அபிவிருத்தி செய்வது எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாதது என்றார்.

சாலை பாதுகாப்பு என்பது அரசாங்கத்திற்கு அதிக முன்னுரிமை அளிக்கும் பகுதியாகும் என்றும் அமைச்சர் கூறினார்.

சாலை பொறியியல் தொடர்பான பயனுள்ள உலகளாவிய நடைமுறைகள் மற்றும் வழிகாட்டுதல்களை விவரக்குறிப்பில் இணைக்க வேண்டும், என்றும் அவர் கூறினார்.

**(மூலம்: ஏ.என்.ஐ.)**




# வாழ்வினிலே அப்பாக்கள் ஆண்டவனே ஆவார்!

பெற்றிடுவாள் அன்னை பெருதுவப்பார் அப்பா
உற்ற துணையாகி உழைத்திடுவார் அப்பா
கற்பனைகள் நிறைத்து கனவுகாண்பார் அப்பா
காலமெலாம் எம்மைச் சுமந்திடுவார் அப்பா

கைபிடித்து எம்மைக் குருசேர்ப்பார் அப்பா
கற்பவற்றை கற்க கையணைப்பார் அப்பா
கல்வியென்னும் பயிரில் களையெடுப்பார் அப்பா
கற்றவரின் அவையில் அமருவென்பார் அப்பா

வளர்ச்சியினைக் கண்டு மனமகிழ்வார் அப்பா
தளர்ச்சியினைக் கண்டால் தாங்கிடுவார் அப்பா
விளைச்சலினை நோக்கி அழைத்திடுவார் அப்பா
விகற்பநிலை வந்தால் விலக்கிடுவார் அப்பா

பொய்யென்னும் கருவைப் பொசிக்கிடுவார் அப்பா
பொறாமையெனும் நினைப்பைப் போக்கிடுவார் அப்பா
மெய்யென்னும் கருவை விதைத்திடுவார் அப்பா
மேதினியில் வாழ்வின் விளக்காவார் அப்பா

நல்லநட்பை நாளும் நாடச்செய்வார் அப்பா
நல்லறிஞர் பெருமை நயந்துரைப்பார் அப்பா
எல்லையில்லா அன்பை ஈந்துநிற்பார் அப்பா
இனிமையிலா நட்பை எடுத்தெறிவார் அப்பா

வறியநிலை கண்டால் வதங்கிடுவார் அப்பா
நெறிபிறழ்ந்த வாழ்க்கை நினைவிருத்தார் அப்பா
அறமுரைக்கும் வள்ளுவம் அகநிறைப்பார் அப்பா
அரைக்கணமும் வரம்பைக் கடந்துவிடார் அப்பா

இலக்கியத்தை இங்கிதத்தை எனக்குரைப்பார் அப்பா
இலக்குவிட்டுப் போகாது காத்திடுவார் அப்பா
சமயநெறி தத்துவங்கள் போதிப்பார் அப்பா
சன்மார்க்க வழியினிலே கூட்டிச்செல்வார் அப்பா

நான்விரும்பும் அத்தனையும் செய்திடுவார் அப்பா
தான்விரும்பும் நல்லவற்றை எனக்களிப்பார் அப்பா
வானிறங்கும் மழைபோல வழங்கிடுவார் அப்பா
வாழ்நாளில் தெய்வமாய் விளங்குகிறார் அப்பா

நோய்நொடிகள் அணுகாமல் வைத்தியராய் இருப்பார்
நோய்வந்தால் அதைத்தீர்க்கும் மருந்தாயும் இருப்பார்
உண்ணுகின்ற அத்தனையும் ஒழுங்காக்கி நிற்பார்
உடலுளத்தை மனமிருத்தி ஒழுங்கமைப்பார் அப்பா

வரமாக வாய்த்திட்ட மகவென்று சொல்வார்
வாழ்வினிலே பெற்றிட்ட செல்வமெனப் புகழ்வார்
நிலமீது மலர்ந்திட்ட பெருவாழ்வே என்பார்
நெஞ்சினிலே எனையிருத்தி கொஞ்சிடுவார் அப்பா

பட்டம் நான்பெற்றேன் பலபதவி வகித்தேன்
பலபேரும் மதித்திடவே பாங்குடனே வாழுகிறேன்
பக்குவமாய் என்னை பாதுகாத்தார் அப்பா
பக்கத்தில் இல்லாமல் படமிருந்தே பார்க்கின்றார்

அப்பாக்கள் அனவருக்கும் அருமருந்து ஆவர்
அவரிளமை அத்தனையும் அர்ப்பணித்தார் எமக்கு
அப்பாக்கள் வாழ்வினிலே ஆண்டவனே ஆவார்
அவரன்பை அவர்பணியை அகமிருத்தி வாழ்வோம்

- மகாதேவ ஐயர் ஜெயராம சர்மா -
(மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண்,ஆஸ்திரேலியா

# யாழ். மாநகரசபையின் உறுப்பினர்கள் கொடுப்பனவு இன்றி பணியாற்ற முடிவு!

யாழ் மாநகரசபை உறுப்பினர்கள் எவ்வித கொடுப்பனவும் இல்லாமல் பணியாற்றுவது தொடர்பில் எடுத்துக்காட்டும் விசேட தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற யாழ் மாநகர சபை அமர்விலேயே இந்த விசேட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது -

நாட்டில் காணப்படும் தற்போதைய பொருளாதார நெருக்கடியில் உள்ளூராட்சி சபையின் உறுப்பினர்களுக்கு கொடுப்பனவு வழங்காததால் சபை கலைக்கப்படுகின்ற சூழல் ஏற்படுமானால் யாழ்.மாநகரசபை உறுப்பினர் கள் எவ்வித கொடுப்பனவுமில்லாமல் பணியாற்றுவது என எடுத்துக்காட்டும் வகையில் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டது.

யாழ் மாநகர முதல்வர் வி.மணிவண்ணனால் கொண்டுவரப்பட்ட இந்த பிரேரணைக்கு இரண்டு உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்த போதும் ஏனைய உறுப்பினர்களின் ஆதரவுடன் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# சட்டவிரோத பணப்பரிமாற்றம்; நான்கு இடங்கள் சுற்றிவளைப்பு!

## புறக்கோட்டையில் 4 பேர் கைது

சட்ட விரோத பணப்பரிமாற்றம் இடம்பெற்ற 4 இடங்கள் விசேட அதிரடிப்படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு, ஒரு கோடியே 86 லட்சத்துக்கும் அதிக பணமும், 4 லட்த்துக்கும் அதிக பெறுமதியுடைய வெளிநாட்டு பணமும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதன் போது கொழும்பு - புறக்கோட்டை பகுதியில் சேர்ந்த 4 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

விசேட அதிரடிப்படையினரின் கோனஹேண முகாம் அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமையவே இந்த சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் வெள்ளவத்தை, கொழும்பு - 15, புதுக்கடை மற்றும் கொழும்பு - 10 ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர்.

குறித்த சந்தேகநபர்கள் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இந்த சுற்றிவளைப்பில் ஒரு கோடியே 86 லட்சத்து 95 ஆயிரம் ரூபா இலங்கை பணம், 4 லட்சத்து 32 ஆயிரத்து 502 ரூபா பெறுமதியுடைய வெளிநாட்டு பணம் கைப்பற்றப்பட்டுள்ளன.

குறித்த வெளிநாட்டு பணத்தில் 10 ரூபா இந்திய பணத்தாள்கள் 16, 20 ரூபா 6, ஒரு குவைத் தினார் தாள்கள் 7, 100 கட்டார் தினார் ஒன்றும், 50 சிங்கப்பூர் டொலர் தாள் ஒன்றும், 100 அமெரிக்க டொலர் தாள்கள் 9, 200 யூரோ ஒன்றும் உள்ளடங்குகின்றன.

இவை தவிர 4 கையடக்கத்தொலைபேசிகளும், இரு கொடுக்கல் வாங்கல் ஆவணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பேராதனை பல்கலைக்கழக செயற்பாடுகள் இடைநிறுத்தம் விடுதிகளில் தங்கிய மாணவர்களை வெளியேற கோரிக்கை


தற்போது நாட்டில் நிலவும் நெருக்கடி நிலைமைகள் காரணமாக பேராதனை பல்கலைக்கழகத்தை மூடுவதற்கு தீர்மானித்துள்ளதாக பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் எம்.டி.லமவன்ஸ தெரிவித்துள்ளார்.

அத்துடன், பல்கலைக்கழகத்தின் மாணவர் விடுதிகளையும் மூடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் துணைவேந்தர் மேலும் தெரிவித்தார்.

இந்நிலையில், பல்கலைக்கழகத்தில் நடைபெறும் அனைத்து கல்வி நடவடிக்கைகள் மற்றும் பரீட்சைகளை இடைநிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் விடுதிகளை மூடத் தீர்மானித்துள்ளதால் விடுதிகளில் தங்கியுள்ள அனைத்து மாணவர்களையும் விடுதிகளை விட்டு உடனடியாக வெளியேறி வீடுகளுக்கு செல்லுமாறு பல்கலைக்கழக நிர்வாகம் வேண்டுகோள் விடுத்துள்ளதாக துணைவேந்தர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முல்லை எரிபொருள் நிரப்பு நிலையத்தில் ஊடகவியலாளர் மீது தாக்குதல் முயற்சி!



முல்லைத்தீவு, ஜூன் 19

முல்லைத்தீவு மல்லாவி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் சுயாதீன ஊடகவியலாளர் சண்முகம் தவசீலன் மீது தாக்குதல் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பலநோக்கு கூட்டுறவு சங்க மல்லாவி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் விநியோக நடவடிக்கை இடம்பெறும் என்ற பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் அறிவுறுத்தலுக்கமைய வெள்ளிக்கிழமை அதிகாலை முதல் 2 கிலோ மீற்றர்களுக்கு அதிகமான நீண்ட வரிசையில் மக்கள் காத்திருந்தனர்.

மேற்படி செய்தியை சக ஊடகவியலாளருடன் அறிக்கையிட சென்ற சுயாதீன ஊடகவியலாளர் சண்முகம் தவசீலன் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் செய்தி சேகரிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த சமயம் அங்கு மது போதையில் வருகை தந்த நபரொருவரால் தாக்குதலுக்கு உள்ளாகினார்.

அருகிலிருந்த பொதுமக்கள் மற்றும் பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து சம்பவத்துடன் தொடர்புடைய நபரை பொலிஸார் எச்சரித்தது டன் ஊடகவியலாளரால் மல்லாவி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

# மிகவும் மோசமான சவாலைக் கல்வித்துறை எதிர்கொள்ள வேண்டிய நிலைமை உள்ளது

## கோபா குழுவிடம் கல்வியமைச்சின் செயலர் தெரிவிப்பு

ஒட்டுமொத்த கல்வித்துறையும் தீவிரமான மற்றும் சிக்கலான செயன்முறையைக் கடக்க வேண்டியுள்ளது. கொவிட் சூழ்நிலையை விட பொருளாதார நெருக்கடியால்தோன்றியுள்ளநிலையை முகாமைத்துவம் செய்வது சிக்கலாகியுள்ளது என கல்வி அமைச்சின் செயலாளர் எம்.என்.ரத்னசிங்ஹ, அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவில் (கோபா குழு) தெரிவித்தார்.

நாட்டில்நிலவும்தற்போதையகொவிட் மற்றும் பொருளாதார நெருக்கடிகளின் மத்தியில் கல்வித் துறையின் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பாக ஆராய்வதற்காக அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு அதன் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தலைமையில் அண்மையில் கூடியபோதே கல்வி அமைச்சின் செயலாளர் இவ்வாறு தெரிவித்தார்.

கல்வி அமைச்சு, தேசிய கல்வி நிறுவகம், பரீட்சைகள் திணைக்களம், கல்வி வெளியீடுகள் திணைக்களம் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஆகியவற்றின் அதிகாரிகள் இந்தக் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டிருந்தனர். இதன்போதே செயலாளர் இவ்வாறு தெரிவித்தார்.

குறிக்கப்பட்ட நாள்கள் பாடசாலைகளை நடத்த முடியாமல்போனமையால் வரையறுக்கப்பட்ட காலத்தில் பாடத்திட்டத்தைப் பூர்த்திசெய்ய முடியாமை, தற்பொழுது நிலவும் எரிபொருள் பற்றாக்குறை, பிள்ளைகளின் குடும்பங்களில் காணப்படும் பொருளாதார நெருக்கடி, பெற்றோர் வேலைகளை இழக்கும் நிலை போன்ற மோசமான சூழ்நிலை காணப்படுவதாகக் கல்வி அமைச்சின் செயலாளர் சுட்டிக்காட்டினார்.

இணையவழி தொழில்நுட்பத்தின் ஊடாகக் கற்பித்தல் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டாலும் கிராமங்களில் பல்வேறு சிரமங்கள் இருக்கின்றன எனவும், ஒன்லைன் தொழில்நுட்பத்தின் ஊடாகக் கற்பிப்பது மாணவர்களுக்கு வெற்றிகரமான முறையாக இருக்காது என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

கல்வி அமைச்சுக்கான ஒதுக்கீட்டுத் தொகை போதுமானதாக இல்லை என்பது மற்றுமொரு பிரச்சினை என்றும், அரசாங்க ஆதாரங்களுக்கு அப்பாற்பட்ட ஏனைய நிறுவனங்களிடமிருந்து பெறப்படவுள்ள யுனிசெவ், ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி போன்ற திட்டங்களின் நிதியை மறுசீரமைக்க முன்னுரிமைத் திட்டங்களை செயற்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

குறிப்பிட்ட காலப் பகுதிக்கு மாத்திரம் பாடசாலைகள் நடத்தப்படுவதால் முழுமையான பாடநெறிகளைப் பூர்த்திசெய்ய முடியாமை பரீட்சையுடன் தொடர்புபட்ட விடயம் என்பதால் பாடத்திட்டத்தின் எல்லையைக் குறைப்பதற்கான அவசியம் தொடர்பாகவும் குழு கவனம் செலுத்தியது. இல்லாவிட்டால் மாணவர்கள் மாத்திரமன்றி ஆசிரியர்களும் கடுமையான அழுத்தங்களுக்கு ஆளாக நேரிடும் என்றும் குழு சுட்டிக்காட்டியது.

2020ஆம்ஆண்டில்மாணவர்களின் கற்றல் இழப்பு 54 வீதமாகவும், 2021ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதமாகும் போது இந்த எண்ணிக்கை 88 வீதமாகவும் காணப்பட்டது என்றும் இங்கு புலப்பட்டது. இவ்வாறான நிலையில், பரீட்சைகளின் போது உரிய கற்றல் இழப்பைக் கருத்தில் கொண்டு மாணவர்களுக்கு அநீதி இழைக்காத வகையில் வினாத்தாள்களைத் தயாரிக்கப் பரீட்சைகள் திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியத்தைக் குழு வலியுறுத்தியுள்ளது. தேசிய கல்வி நிறுவகம், கல்வி அமைச்சு மற்றும் பரீட்சைகள் திணைக்களம் ஆகியன ஒருங்கிணைந்து இது தொடர்பில் கொள்கை ரீதியான முடிவொன்றை எடுக்குமாறு குழு பரிந்துரைத்தது.

தற்போது நிலவும் போக்குவரத்துச் சிரமங்களைக் கருத்தில் கொண்டு மாணவர்களை அருகில் உள்ள பாடசாலையில் தற்காலிகமாக இணைக்கும் முறை தயாரிக்கப்பட்டு வருவதாகவும், இதனை இந்த ஆண்டு டிசெம்பர் 31ஆம் திகதி வரை நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்த்திருப்பதாகவும் இங்கு தெரிவிக்கப்பட்டது.

அனைத்து சிரமங்களுக்கு மத்தியிலும் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையை உரிய முறையில் நடத்தியமைக்காக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் மற்றும் ஏனைய அனைத்து அதிகாரிகளையும் குழு பாராட்டியுள்ளது. கொவிட் சூழ்நிலை மற்றும் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் கல்வித் துறையை பராமரிப்பதில் அவர்கள் மேற்கொண்ட முயற்சிகளுக்காக அனைத்து ஆசிரியர்கள் உட்பட கல்வி அதிகாரிகளையும் குழு பாராட்டியது.

தற்போதைய கொவிட் நிலைமை மற்றும் பொருளாதார நெருக்கடி சூழ்நிலையில் பல்கலைக்கழக அமைப்பில் உள்ள பிரச்சினைகள் தொடர்பாகவும் இங்கு விவாதிக்கப்பட்டது. எரிபொருள் மற்றும் எரிவாயு தட்டுப்பாடு போன்ற சிரமங்களை எதிர்கொள்வதால் பிரயோக ரீதியான பரீட்சைகளுக்கு மாத்திரம் மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு அழைக்கப்படுகின்றமையுடன், ஏனைய விரிவுரைகள் ஒன்லைன் ஊடாக நடத்தப்படுகின்றன எனவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

உலக வங்கியின் நிதியுதவியில் நடைமுறைப்படுத்தப்படும் 10 கோடி டொலர் திட்டத்தை தற்போது நிலவும் நெருக்கடியின் மத்தியில் நல்ல முறையில் பயன்படுத்துமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு, அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு பரிந்துரைத்தது. இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான தயாசிறி ஜயசேகர, லசந்த அழகியவன்ன, மொஹமட் முஸம்மில், திஸ்ஸ அத்தநாயக்க, வைத்திய கலாநிதி சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே, சிவஞானம் ஸ்ரீதரன், கலாநிதி ஹரினி அமரசூரிய, வைத்திய கலாநிதி உப்புல் கலப்பதி ஆகியோர் கலந்துகொண்டனர்.

## செயலிழக்கும் அபாயத்தில் போக்குவரத்துச் சேவைகள்

# ரயில்களில் முண்டியடிப்பதால் விபத்துக்கள் ஏற்படும் நிலை!

பொருளாதார நெருக்கடியின் விளைவாக எரிபொருளுக்கு ஏற்பட்ட தட்டுப்பாடு தொடரும் நிலையில், வாகனங்களுக்கு அவசியமான எரிபொருள் இன்மையால் பொதுப் போக்குவரத்து உள்ளடங்கலாக ஒட்டுமொத்த போக்குவரத்து சேவையும் படிப்படியாக செயலிழக்கும் நிலையேற்பட்டிருப்பதுடன், அதன் தொடர்ச்சியாக நாட்டின் அரச மற்றும் தனியார் துறை நடவடிக்கைகள் முழுமையாகப் பாதிப்படையக்கூடிய சாத்தியம் தோற்றம்பெற்றுள்ளது.

அதுமாத்திரமன்றி எரிபொருள் இல்லாததால் அரச மற்றும் தனியார் பஸ் சேவை வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கும் நிலையில் நாளாந்தம் பெருமளவானோர் ரயில்சேவையைப் பயன்படுத்துவதுடன், இடநெருக்கடியின் காரணமாகப் பலர் ரயிலில் பாதுகாப்பற்ற முறையில் தொங்கியவாறும், ரயிலுக்கு மேலே ஏறி அமர்ந்துகொண்டும் பயணிப்பதால் விபத்துக்கள் மற்றும் உயிரிழப்புக்கள் ஏற்படக்கூடிய அச்சுறுத்தல் நிலை காணப்படுகின்றது.

எரிபொருள் இல்லாததன் காரணமாக சேவையில் ஈடுபட்டுள்ள பஸ்களின் எண்ணிக்கையில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சியால் வழமையாக பஸ்ஸில் பயணிப்பவர்கள் கடந்த சில தினங்களாக ரயிலில் பயணிக்க வேண்டிய நிலையேற்பட்டுள்ளது. அதன்படி இப்போது ரயிலில் வழமையை விடவும் இருமடங்கானோர் பயணிப்பதால் பெரும் எண்ணிக்கையானோர் ரயிலில் பாதுகாப்பற்ற முறையில் தொங்கியவாறும், ரயில் மேற்பகுதியில் ஏறி அமர்ந்துகொண்டும் பயணிப்பது தீவிர உயிரச்சுறுத்தலைத் தோற்றுவித்துள்ளது.

அதுமாத்திரமன்றி வெளிமாவட்டங்களிலிருந்து அத்தியாவசிய சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காகக் கொழும்பிற்கு வருகைதந்தவர்கள் பஸ் உள்ளிட்ட பொதுப்போக்குவரத்து சேவை மற்றும் தனியார் வாகனங்களுக்கான எரிபொருள் என்பன இல்லாததால் தமது சொந்த இடங்களுக்குச் செல்லமுடியாமல் நிர்க்கதியான நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதுடன், இடைநடுவிலேயே எங்கேனும் தங்கியிருக்கவேண்டிய அவலநிலைக்கு உள்ளாகியுள்ளனர்.

மேலும் நேற்றும் கொழும்பில் பல பகுதிகளிலும் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெற்றோல், டீசல் உள்ளிட்ட எரிபொருளைப் பெற்றுக்கொள்வதற்காக கார், ஓட்டோ, மோட்டார் சைக்கிள் உள்ளிட்ட வாகனங்கள் சுமார் 3 - 4 கிலோமீற்றர் நீளத்துக்கு நீண்ட வரிசையில் காத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. அதே போன்று கொலன்னாவ, புளூமென்டல் ஆகிய பகுதிகளிலுள்ள பிரதான எரிபொருள் விநியோக நிலையங்களிலிருந்து எரிபொருளை நிரப்பிச்செல்வதற்காக எரிபொருள் பவுஸர்களும் வரிசையில் காத்திருந்தன. இதன் காரணமாக நேற்றைய தினம் கொழும்பின் பல பாகங்களிலும் கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# காங்கேசன்துறைமுகமூடாக இறக்குமதி செய்யும் திட்டத்துக்கு அனுமதித்தால் ஓர் இரவிலேயே தீர்வு

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



எரிபொருள்,சீமெந்து, உரம் மற்றும் அத்தியாவசியப் பொருள்களை இந்தியாவிலிருந்து காங்கேசன்துறை துறைமுகம் வழியாக இறக்குமதி செய்யும் திட்டத்துக்கு அனுமதித்தால் ஓர் இரவிலேயே தீர்வு என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

கிளிநொச்சியில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவித்தவை வருமாறு –

கடற்தொழிலாளர்கள், விவசாயிகள், போக்குவரத்து உள்ளிட்ட சங்கங்கள் இணைந்து எரிபொருள் பெற்றுக்கொள்வது தொடர்பில் கேட்டுள்ளார்கள். வட மாகாணத்தில் இருக்கக் கூடிய உரம் மற்றும் எரிபொருள் பற்றாக்குறை அதேபோன்று அத்தியாவசியப் பொருள்களினுடைய பற்றாக்குறை நாடு தழுவிய ரீதியில் ஏற்பட்டுள்ள அதே நேரத்தில் வடமாகாணமும் அதற்கு விதிவிலக்கில்லாமல் அதற்கு முகம் கொடுத்து வருகின்றது.

இந்த வகையில் எங்களது நீண்டகாலத் திட்ட முன்மொழிவாக இந்தியாவிலிருந்து பொருள்களை இறக்குமதி செய்வதாகும். பாண்டிச்சேரி, காரைக்கால் அல்லது நாகபட்டணத்திலிருந்து நேரடியாக காங்கேசன்துறைத் துறைமுகத்தில் இறக்குமதி செய்வதன் ஊடாக விரைவாகவும், நியாயமான முறையில் எமது மக்களுக்கு கிடைக்கக்கூடிய சூழலை உருவாக்குவோம்.

எரிபொருள், உரம், சீமெந்து மற்றும் அத்தியாவசியப் பொருள்களின் பற்றாக்குறை ஆகியவற்றை நீக்கி வெகு விரைவில் மக்களுக்கு அதனை கிடைக்கச் செய்வோம். – எனத் தெரிவித்தார்.

சிறுபோக பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டு நாள்கள் கடந்துள்ள நிலையில் பசளைகள் கிடைக்கவில்லை. இந்தக் காலப்பகுதியில் பசளையை பெற்றுக்கொடுக்க முடியுமா என ஊடகவியலாளர் வினவினார்.

அதற்கு பதில் அளித்த அமைச்சர் –

அது தொடர்பில் என்னால் உறுதியாகச் சொல்ல முடியாது. ஆனால் எனக்கு குறித்த அனுமதி கிடைக்கின்ற பட்சத்தில் ஓர் இரவிலேயே அதனை கொண்டு வந்து சேர்த்து விடுவேன் எனத் தெரிவித்தார்.

**இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.**

# தமிழ் மக்கள் எங்கு நிற்கிறார்கள்?



- செல்லத்துரை ரவீந்திரன் -

**அங்கம் -37**

**புதிய காலனித்துவத்துக்கான கம்பெனிகள்**

இப்பொழுது அதே பாணியில் அதானி குழுமம் பொறுப்பேற்கும் ஒரு சில திட்டங்களின் ஏற்பாடுகள் குறித்த தகவல்கள் வெளிவந்துள்ளன.

மன்னார், யாழ்ப்பாணம் தீவுகளில் மாற்று மின் உற்பத்தி முறைகள் பற்றிய திட்டங்கள் அவற்றில் அடங்கும். இவை இந்தியாவுக்கும் சிறிலங்காவுக்கும் பேச்சுக்களிலும் எழுத்துக்களிலும் இருந்தாலும் இவை நடைமுறைப்படுத்தப்படும் என அறிவிப்புகள் வெளிவந்துள்ளன.

சரித்திர காலங்களுக்கு முன்பிருந்தே தென்னிந்தியாவிற்கும் ஈழத்தமிழ் பகுதிகளுக்கும் இடையே போக்குவரத்துகள் சர்வசாதாரணமாக கடலோரப் பகுதிகள் ஊடாக நடந்து கொண்டிருப்பவை. சுதந்திரமடைந்த காலங்களின் பின்னான அண்மைய சரித்திர காலங்களில் சட்டரீதியாக இராமேஸ்வரத்திலிருந்து தலைமன்னாருக்குக் கப்பல் சேவையும் பலாலியில் இருந்து இந்திய நகரங்களுக்கு விமான சேவையும் என மக்களுக்கு வசதியும், சுதந்திரமான நடமாட்டமும் அவர்களிடையே பெருமளவில் ஊடாட்டங்கங்களும் இருந்தன.

அதேசமயம் வல்வெட்டித்துறையில் இருந்து மேற்கொள்ளப்பட்ட போக்குவரத்துக்கள், அதன் ஊடாக நடந்த வர்த்தகம் என்பவை சட்டத்தைப் பற்றி அதிகம் அலட்டிக் கொள்ளவில்லை. இங்கிருந்து மாலையில் புறப்படும் வள்ளங்களில் செல்லும் பலர் அங்கு தமிழகத்தில் இரவு சினிமா காட்சிகளைப் பார்த்து விட்டு அதிகாலையில் வள்ளங்களில் திரும்புவதும், அத்தோடு பல பண்டமாற்று வியாபாரங்களில் ஈடுபடுவதும் வழமையானவையாக இருந்தன.

ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் அரசுக்கு எதிராகச் சதி செய்தார்கள் என்று குற்றம் சாட்டப்பட்ட இராணுவ அதிகாரிகள் மற்றும் ஏனையோருக்கு எதிரான வழக்கில் வல்வெட்டித்துறை நிலைமைகள் பற்றி சாட்சியங்கள் வழங்கப்பட்டன. அதன் சாரம் அந்தப் பகுதிகள் நாட்டுக்குள் ஒரு நாடாக, இலங்கைச் சட்டங்கள் அமுல்படுத்தப்படாத பகுதியாக இயங்குகின்றன என்பதாக அமைந்தது.

இவற்றை வைத்துத்தான் இயக்க நடவடிக்கைகளுக்கு அத்தகைய சூழல் வசதிகள் தரும் என விடுதலைக் குழுக்களும் – பிரபாகரன் கூட இவற்றுடன் சம்பந்தப்பட்டிருந்த குட்டிமணி, ஜெகன், தங்கத்துரை போன்றோரைத் தன்னுடன் சேர்த்து – அப்பகுதியை தளமாக்கி இயங்கின.

அவர்களின் ஆதிக்கம் இந்தப் பகுதிகளில் வளர படிப்படியாக அவை சிறிலங்காப் படையினரால் கட்டுப்படுத்தப்பட்டன. இராமேஸ்வரம் கப்பல் சேவை நின்றது. பலாலி விமானத்தளம் படைகளின் பாவிப்புக்குத் தரப்பட்டது.

தமிழ் மக்கள் கூட சட்ட ரீதியாக நாட்டை விட்டு வெளியேறுவதானால் கொழும்பு விமான நிலையமே ஒரே வழியாக மாற்றப்பட்டது. இது, ஒரு வழியில் அவர்களை நாட்டுக்குள் கட்டுப்படுத்தியது.

போர் முடிந்ததும் ராமேஸ்வரம் சேவையை திரும்ப ஏற்படுத்துவது பற்றியும் பலாலி விமான சேவையை ஆரம்பிப்பது பற்றியும் எவ்வளவோ பேச்சுக்கள் நடத்தப்பட்ட போதும் அவை கைகூடவில்லை. இந்திய நிதி உதவியுடன் பலாலி விமான நிலையம் புனரமைக்கப்பட்டது. இந்தியா நிதி உதவிகள் செய்தது. அதன் பின் அது சர்வதேச பயணங்களுக்குத் திறந்துவிடப்படும் எனக் கூறப்பட்ட போதும் சிங்கள அரசுகள் அதற்கு ஊக்கம் தராமல் இழுத்தடித்தன. சென்னைக்கு மாத்திரம் வாரத்தில் மூன்று தடவைகள் 2019 இருந்து விமான சேவைகள் அனுமதிக்கப்பட்டன. பின்னர் கொவிட்டைக் காரணங்காட்டி அதுவும் நிறுத்தப்பட்டது.

தமிழ் பகுதிகளின் ஊடாட்டங்களை தென்னிந்தியாவுடன் ஊக்கப்படுத்தி, அவர்களது தன்னிறைவுப் பொருளாதாரத்தை மீட்டெடுக்க உதவும் இந்தியாவின் விருப்பத்துக்குத் தொடர்ந்து ஆப்புகள் வைக்கப்பட்டன.

தமிழ்நாடு, தென்னிந்தியா மற்றும் இந்தியப் பகுதிகளில் இருந்து பல சுற்றுலாப் பயணிகளை ஊக்கப்படுத்தலாம், அதனால் அந்நிய செலாவணி ஈட்டலாம் என்ற காரணங்களைக் காட்டி பலாலி விமான சேவையை உடனடியாக ஆரம்பிக் கும்படியும், தமிழ்நாட்டுடன் கப்பல் சேவையை தொடங்கவும் அமைச்சரவையில் பேச்சுக்கள் நடத்தப்பட்டுள்ளன. அதனை நடைமுறைப்படுத்தும் வேலையைத் தான் பொறுப்பு எடுக்கிறார் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கருத்து முன்வைத்துள்ளார்.

தற்போது அமைச்சரவையில் காங்கேசன்துறை – காரைக்கால் கப்பல் சேவையை ஆரம்பிப்பது பற்றி பரிசீலிக்க கொள்கை அளவில் இணக்கம் கிட்டியுள்ளது. மன்னார் – ராமேஸ்வரம் சேவை பின்னர் ஆராயப்படும் என்று கூறப்பட்டுள்ளது. இவற்றால் கொழும்பின் மூலம் அன்றில், படகுகளில் சட்டத்திற்குப் புறம்பாக வெளியேறவேண்டும் என்ற நிர்ப்பந்தங்கள் ஓரளவு மாறி, தமிழ் மக்கள் தங்களது பகுதிகளில் இருந்து இந்த வழிகளால் தமிழ்நாடு மூலமாக சர்வதேசத்தை அடையலாம் என்ற பாதைகளும் பிறக்கக்கூடும்.

காரைக்காலில் கப்பல்கள் தரித்து செல்லக்கூடிய வசதியான பெரிய துறைமுகம் உண்டு. அங்குள்ள ஏற்பாடுகள் தற்சமயம் ராமேஸ்வரத்தில் இல்லை. அதேபோன்று வசதிகள் இங்கு இலங்கைப் பக்கத்தில் காங்கேசனில் இருக்கின்றனவா என்பது ஆராயப்பட வேண்டும்.

ஆனால் காரைக்கால் துறைமுகத்தை அபிவிருத்தி செய்த மார்க் என்ற தனியார் நிறுவனம் 2,400 கோடி ரூபா கடன் கட்ட முடியாமல் வங்குரோத்தானது. ஈடேல்வெயிஸ் (Edelweiss) என்கின்ற நிறுவனத்துக்கு மார்க் கம்பெனியில் 11 வீத பங்கும் அவர்கள் மேலும் கடனாக அளித்த 2059 கோடி ரூபா பணமும் நிலுவையில் இருந்தன. இதனை ஈடேல்வெயிஸ் நிறுவனம் ஓம்கார என்ற இன்னுமொரு நிறுவனத்திற்கு விற்றது. ஆகவே ஓம்காரவிற்கு மார்க் கம்பெனியில் நடத்துகின்ற நிர்வாகிகளை நியமிக்கும் அதிகாரங்கள் இருந்தன. அப்படி நியமிக்கப்பட்டவர்களில் ஒருவர் அமீர் தேசாய். அவர் அதானி குழு மத்தின் முன்னாள் பிரதான கணக்காளரும் நிர்வாக இயக்குனரும் ஆவார். மற்றவர் சுரேந்தர் குமார் துற்றேஜா. இவர் பஞ்சாப்பின் இளைப்பாறிய ஐ.ஏ.எஸ். அதிகாரியும் அதானி விவசாய லொஜிஸ்டிக்கின் முன்னைய நிர்வாக இயக்குனரும் ஆவார்.

இவர்களின் நியமனங்களால் அதானியின் துறைமுகங்களும் பிரத்தியேக வர்த்தக வலயங்கள் என்ற அமைப்பால் காரைக்கால் துறைமுகம் பொறுப்பேற்கப்படும் எனக் கருதப்படுகிறது.

இந்திய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட 35 வருடங்களின் பின் அதன் இணக்கங்களுக்கு அமைவாக திருகோணமலை எண்ணைக் குதங்களை ஶ்ரீலங்காவிடமிருந்து முறையான ஆவணங்களில் இந்தியத் தரப்புப் பொறுப்பேற்றுள்ளது. சம்பூரில் அனல் மின் நிலையத்தை நிர்வகிக்க ஒப்பந்தம் ஏற்படுத்தப்படுகிறது. மன்னார், யாழ்ப்பாணம், காரைக்கால், பலாலி, காங்கேசன்துறை என அதானி பொருளாதார வளர்ச்சித் திட்டங்களின் கீழ் கொண்டு வரப்படுகின்றன.



ஓர் உருத்திராட்சமாலையின் காய்களாக இவற்றைப் பார்க்கலாம். அந்த காய்களில் ஒன்றுதான் தமிழ் மக்களுக்கு என்று தமிழ்நாடு முதல்வரால் அறிவிக்கப்பட்ட உதவிகளும் கூட.

ஐரோப்பிய நாடுகள், முக்கியமாகப் பிரித்தானிய, கிழக்கிந்தியப் பரப்புகளைக் கையகப்படுத்தி காலனித்துவ முறையின் கீழ் கொண்டு வரும் போது இப்படியான கம்பெனி உத்திகளைத்தான் பாவித்தார்கள். கிழக்கிந்திய கம்பெனி என்பதே தொடக்கத்தில் கறுவா, கராம்பு, ஏலம் போன்ற ஏற்றுமதிப் பொருள்களில் ஈடுபட்ட கம்பெனி. பின்னர் ஆளும் வர்க்கக் குழுக்களிடையே ஆதரவாளர்களாக மாறி, அதன் பின்பு நாடு முழுவதையுமே ஆளும் அதிகாரத்துக்குள் கொண்டு வந்தார்கள். இதே உத்திகளை, மோடி தனது வியாபார நண்பர்களுக்கும் தமது நாட்டிற்கும், நெல்லுக்குப் பாயும் நீர் அதனருகே புல்லுக்கும் பாயும் எனத் தமிழ் பகுதிகளை வளம் படுத்தும் என காட்டுகிறார்.

தமிழ் மக்களைச் சுற்றி நடக்கின்ற எல்லாவற்றையுமே அவர்களால் மாற்றி அமைக்க முடியாது. ஆனால் அவற்றை எப்படி எதிர்கொள்வது என்பதை அவர்கள் தீர்மானிக்கலாம். ஆனால் அப்படியான ஒருமித்த நிலை அவர்களின் அரசியல் வாதிகளிடையேயோ கட்டமைப்புகளிடையேயோ இருப்பதாகத் தெரியவில்லை.

சர்வதேசத்துடன் இணைந்து மஹிந்தவைப் பதவியில் இருந்து அகற்றி, மைத்திரியை ஜனாதிபதியாக்கிய அந்த அரசில் ரணில் பிரதமராகி, பின்னர் அவர்களது சர்ச்சையில் ரணில் அரசை காப்பாற்றும் முனைப்பிலேயே கூட்டமைப்பினர் உழன்றனர். இந்த காலங்களில் ஜனாதிபதியின் அதிகாரங்கள் 19ஆம் திருத்தத்தால் குறைக்கப்பட்டிருந்தது. அவற்றைப் பாவித்து மந்திரி சபையின் தீர்மானத்தால், ஜனாதிபதி மூலம் மாகாணசபை அதிகாரங்களை நேரடியாக அவர்களது நடைமுறைக்குப் பெற்றுக் கொள்ள அக்கறை கொள்ளவில்லை.

ஆனால், புதிய அரசமைப்பை சமஷ்டி போன்ற தோற்றத்தில் தருவோம் எனப் பேசிக்கொண்டே இருந்தார்கள். கடைசியில் அதுவும் நடக்கவில்லை.

மஹிந்த வந்து, பின் கோட்டாவைப் பதவிக்குக் கொண்டு வந்து, அவர்கள் நாட்டை நிர்வகித்த சீர்கேட்டில் பொருளாதார சிக்கலில் மாட்டிக்கொண்டு நாடு திணறுகிறது. காலிமுகத்திடல் போராட்டம் எழுந்தது. மஹிந்த பதவியிலிருந்து விலகினார். இவை எல்லாவற்றையும் கூட்டமைப்பினர் ஆதரித்தனர். எதிர்க்கட்சிகளுடன் சேர்ந்து சஜித்தைப் பிரதமராக்கி அரசமைக்க எதிர்பார்த்தார்கள். ஆனால் சுழியோடி ரணில் பிரதமராகியமை அவர்களுக்கு எரிச்சலை ஊட்டியது. பழையபடியும் நாடாளுமன்ற ஆட்சியும் மொட்டு கட்சியின் கட்டுப்பாட்டிலேயே இயங்குகிறது என்பது வெளிப்படை.

'கோட்டா கோ கம' போராட்டங்களின் பின் நான்கு ஆட்சிகள் அமைக்கப்பட்டாயிற்று. ஆனால் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வுகள் வரும் என்ற நம்பிக்கை குறைந்து கொண்டே போகின்றன. சிங்களத்தின் ஒரு பேரினவாத தலைவர் சம்பிக்க, தமிழ்க் கூட்டமைப்பில் சில நல்லவர்கள் உள்ளார்கள், இவர்களும் எங்களோடு சேர்ந்து நாட்டைப் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்கக் கைகோர்த்து வர வேண்டும் என்று அறைகூவல் விடுக்கிறார். அப்படியானால் கூட்டமைப்பில் பேரினவாதத்திற்குப் பிடிக்காதவர்கள் யார்? நல்லவர்களைக் கூட அவர்கள் யாரென்று பேசவில்லை. பழையபடி பிரித்தாளும் சூட்சுமங்களே நடக்கின்றன. மஹிந்தவும் பஸிலும் இருபத்தியோராம் திருத்தம் தற்போது அவசரம் இல்லை என்கிறார்கள்.

ஒரு தரப்பு தேர்தல் வேண்டும் என்கிறார்கள். கூட்டமைப்பின் சம்பந்தன் உள்நாட்டு, வெளிநாட்டு ஊடகங்களுக்குத் தந்த செவ்வியில் ஆட்சி மாற்றம் மிக அவசியம், உடனே வரவேண்டுமென்று தெரிவிக்கிறார். எந்த ஆட்சியை மாற்றி, எந்த அரசைக் கொண்டுவந்து, என்ன அரசியல் தீர்வை அவர்களுடன் சம்பந்தன் நிறுவப் போகிறார் – எத்தனையோ தீபாவளிளும் பொங்கல்களும் வந்து போய்விட்டன தமிழ் மக்களுக்கு தீர்வு தர.

ஆனால் தமிழர்களைப் பொறுத்தவரை அவர்கள் தங்களது இருப்பையும் இருப்பவற்றையும் காப்பாற்றிக் கொள்ள வேண்டிய நிலையிலேயே இருக்கிறார்கள்.

(வளரும்)

## பொருளாதார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தவறுதலான நடைமுறைகளே காரணம். இதற்கு அவர் மன்னிப்பு கேட்டாலும் மீண்டும் பொருளாதாரத்தை வழமை நிலைக்குக் கொண்டுவர முடியாது – என புளொட் அமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் கிழக்கு ஊடக மன்றத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தப் பொருளாதாரப் பிரச்சினை நிவர்த்தியடைவதற்கு மிக நீண்டகாலம் எடுக்கப்போகிறது. நாம் அல்ல பிரதமர் அவர்களே இதைச் சொல்லுகின்றார். மிக அண்மையில் இன்னும் பெரிய நெருக்கடி வரப்போகிறது. பெற்றோல் மாத்திரமல்ல, உணவுப் பொருள்கள் தட்டுப்பாடு ஏற்படப் போகிறது. அதை அவர் சொல்லத் தேவையில்லை. நாங்கள் எல்லோரும் நேரடியாகவே பார்க்கின்றோம். இது நிவர்த்தியாவதற்கு மிக நீண்டகாலம் எடுக்கப் போகின்றது.

நாம் அனைவரும் பஞ்சத்தை நோக்கிப் போய்க்கொண்டிருக்கின்றோம். பொது மக்களைப் பொறுத்தமட்டில் வட கிழக்கில் இந்தப் பஞ்சத்தைக் குறைக்க வேண்டும் என்பதற்காக எங்களுடைய கட்சி ஊடாக, அங்கத்தவர்கள் ஊடாக, உதவ முடியுமா என்று பார்க்கின்றோம்.

வீட்டுத் தோட்டங்கள், சிறு தோட்டங்கள், செய்வதற்கு புலம்பெயர் தோழர்கள் உதவுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். பெரியளவில் செய்யமுடியாது. அரசாங்கம் இதனை செய்யவேண்டும். நாடாளுமன்றத்தினைப் பொறுத்தவரையில் நாங்கள் சொல்ல முடியும். அதனை செயற்படுத்துகின்ற நிலைமை ஜனாதிபதியிடமும், பிரதமரிடமும், அரசாங்கத்திடமுமே தான் இருக்கின்றது.

ரணிலுக்கும் மஹிந்தவுக்கும் நெருங்கிய உறவு இருக்கின்றது. நட்பு இருக்கிறது. அதில் மாற்றுக் கருத்துக் கிடையாது. ஆரம்பத்தில் தான் பதவியை ஏற்க மாட்டேன் என்று ரணில் சொல்லியிருந்தார். ஆனால், அவரால் சில விடயங்களைச் செய்யக் கூடியதாக இருக்கும் என்று நம்புகிறேன்.

இதுவரை நடைபெற்ற செயற்பாடுகள் நம்பிக்கை தரக்கூடியனவாக இல்லை. ஆனால் இந்தியா யார் பிரதமராக இருந்தாலும் உதவிகளைச் செய்திருப்பார்கள். ஏனென்றால் அவர்கள் எங்களுக்கு நேரடியாகவே கூறியிருக்கிறார்கள். பக்கத்தில் இருக்கின்ற ஒரு நாட்டை, அயல் நாட்டை பட்டினியாக இருக்க விட முடியாது என்று சொன்னார்கள். நீங்கள் அதைச் செய்யுங்கள், கட்டாயம் செய்ய வேண்டும் என்றே நாங்களும் சொன்னோம். ஏனென்றால் நாடு முழுக்க சம்பந்தப்பட்ட பிரச்சினை என்ற வகையில் பொறுத்திருப்போம். ஆனால் நீண்ட காலமில்லை. மக்கள் பட்டினிச் சாவை அடைவதற்கு முன்னர் ஏதாவது செய்கிறார்களா என்று பார்ப்போம்.

புலம்பெயர் சமூகத்தால் தற்போது நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற பொருளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுக்க முடியும் என்று நான் நம்பவில்லை. விரும்புவார்கள் என்றும் நான் நம்பவில்லை. இவ்வளவு பிரச்சினைகள் ஏற்பட்ட பின்னரும் இன்னும் அரசு திருந்தவில்லை. இந்த குருந்தூர்மலைப் பிரச்சினையைப் பார்த்தால் தெரியும். இப்பொழுதும் காணிகளை அளப்பதற்கு முயற்சிக்கிறார்கள்.

சர்வகட்சி மகாநாட்டில் கூட இந்த குருந்தூர்மலைப் பிரச்சினையை ஜனாதிபதியிடம் சொன்னபோது அதனைப்பற்றித் தெரியாது என்று சொன்னார். அது நடந்து கொண்டுதான் இருக்கிறது. நான் நாடாளுமன்றத்திலும் நீங்கள் திருந்தவில்லை என்று நேரடியாகச் சொன்னேன். ஆகவே புலம்பெயர் தமிழர்கள் எந்தவிதத்திலும் இதற்கு முன்வர மாட்டார்கள்.

தமிழ் மக்களுக்கு நியாயமான தீர்வு கிடைக்கின்றபோது, அவர்களும் இதில் பங்குதாரர்களாக இங்கே வந்து அவர்களுடைய முதலீடுகளைச் செய்வதென்றால் அதற்கு உத்தரவாதம் வேண்டும். நான் கடந்த காலங்களில் பார்த்திருக்கின்றேன். அவர்கள் இங்கு முதலீடு செய்ய வந்தால் அதிகாரிகள் புத்திமதி சொல்லியிருக்கிறார்கள், இங்கு வேண்டாம் தெற்கிலே செய்யுங்கள் என்று. அப்படியிருக்கையில் நாங்கள் கேட்கவும் முடியாது. வரவும் மாட்டார்கள்.

எங்களைப் பொறுத்தவரையில் எங்களுடைய தோழர்கள் தங்களால் இயன்றவரை சில சில உதவிகளை செய்வதற்கு முன்வந்திருக்கிறார்கள். மிகவும் பின்தங்கிய பிரதேசங்களில் செய்து கொண்டிருக்கின்றோம். தனியொரு கட்சியாகவோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகவோ செய்யமுடியாது.

21ஆவது திருத்தச்சட்டம் சரியான வரைவு வரவில்லை. எந்தவொரு வரைவும் சமர்ப்பிக்கப்படவுமில்லை. அப்படியிருக்கையில் நாங்கள் அதனைப் பார்க்காமல் ஆதரிக்கிறோம், ஆதரிக்கவில்லையென்று சொல்வது சரியுமில்லை. ஆனால் ஒன்று. ஜனாதிபதியினுடைய அதிகாரம் நீக்கப்பட்டால், அதிலிருந்து வரக்கூடிய ஆளுநருக்கான அதிகாரம் நீக்கப்பட்டு, முதலமைச்சர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும். முதலமைச்சர் வருகிறாரோ அன்று பார்த்துக் கொள்வோம். இப்படியான சில விடயங்களை நாங்கள் வலியுறுத்துவோம்.

ஏனென்றால், முழுமையான ஒரு அரசமைப்பு மாற்றம் வரப்போவதில்லை. ஆகவே அதில் போயிருந்து கொண்டு நாங்கள் சமஷ்டி அமைப்பது பற்றியெல்லாம் பேசமுடியாது. எது கிடைக்கிறதோ அதை எடுக்க வேண்டும். சரியான முறையில் எடுக்கவேண்டும் என்பதுதான் எங்களது அபிப்பிராயம். அதற்கான சந்தர்ப்பம் ஏற்படப்போவதில்லை. அவர்கள் நினைக்கிறார்கள் போராட்டக்காரர்களை திருப்திப்படுத்தலாமென்று. அது கூட நடைபெறப்போவதில்லை. அரசியல் ரீதியான பிரச்சினை இறுகிக் கொண்டே செல்லும்.

கோட்டபாயவினுடைய பிழையால் நடைபெற்ற விடயங்களுக்கு நாங்கள் ஏன் தலையில் தூக்கி வைக்கவேண்டுமென் என்ற எண்ணப்பாட்டிலேயேதான் எல்லோரும் மறுத்துக் கொண்டிருந்தார்கள். ஆகவேதான் சர்வகட்சி அரசாங்கம் ஒன்று வரமுடியாமல் இருந்ததற்குக் காரணம் நாங்கள் ஒரு கூட்டமைப்பாக அதில் பங்குபற்றுவதற்குத் தயாராக இருக்கவில்லை. உண்மையாகவே நாடு முழுவதும் செய்யவேண்டும் என்ற அபிப்பிராயம் வந்தால் அது வேறு விடயம்.

எங்களைப் பொறுத்தமட்டில் எங்களுடைய பிரச்சினைகளை அவர்கள் தொடர்ந்தும் செய்து கொண்டு போகின்றார்கள். எங்களுடைய மக்களுக்கு எதிரான விடயங்களை அவர்கள் செய்து கொண்டு போகின்றார்கள். சர்வகட்சி அரசு வந்திருந்தாலும் அதனையே செய்திருப்பார்கள். – என்றார்

## பொலிஸாரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீடொன்றில் போதைப்பொருள் கடத்தல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து நேற்று மாலை பொலிஸ் அதிகாரிகள் குழுவினால் இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது அங்கிருந்த சந்தேகநபர் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் கைத்துப்பாக்கியை பறிக்க முயற்சித்துள்ளார் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

உயிரிழந்தவர் மொரவக்க பிரதேசத்தை சேர்ந்த 30 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்தில் இருந்த மேலும் மூன்று சந்தேகநபர்கள் தப்பிச் சென்றுள்ளனர். அவர்களைக் கைது செய்வதற்கான விசாரணைகளை நெலுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

துப்பாக்கிச் சூடு சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்தத் தென் மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபரின் பணிப்புரையின் பேரில் காலி பிரதேசத்தில் பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

# புத்தளம் விபத்தில் தந்தை,மகன் சாவு

புத்தளம் – கொழும்பு பிரதான வீதியின் நீர்கொழும்பு பெரியமுல்ல பகுதியில் நேற்று முன்தினம் நள்ளிரவு இடம்பெற்ற வீதிவிபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் உயிரிழந்துள்ளனர்.

புத்தளம் நூர்நகர் பகுதியைச் சேர்ந்த 57 வயதான முஹம்மது சமூன் மற்றும் அவரது 12 வயதான மகன் முஹம்மது ஹமாஸ் ஆகிய இருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

புத்தளத்திலிருந்து கொழும்பை நோக்கிச் சென்ற ஓட்டோ ஒன்றும், கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த தனியார் பயணிகள் சேவை பஸ் ஒன்றும் மோதியதில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஓட்டோவைச் செலுத்திச் சென்ற தந்தையும், பின்னால் இருந்து பயணம் செய்த 12 வயதுடைய மகனும் படுகாயமடைந்த நிலையில், அங்கிருந்தவர்களால் நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதிலும். ஓட்டோவைச் செலுத்திச் சென்ற நபர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், ஓட்டோவின் பின்னால் இருந்து பயணம் செய்த 12 வயதான சிறுவன் ஆபத்தான நிலையில் நீர்கொழும்பு வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட போதிலும், நேற்றுக் காலை அந்தச் சிறுவனும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளான்.

உயிரிழந்த தந்தை மற்றும் மகன் ஆகியோரது ஜனாஸா பிரேத பரிசோதனைக்காக நீர்கொழும்பு வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன. பிரேத பரிசோதனையின் பின்னர் ஜனாஸாக்கள் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும் எனக் கூறப்பட்டது.

இந்த விபத்தில் ஓட்டோவின் முன் பக்கம் முழுமையாக சேதமடைந்துள்ளது.

விபத்துடன் தொடர்புடைய தனியார் பஸ்ஸின் சாரதி, விபத்தை ஏற்படுத்திவிட்டு அவ்விடத்தில் இருந்து தப்பிச் சென்று பொலிஸில் சரணடைந்த நிலையில் அவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

விபத்துச் சம்பவம் தொடர்பில் நீர்கொழும்பு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

விற்பனை செய்யும் நோக்கில் ஒரு தொகை மரவள்ளிக் கிழங்குகளை ஏற்றிக்கொண்டு புத்தளத்திலிருந்து கொழும்புக்குச் சென்ற போதே இருவரும் இந்த அனர்த்தத்திற்கு முகம் கொடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## மாகாண, வலய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நகரங்களில் உள்ள பாடசாலைகள் என்பவற்றின் நடவடிக்கைகளை அடுத்த வாரம் நடத்தாதிருக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

பிரதான நகரங்கள் இல்லாத பகுதிகளில் உள்ள பாடசாலைகள் தொடர்பில் பொருத்தமான நடவடிக்கைகளை முன்னெடுத்து செல்வதற்கு மேல் மாகாணம் உட்பட சகல மாகாணங்களிலும் உள்ள கல்வி அதிகாரிகளுக்கு அனுமதி வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

போக்குவரத்து சிரமங்கள் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களை பாதிக்காத நிலையில் பிரதேச மட்டத்தில் குறைந்த எண்ணிக்கையிலான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளை ஆரம்பித்து பராமரிக்க மாகாண கல்வி அதிகாரிகளுக்கு அனுமதி வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும், பாடசாலைக்குச் செல்ல முடியாத மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு, அதிபர்கள் வலயக் கல்விப் பணிப்பாளருடன் கலந்தாலோசித்து, அந்த நிலையிலும் பாடசாலையை பராமரிக்க முடியுமாயின் உரிய நடவடிக்கை எடுக்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

மாகாண வலய மற்றும் பிரதேச கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் அதிபர்கள் தொடர்பில் மாகாணக் கல்விப் பணிப்பாளர்களால் எடுக்கப்பட்ட கருத்துக்கள் இந்தத் தீர்மானங்களை மேற்கொள்ளும் போது கவனத்தில் கொள்ளப்பட்டன என அமைச்சுத் தெரிவித்துள்ளது.

## 5 வெளிநாட்டுத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாவத்தை பிரதேசத்தில் உள்ள இரண்டு மாடி வீடொன்றில் இருந்து இந்தத் துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

போரா 12 ரக துப்பாக்கிகள் – 2, அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி – ஒன்று மற்றும் செக்கோஸ்லோவாக்கியா மற்றும் ஜேர்மனியில் தயாரிக்கப்பட்ட 07 தோட்டாக்கள் அடங்கிய மகசினுடனான ரைபிள் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்தத் துப்பாக்கிகளுடன் கரிம உர வியாபாரத்தை நடத்தி வந்த 59 வயதுடைய நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் எதற்காக துப்பாக்கிகளை மறைத்து வைத்தார் என்பது குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

சந்தேக நபர் வத்தளை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட விருந்தார்.

## பொதுமக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்திற்கு நூல்களை கொண்டு வந்திருக்கின்றோம்.

நாட்டை ஆட்சி செய்த மோசமான ஆட்சியாளர்களின் செயற்பாடுகள் காரணமாகவும் தவறான வழிநடத்தல் காரணமாகவும் எமது நாட்டிற்கு இந்த நிலைமை ஏற்பட்டது.

தவறான ஆட்சியால் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. பாடசாலை மாணவர்களும் பல்கலைக்கழக மாணவர்களும் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையில் இரண்டு வருடங்களாகப் பாடசாலை மாணவர்கள் கல்வி கற்க முடியாத நிலைமை காணப்படுகிறது.

எமது கோட்டா கோ கம நூலகத்திற்கு கிடைத்த நூல்களை நாம் நாடளாவிய ரீதியில் கஷ்டப்படுகிற மாணவர்களுக்கு வழங்குவதற்குத் தீர்மானித்தோம். அந்த வகையில் மஹிந்த ராஜபக்ஷவின் வீட்டுக்கு அருகில் உள்ள மிகவும் கஷ்டப்பட்ட ஒரு பகுதியில் ஒரு நூல்களை வழங்கினோம். இரண்டாவதாக நாம் யாழ்ப்பாணத்துக்கு வந்திருக்கின்றோம்

யாழ்ப்பாணப் பொதுசன நூலகம் எரிக்கப்பட்டதை ஏற்றுக்கொள்ள முடியாது. அப்பொழுது நாம் பிறக்கவும் இல்லை. எங்கள் கண்முன்னே நாங்கள் அமைத்த போராட்ட களத்தை நெருப்பில் எரித்தார்கள். அதனை நாம் பார்த்துக் கொண்டிருந்தோம்.

எமது கோட்டா கோ கம நூலகம் எரிக்கப்படுமோ என அஞ்சியிருந்தோம். நூலகத்தை எரிப்பது என்பது சமூகத்தினை வீழ்த்துவதற்கு முக்கியமானதாகும்.

அந்த வகையில் யாழ் பொதுசன நூலகத்திற்கும் யாழ்ப்பாண பல்கலைக்கழக நூலகத்திற்கும் கிளிநொச்சியில் இருக்கின்ற மாணவர்களுக்கும் நூல்களை வழங்கவிருக்கிறோம். அத்துடன் காலிமுகத்திடல் கோட்டா கோ கமவில் இணைய வழியிலான பாடசாலை ஒன்றை ஆரம்பிக்க விருக்கின்றோம். – என்றனர்.

## ‘கோட்டா கோ கம’...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நூலகத்துக்கு மதியம் ஒரு மணியளவில் வந்த ‘கோட்டா கோ கம’ போராட்டக் குழுவினர் ஒரு தொகுதி நூல்களை யாழ்ப்பாண பொதுசன நூலக நிர்வாகத்தினரிடம் கையளித்தனர்.

அத்துடன் யாழ் பொதுசன நூலகம் எரிக்கப்பட்டமையை நினைவு கூரும் வகையில் நூலக வாயிலில் மெழுகுவர்த்தி ஏந்தி நினைவு கூரலில் ஈடுபட்டனர்.

‘கோட்டா கோ கம’ போராட்டக்குழுவினர் யாழ் பொதுசன நூலகத்திற்கும், மேலும் யாழ்ப்பாண பல்கலைக்கழக நூலகத்திற்கும், கிளிநொச்சியில் இருக்கின்ற மாணவர்களுக்கும் நூல்களை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.